# இந்துதர்மம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# இந்துதர்மம்

## ஆத்மீக சஞ்சிகை

வியனுல கனைத்தையும் அமுதென நுகரும்
வேத வாழ்வினைக் கைப் பிடித்தோம்.

மலர் 3 2002 தை - சித்திரை

வெளியீடு :-
இந்துசமயப் பேரவை - யாழ்ப்பாணம்
இந்துசமயப் பேரவைத் தலைமைக் காரியாலயம்
144, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

## பொருளடக்கம்

| | பக்கம் |
|---|---|
| நுழைவாயில் | 1 |
| வாழ்த்துச் செய்தி | |
| இந்துகலாசார அமைச்சர் | 3 |
| அருட்கவி சீ.விநாசித்தம்பி | 4 |
| நல்லை ஆதீன முதல்வர் | 5 |
| பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை | 6 |
| திருக்குறளில் சைவம் | 7 |
| சிவகலாபூஷண விருது | 13 |
| தந்தைக்கு ஞானோபதேசம் செய்த தனயன் | 24 |
| குமாரதந்திரம் கூறும் சுப்ரம்மண்யரின் மூர்த்தி பேதங்கள் | 28 |
| நீத்தார் அஞ்சலி | 33 |
| அமரர் மகாலிங்கம் - 60வது ஜெயந்தி தினம் | 34 |
| பசுதர்மம் | 37 |
| ஈசன் உவக்கும் இன்மலர்கள் | 43 |
| இந்துசமயமும் நாவலரும் | 48 |
| திருமுறை | 54 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

T/200/0793.

# நுழைவாயில்

*சித்திரபானு புதுவருடம் புதிய நம்பிக்கையை ஊட்டுகின்றவகையில் மலர்ந்திருப்பது இலங்கையில் உள்ள அனைத்து மக்களுக்கும் மகிழ்ச்சி தரும் ஒரு செய்தியாகும். நீண்ட காலப் போர்மேகங்கள் கலைந்து சமாதானம், சுபீட்சம் எனும் இலக்குகளை நாடுகின்ற வகையில் இருதரப்பினரும் பரஸ்பர நம்பிக்கை கொண்டு செயல்படுவதனை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இம்முயற்சி இனிதே வெற்றிபெற எல்லாம் வல்ல பரமேஸ்வரனின் பாதார விந்தங்களை முதல் பணிந்து நிற்கின்றோம்.*

*பல வருடங்களாக எண்ணற்ற இன்னல்களுக்கு உட்பட்டு அகதி களாகவும் அனாதரவானவர்களாகவும் ஆக்கப்பட்ட எம்மினத்தினர் தாம் கொண்ட நம்பிக்கை வீண் போகாதென்ற வகையில் விடிவினை நோக்கி நகர்கின்றவர்களாக இன்று விளங்குகின்றனர். எனினும் போர்க்காலச் சூழலைப் பயன்படுத்தி மக்களின் சமய, சமூக, கலாசார வாழ்வுகளில் தமது குறுகிய நோக்கங்களுக்காகத் திசை திரும்புகின்ற செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களும் இல்லாமல் இல்லை. இந்நிலையிலேயே இந்து சமயநெறியின் காத்திரத் தன்மையை எம்மக்களிடையே எடுத்துக்கூறி, விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டியது இந்துக்களினதும் இந்து நிறுவனங்களினதும் தலையாய கடமையாகும். இக்கடமையை நன்குணர்ந்து செயற்படும் இந்துசமயப் பேரவை யானது மே திங்களில் மூன்றுநாள் சைவ மகாநாடொன்றினை நடாத்துகின்றமை போற்றி வரவேற்கத்தக்க தொன்றாகும்.*

*இம் மகாநாட்டில் பங்குபற்றும் பொருட்டு சென்னைப் பல்கலைக் கழகத்துத் தத்துவத்துறைத் தலைவர் பேராசிரியர் இரா.கோபாலகிருஷ் ணனும் இலயோலாக்கல்லூரி, சென்னை, தமிழ்த்துறைப் பேராசிரியர் அருணை பாலறாவாயன் அவர்களும் வருகை தருவது இம்மகாநாட்டினைச் செழுமைப் படுத்துவதாக அமைகின்றது. இம்மகாநாட்டில் சமூகவிசார அரங்கு, சைவ சித்தாந்த அரங்கு, திருமுறையரங்கு, நல்நெறியரங்கு, நிறைவரங்கு எனப் பலவரங்குகளாகப் பல்வகைப் பரிமாணங்களில் காத்திரமான அறிஞர் பெருமக்களின் சிந்தனைகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. கொழும்பு இராம கிருஷ்ணமிஷன் சுவாமி ஆத்மகனாநந்தா அவர்களும் வருகை தந்து சிறப்பிப் பதுடன் ஓர் அரங்கிற்குத் தலைமை வகிக்கவுள்ளார். மேலும் குடாநாட்டில் விளங்கும் அறிஞர் பெருமக்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். இம் மகாநாடு காலத்தின் தேவையாக விளங்குவதுடன் அனைத்து இந்துக்களின் ஆதரவுடன் அமையவிருப்பது குறிப்பிடத்தக்கது.*

*சைவ மகாநாட்டிற்கு முன்னோடியாக இந்து சமயப் பேரவையினர் சைவாலயக் கிரியைகளும் ஆலய பரிபாலனமும் பற்றி ஒரு கருத்தரங்கினை நாடாத்தியுள்ளமை காணலாம். பல்துறை சார்ந்த அறிஞர்கள், சிவாசா* யார்கள், குருமார்கள், சைவாலயக் கிரியைகள், ஆலய பரிபாலனம் தொடா*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாக இன்று மக்களிடையே எழும் ஐயங்களைத் தீர்க்கும் வகையில் கருத்துரைகளினை வழங்கியமை குறிப்பிடத்தக்கதாகும். ஆலயபரிபாலனம் தொடர்பாகக் கடந்த காலங்களில் அநேக வழக்குகள், நீதிமன்றங்கள் வரை சென்றுள்ளமை துரதிஸ்டவசமான ஒன்றே. இப் போக்கினை மாற்றும் வகையில் இந்து சமயப் பேரவையினர் ஒரு மாற்றுவழியினை அனைவரது அனுசரணையுடன் முன்னெடுத்துச் செல்ல முற்பட்டுள்ளமை சைவம்கூறும் அனைத்து மக்களாலும் வரவேற்கப்பட வேண்டிய தொன்றாகும். இந்துசமயப் பேரவையின் இம் முயற்சிக்கு இந்துதர்மமும் தன் நல்லாசிகளை வழங்குவதில் மகிழ்வடைகின்றது.

சைவச் சிறுவர்களைப் பராமரிப்பதுடன் இந்துக்கள் எதிர்நோக்கும் பல்வகைச் சவால்களையும் எதிர்கொண்டு செயற்படும் இந்துசமயப் பேரவையானது, இதுவரை காலமும் நிரந்தரமான ஒரு இடத்தினைக் கொண்டிருக்கவில்லை. சித்திரபானு புதுவருடத்தில் தமது பணிகளைப் பன்முகப்படுத்திப் பணியாற்றும் பொருட்டு கந்தர்மடம், பலாலி வீதியில் தமது தலைமைச் செயலகத்தை அமைக்க உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இவர்கள் பணி மேன்மேலும் வளர்ந்தோங்குக.

1998ல் பதினொரு கலைஞர்கள், அறிஞர்களைக் கௌரவித்த இந்துசமயப் பேரவையினர் மூன்று வருடங்களின் பின்னர் சித்திரபானு வருடத்தில் மேலும் பத்துக் கலைஞர், அறிஞர்களை இனங்கண்டு **"சிவகலாபூஷணம்"** எனும் விருதினை வழங்கிக் கௌரவிக்க உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். எமது பிரதேசத்தில் அர்ப்பணிப்புடன் பல்துறைகளில் தங்களின் திறமையினை முத்திரை பதித்தவகையில் அமைய, அவர்களைக் கௌரவித்து ஊக்குவிக்கும் இந்துசமயப் பேரவையின் பணி வரவேற்கத்தக்கதாகும். எம்மவர்களின் திறமையை மதித்து, சிறப்புக்கு விருது வழங்குவது, இவ்வாறான திறமைகளை வளர்ப்பதற்கான ஊக்குவிப்பாகவும் அமையவல்லதாகும். இவ்வாறு கௌரவிக்கப்படுவோர் விபரங்கள் இவ் இந்துதர்மத்தில் இடம்பெறுகின்றன.

பசுவதைகளுக்கு எதிராகப் பல போராட்டங்களும், சிறுநூல் வெளியீடுகளும் எழுந்து ஓர் எழுச்சியை ஏற்படுத்தும் இக்காலகட்டத்தில் பசுதர்மம் எனும் கட்டுரை பசுவின் சிறப்பினை இம்மலரில் எடுத்துரைத்து நிற்கின்றது. இந்துக்களின் இறைவழிபாட்டில் மலர் வழிபாடானது முதன்மை பெறுகின்ற தொன்றாகும். மலர் வழிபாட்டின் சிறப்பினை எடுத்துரைக்கும் ஓர் ஆக்கமும் இத்தர்மத்தில் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. இவற்றைவிட முருகனின் சிறப்பினை உரைக்கும் கட்டுரை இரண்டும் இடம்பெற்றுள்ளன. நீத்தார் நினைவஞ்சலி, நாவலரும் இந்து சமயமும் ஆகியனவும் இதில் இடம் பெற்றுள்ளன.

**வாழ்க சைவம் ! வாழ்க வளமுடன் !!**

– ஆசிரியர் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

හින්දු ආගමික කටයුතු පිළිබඳ අමාත්‍ය
இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர்
MINISTER OF HINDU RELIGIOUS AFFAIRS

# வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணம் இந்துசமயப் பேரவை நடாத்தும் இந்து மாநாட்டை முன்னிட்டு வெளியிடும் இந்துதர்மம் சிறப்புமலரை மகிழ்ச்சியுடன் வாழ்த்துகிறேன்.

இந்துக்களின் சமய, சமூக மேம்பாட்டுக்காகப் பல்துறைப் பணிகளைக் கடினமான சூழ்நிலையிலும் மேற்கொண்டு வருவது பாராட்டுக்குரியது. சிறந்த பக்திமானும் சமயப் பெரியாருமாகிய அருட்கவி சீ.விநாசித்தம்பி அவர்களின் வழிகாட்டலில் ஆர்வம் மிக்க சைவ அபிமானிகள் இப்பேரவையை இயக்கி வருவது மகிழ்ச்சிக்குரியது.

இந்துமதமும், தமிழ்மொழியும் எமது இரு கண்கள். பல சோதனைகள் மத்தியில் இவ்விரு கண்களும் தனித்துவம் குன்றாது நிலைத்து வருவது இவற்றின் பெருமைக்குச் சான்றாகும். இன்றைய காலகட்டத்தில் எமது பண்பாட்டு விழுமியங்களைப் பேணுவதன் மூலம் இந்துக்களின் தனித்துவத்தை நிலை நிறுத்துவதற்கு இந்துசமயப் பேரவையின் செயற்பாடுகள் அமைவது அவசியம்.

இப்பேரவை ஆதரவற்ற குழந்தைகளுக்கும், பெற்றோரை இழந்து உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கும், நிர்க்கதியற்ற முதியோருக்கும் தொண்டு செய்வதில் ஈடுபட்டிருப்பது பெருமைக்குரிய விடயம். இந்நோக்கில், பேரவையின் பணிகள் விரிவுறுவதற்கு யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றேன்.

இந்து மாநாடு சிறப்புற அமையவும், பேரவையின் பல்துறைப் பணிகள் சிறந்து ஓங்கவும், எல்லாம்வல்ல பரம்பொருளைப் பிரார்த்தித்துக் கொண்டு எனது நல்வாழ்த்துக் களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தி.மகேஸ்வரன் பா.உ
அமைச்சர்
இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சு
இல.248 2/1, காலி வீதி
கொழும்பு – 04.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# இந்து சமயப் பேரவை
# INTHU SAMAYA PERAVAI
(THE HINDU CONGRESS)
-யாழ்ப்பாணம் - JAFFNA.

தலைமை அலுவலகம்: இல 375, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். Head Office: No.375, Temple Road, Nallur, Jaffna.
தற்காலிக முகவரி:- கைதடி, சைவச்சிறுவர் இல்லம், ஏழாலை மேற்கு, ஏழாலை.
Temporary Address, Kaithady Saiva Children`s Home, Erlalai West, Erlalai


காப்பாளர்கள் / Patrons:
**ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த**
**-பரமாசாரிய சுவாமிகள்**
**Srilasri Gnanasambantha**
**Paramacharya Swamikal**
*Nallai Aatheena Guru Maha Sannithanam*

மகாராஜஸ்ரீ
சு.து.ஷண்முகநாதக்குருக்கள்
**Maharjasri**
**S.D.SHanmuganatha Kurukkal**
*Mavai Aatheenakartha*

*சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை*
**கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி**
*Sivaththamil Selvi Pandithai*
**Dr. Thangammah Appakkuddi**
*President, Thurkai Ambal Thevasthana*
*Paripalana Sabai, Tellippalai*

*

தலைவர் / **President:**
அருட்கவி சீ.விநாசித்தம்பி
*Arudkavi S.Vinashithamby*

*

துணைத்தலைவர்கள்/Vice Presidents:
**திரு.து.வைத்திலிங்கம்**
Mr.T..Vaithylingam
**பேராசிரியர் சி.க.சிற்றம்பலம்**
Prof.S.K.Sittampalam
**திரு.க.இ.குமாரசுவாமி**
Mr.K.E.Kumarasuwamy

*

கௌரவ-செயலாளர் / Hon. Secretary:
**திரு.சி.சக்திகிரிவன்**
Mr.S.Sakthigirivan

*

உபசெயலாளர்கள்/Asst Secretaries:
**திரு.க.செ.துரைரத்தினம்**
Mr.K.S. Thurairatnam
**திரு.ஐ.சிவலோகநாதன்**
Mr.I.Sivaloganathan

*

பொருளாளர்/Treasurer:
**பேராசிரியர் நா. ஞானகுமாரன்**
Prof: N. Gnanakumaran.


## வாழ்த்துரை

"சைவசமயமே சமயம்" என்பது தாயுமானவர் வாக்கு. சிவசமயம் - சைவசமயம், ஆயினும் சைவத்துடன் தொடர்புடைய ஏனைய ஐந்து சமயங்களையும் சேர்த்து "இந்து சமயம்" எனப் பாரம்பரியமாக வழங்கி வருகின்றனர். மூலம் சிவம் ஒன்றுதான்.

சிவசமய நீதியில் - சைவநீதியில் - பங்கயத்து அயனும்மால் அறியா நீதியில் ஆன்மாக்கள் தோய்ந்து வாழ்ந்து - இறைவனடித் தாமரையைப் பற்ற வேண்டுமென வழிகாட்டுவதே சைவநெறி ஆகும்.

சைவநெறிகளைப் பல்வேறு கோணங்களில் விளக்கி வழிகாட்டுவதே இந்து தர்மம். இந்தத் தர்மத்தை சைவமக்கள் கடைப்பிடித்து நன்னெறி ஒழுக்க முள்ளவர்களாக வாழவேண்டும். வேதாகமங்கள், திருமுறைகள், புராண இதிகாசங்கள் யாவும் தர்மம் என்றால் என்ன என்பதை விளம்பரப்படுத்துகின்றன. இத்தகைய இந்துதர்மத்தை எடுத்துக் கூறுவது, இந்த - இந்துதர்மம். அனைவரும் இதனைப் படித்து "வண்ணப்பணித் தென்னை வா என்ற வான்கருணை" என்ற மணிவாசகர் வாக்குக்குத் தக்கதாக எம்மை ஆக்கிக் கொள்வோமாக.

**மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்**

அருட்கவி சீ. விநாசித்தம்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
குருபாதம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஸ்தாபகர்: **ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்**
குருமஹா சந்நிதானம் ஆதிமுதல்வர்

ஆதீன முதல்வர்: **ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்**
இரண்டாவது குருமஹா சந்நிதானம்

**தொலைபேசி:**

**நல்லூர், யாழ்ப்பாணம்,**
**இலங்கை.**

யாழ்ப்பாணம் இந்துசமயப் பேரவை எமது மக்களிடையே விழிப் புணர்ச்சியும் எழுச்சியும் பெறும் வகையில் சைவ மகாநாடு ஒன்றினை எதிர்வரும் மேமாதம் மூன்றாம், நான்காம், ஐந்தாம் திகதிகளில் நடாத்து வதற்குத் தீர்மானித்துள்ளமை சைவப் பெருமக்கள் அனைவருக்கும் மகிழ்ச்சி தருகின்ற செய்தியாகும். தொன்மையும் பெருமையும் கொண்ட எம்நெறியினை அனைவரும் உணர்ந்து உயர்வடைய இவ்வாறான மகாநாடுகள் வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை.

நெடுந்துன்பங்களுக்கு மத்தியிலும் அர்ப்பணிப்புடனும், தொண் டுள்ளத்துடனும் செயற்பட்ட துறைசார் அறிஞர்களையும், கலைஞர் களையும் இந்நேரத்தில் கௌரவிப்பது சாலப் பொருத்தமானதாகும். இரண்டாம் தடவையாக இந்துசமயப் பேரவையினர் நமது மண்ணில் வாழும் கலைஞர்களையும் அறிஞர்களையும் கௌரவித்து 'சிவகலா பூஷணம்' விருது வழங்கஇருக்கும் செயற்பாட்டினையும் மனதாரப் பாராட்டுகின்றோம். மகாநாடு சிறக்க எல்லாம்வல்ல ஸ்ரீ பார்வதி பரமேஸ் வரன் பாதங்களைப் பணிந்து எமது நல்லாசிகளை வழங்குகின்றேன்.

**ஓம் சாந்தி சாந்தி சாந்தி**

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

යාපනය විශ්වවිද්‍යාලය, ශ්‍රී ලංකාව.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
*UNIVERSITY OF JAFFNA.-SRI LANKA.*

**பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை**

துணைவேந்தர்

# வாழ்த்துச்செய்தி

இந்துசமயப் பேரவையின் சைவ மகாநாட்டினை ஒட்டி வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன். மூன்று நாட்கள் நடைபெற விருக்கும் இம்மகாநாடு இந்துசமய தத்துவ உண்மைகளையும், வாழ்வியல் கோலங்களையும் அனைவரும் உணர்ந்து கொள்வதற்கு வழி வகுக்கும் என நம்புகின்றேன். இந்தியாவிலிருந்தும் அறிஞர் பெருமக்கள் இம்மகாநாட்டிற் கலந்துகொண்டு உரையாற்ற உள்ளமை சமய, கலாசார, பண்பாட்டு ரீதியில் இந்தியாவிற்கும் எமது நாட்டிற்குமிடையிலுள்ள இறுக்கத்தினை உணர்த்துவதாக உள்ளது. இம்மகாநாடு சிறப்புற அமைய வாழ்த்துகின்றேன்.

பேராசிரியர்
பொ.பாலசுந்தரம்பிள்ளை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# திருக்குறளில் சைவம்

பேராசிரியர் அ.சண்முகதாஸ்



## 1. சைவமும் திருக்குறளும்

சைவசமயம் நீண்ட வரலாற்றை உடையது. சிந்துவெளி நாகரிக காலத்திலிருந்தே இச்சமயம் நிலவிவருவதுபற்றி வரலாற்றாசிரியர்கள் கூறியுள்ளனர். சைவ சமயத்தினுடைய அடிப்படைகளே சைவ சித்தாந்தமாக அமைந்துள்ளன.இச்சித்தாந்தம் சைவசமயத்தினுடைய சிறப்புக்கு அடிப்படையாகின்றது. சைவப் பெரியார் சு.சிவபாதசுந்தரம் ( Glories of Saivaism, 1954இல் தமிழ் மொழியாக்கம்; பேராசிரியர் இ.குமாரவடிவேல், இந்துசாதனம், 1999-2000)

*" ஒரு கடவுள் இருக்கிறார். பல ஆன்மாக்கள் இருக்கின்றன. இவற்றின் அறியுந் திறமை ஆணவத்தால் தடுக்கப்படுகின்றது. ஆன்மாக்கள் கன்மத்தைச் செய்து அதன் விளைவுகளை அனுபவித்தல்மூலம் இத்தடைகள் படிக்கிரமமாக அகற்றப் படுகின்றன. பிழையான செயல்களின் விளைவு துன்பம். சரியான செயல்களின் விளைவு இன்பம் என்பது கன்மவிதி. ஒவ்வொரு ஆன்மாவும், எதுவித விலக்குமின்றி இறுதியில் முத்தியை (பேரின்பத்தை) அடையும் "*

இந்த வகையில் சைவசமயம் எல்லா ஆன்மாக்களுக்கும் இறைநிலை அளிக்கும் சமயமாக விளங்குகின்றது. மற்றைய சமயங்களெல்லாம் முடிவடைகின்ற இடத்திலேதான் சைவசமயம் ஆரம்பிக்கின்றது என்று சைவப்பெரியார் சிவபாதசுந்தரம் கூறுவர். சைவ சமயத்தவன் ஒருவன் ஒழுக்க மேம்பாடுடைய, நியாயமான, நான்-எனது என்பன அற்ற, தெய்வ பக்தியுள்ள, சரியான செயல்களைச் செய்வதிலே கைதேர்ந்தவனாயிருக்க வேண்டும்.

எல்லா மனிதர்களையும் நல்லவர்களாகவே கருதுவது சைவசமயம். அது தெளிவானது, ஒளியானது, ஆன்மாக்களை மேலே உயர்த்துவது.

திருக்குறள் தமிழ்மொழியை, அம்மொழி பேசும் இனத்தவரை உலகத்துக்கு இட்டுச் செல்கிறது. " வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு " என்று பாரதி கூறுகிறான். தன்னை ஒருதமிழ் மாணவனாகக் கடைசிவரை எண்ணிய டாக்டர் ஜி.யு.போப் அவர்கள் முதன்முதலாகத் திருக்குறள் முழுவதையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து உலகுக்கு அறிமுகப்படுத்தினர். திருக்குறள் உலகப் பொதுநூலாக அமைகின்றது. இதனாலே உலகச் சமயங்கள் யாவும் தங்கள் கருத்துக்களை இந்நூல் பிரதிபலிக்கின்றது என்று கூறுகின்றன. ஜைன சமயத்தவராகிய பேராசிரியர் ஏ.சக்கரவர்த்தி திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். திருக்குறள் ஜைனசமய நூல் என்பதை அவர் தன்னுடைய முன்னுரையிலும் குறள்களுக்கு எழுதிய உரை விளக்கத்திலும் வலியுறுத்திச் சொல்கிறார்.

***" The first chapter in Tirukkural consists of some stanzas specially addressed to the Arhat Paramesti, and other stanzas addressed to Siddha Paramesti. Hence it is the workshop of both arhan an Siddhan. Arrhat is workshipped beacause of this merciful gift of Dharma to the people in the world. Siddha is workshipped beacause it represents the final spiritual perfection which is the goal of life. To the readers of the chapter in Tirukkural, this fact will be found evident "***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூறும் பேராசிரியர் சக்கரவர்த்தி ( Tirukkural, with English Translation and An Introduction, The Diocesan Press, Madras, 1953) *Hence, we have to infer from the internal evidence that the author must have een a staunch believer in the Ahimsa faith as accepted by Jainism* என்று முடிவு கொள்கிறார். இதேபோன்று இஸ்லாமிய, கிறிஸ்தவ, பௌத்த சமயங்களைச் சார்ந்தவர்களும் திருக்குறளுக்கு உரிமை கோரியுள்ளனர்.

இப்பின்னணியிலே திருக்குறளுக்கும் சைவத்துக்குமுள்ள தொடர்பினை நோக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## 2. சிவசமயம் அன்புச் சமயம்

சைவசமயம் சிவனை முழுமுதற்கடவுளாகக் கொண்ட சமயம். இதனைச் சிவசமயம் என்றும் கூறலாம் சிவம் என்றால் என்ன? திருமூலர் பின்வருமாறு கூறுகின்றார்.

" அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே. "

அன்புதான் சிவம் என்பதால் சிவசமயம் அன்புச் சமயம் எனப்படும். சைவநீதி என்பது அன்பினை அடிப்படையாகக் கொண்டது. இத்தகைய மேன்மைகொள் சைவநீதி உலகமெலாம் விளங்கினால் எவ்வளவு நன்றாயிருக்கும். இதனை நன்கு மனங்கொண்டு தான் கச்சியப்ப சிவாச்சாரியார்.

" வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க.
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம் "

என்று கூறுகிறார். மனிதனுக்கு வேண்டிய எல்லா விழுமியங்களுள்ளும் மிக உன்னதமான மேம்பாட்டு விழுமியம் அன்பாகும். சைவசமய அடியார்களுடைய வரலாறு இவ்விழுமியத் தினுடைய உயர்வைக் காட்டுகின்றது. திண்ணன் என்னும் ஒரு வேடன் இறைவனிடம் கொண்ட ஆராத அன்பு காரணமாக கண்ணப்ப நாயனாராக உயர்வுற்றதைப் பெரியபுராணம் எமக்கு எடுத்துக் கூறுகின்றது. திண்ணனும் நாணனும் காளத்திமலைக்குச் சென்ற நிகழ்ச்சி யினைப் பின்வருமாறு சேக்கிழார் கூறுகிறார்.

" முன்செய் தவத்தின் ஈட்டம் முடிவிலா இன்பமான
அன்பினை எடுத்துக் காட்ட அளவிலா ஆர்வம் பொங்கி
மன்பெருங் காதல்கூர வள்ளலார் மலையை நோக்கி
என்புநெக் குருகி உள்ளத் தெழுபெரு வேட்கையோடும். "

" நாணனும் அன்பும் முன்புநளிர்வரை ஏறத்தாமும்
பேணுதத்துவங்க ளென்னும் பெருகுசோ பானம் ஏறி
ஆணையாம் சிவத்தைச்சார அணைபவர் போல ஐயர்
நிணிலை மலையை ஏறி நேர்படச் செல்லும் போதில் "

" திங்கள்சேர் சடையார்தம்மைச் சென்றவர் காணாமுன்னே
அங்கணர் கருணை கூர்ந்து அருட்டிரு நோக்கம் எய்தத்
தங்கிய பலத்தின் முன்னைச் சார்புவிட் டகல நீங்கிப்
பொங்கிய ஒளியின் நீழன் பொருவில் அன்புருவும் ஆனார். "



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு காரணமாகத் திண்ணனுக்கு ஆர்வம் ஏற்படுகின்றது. அது காளத்தி அப்பனுடன் இணையும் அன்புருவத்தைத் திண்ணனுக்குக் கொடுக்கின்றது. இதுபோன்ற சைவசமய வரலாறுகள் சைவத்துக்கு அடிப்படையான அன்புபற்றிக் கூறுகின்றன.

வள்ளுவனுடைய திருக்குறளில் அன்புடைமை என்று ஒரு அதிகாரமே அமைந்துள்ளது. மேலும் பல இடங்களிலே அன்பின் சிறப்புக் கூறப்பட்டுள்ளது. சைவத்தின் உன்னத உட்கிடக்கை திருக்குறளிலே அருமையாக அமைந்து கிடக்கின்றது.

" அன்பீனும் ஆர்வம் உடைமை அது ஈனும்
நண்பு என்னும் நாடாச் சிறப்பு "

என்று வள்ளுவன் கூறும் குறள் கண்ணப்பநாயனாருடைய அன்பு வாழ்வினைப் புலப்படுத்துவதாயுள்ளது. திண்ணன் காளத்திமலையில் ஏறும்போது அவன் முன்னாலே அன்பு அம்மலையில் ஏறிச்செல்வதாக சேக்கிழார் கூறுகிறார். இந்த அன்பு திண்ணனாருக்கு மேலும் மேலும் ஆர்வத்தை ஊட்டுகின்றது. காளத்தியப்பனுடன் அவருக்கு நட்பினைக் கொடுக்கின்றது.

அந்த நட்புத்தான் உதிரம் வடியும் காளத்தியப்பனுடைய கண்ணுக்குத் தன்கண்ணைத் திண்ணன் பிடுங்கி அப்புதற்குக் காலாகின்றது.

காளத்திநாதருடைய கண்ணிலிருந்து உதிரம் வடிந்தபோது திண்ணன் பட்ட பாட்டினை,

" வேடரைக் காணார், தீய விலங்குகள் மருங்கும் எங்கும்
நாடியுங் காணார், மீண்டும் நாயனார் தம்பால் வந்து
நீடிய சோகத்தோடு நிறைமலர்ப் பாதம் பற்றி
மாடுறக் கட்டிக் கொண்டு கதறினார் கண்ணீர் வார "

என்னும் பாடல் காட்டுகின்றது. அன்பை வெளிப்படுத்தும் இந்நிகழ்வுக்கு இலக்கணமாக,

" அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கண்நீர் பூசல் தரும் "

என்னும் திருக்குறள் அமைகின்றது.

## 3. ஒவ்வொரு ஆன்மாவுக்கும் இறைநிலை

சைவசமயம் வாழ்க்கையோடு இணங்கிப் போகும் சமயமாகும். வாழ்க்கையை மறுதலிக்கவோ எதிர்மறையாக நோக்கவோ அது முயல்வதில்லை. மேலும் சைவ சமயத்தின் மிகப்பெரிய மகிமைகளுள் ஒன்று அது எவ்வித விலக்குமின்றி ஒவ்வொரு ஆன்மாவுக்கும் இறைநிலை அளிக்கின்றது திருக்குறள்,

" வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும் "

என்று கூறுகின்றது. சைவசமயத்தினர் கடவுளைச் சார்ந்துள்ளனர். ஆகையினால் கடவுளினது விதிகளுக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டியவர்கள் என்பதை உணர்கின்றனர். அவன் அவர்களை நேசிக்கிறான். அவர்கள் அவனை நேசிக்கின்றனர். கடவுளுடைய விதிகளுக்கமைய இந்த உலகத்திலே வாழ்ந்து அவர்கள் இறைநிலை அடைகின்றனர். இதனைத்தான் மேற்குறிப்பிட்ட குறள் விளக்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. முயற்சி கூலி தரும்

சைவசமயத்தின் அடிப்படைகள் மூன்று. அவை ஆன்மா, கடவுள், பாசம் மூன்றாவதாகிய பாசம் பலகோடி ஆன்மாக்களின் அறியும் திறம் தடுக்கப்படுகின்றது. ஆணவத்திரை மறைத்து நிற்கின்றது. அது சிறிது சிறிதாக விலகுமிடத்து ஆன்மா அறிவைப் பெறுகிறது. ஆன்மா இவ்வாறு அறிவு பெறுவது பற்றி சைவப் பெரியார் சிவபாதசுந்தரம் பின்வருமாறு கூறுகிறார்.

" ஆன்மா என்றும் முற்றிலும் புதியதொரு சூழ்நிலையில் தான் இருப்பதைக் காணும்போது அது தானாகவே தன்னைச் சரிக்கட்ட முடியாமற்போய் பிழைகளைச் செய்கின்றது. அதன் விளைவாக அது துன்பப்பட்டுத் தனது சரிக்கட்டும் முயற்சியில் உள்ள சில பிழைகளைக் கண்டுபிடிக்கின்றது. அடுத்த தடவை அது தன்னை அது போன்றதொரு சூழ்நிலையில் காணும்போது, அது அப்பிழையைத் திருத்தி முன்பை விடச் சிறந்த சரிக்கட்டுதலைச் செய்கின்றது. ஆனால் இந்தச் சரிக்கட்டுதலும் முற்றிலும் சரியானதாக இருக்காது போகலாம். அதன் விளைவாக அது துன்பமடைகின்றது. இந்த அனுபவத்தால் அது வேறுபிழைகளைக் கண்டுபிடிக்கின்றது. இவ்வாறு பிழைகளைக் கண்டுபிடித்தல் அந்த ஆன்மாவின் அறிவுக்கு ஒரு நிரந்தரச் சேர்க்கையாகி விடுகின்றது. இதைச் சித்தாந்த மொழியிற் கூறுவதாயின், நாம் கன்மம் எனப்படும் செயலைச் செய்து அந்தக் கன்மத்தினால் ஏற்பட்ட விளைவை அனுபவிக்கின்றோம். அவ்வாறு அனுபவித்தல் எமக்கு மேலதிக அறிவைத் தருகின்றது. இவ்வாறாக மெய்யறிவைப் பெறுவதென்பது ஆணவத் திரையைச் சிறிது அகற்றுதல் எனப்பொருள்படும். எமது சித்தாந்தத்தில் ஒழுக்கம் சார்ந்த செயல்கள் மட்டுமே கன்மம் என அழைக்கப்படுகின்றது என்பதை நினைவிற் கொள்ளுதல் வேண்டும். கணிதப் பிரச்சினைகளைத் தீர்த்தல், நூல்நூற்பது போன்ற செயல்கள் சித்தாந்த நோக்கில் கன்மம் அல்ல. அவை இந்தக் கட்டுரைத் தொடரில் முயற்சிகள் என அழைக்கப்படும். இரண்டாவதாக கன்மாவினால் ஏற்பட்ட விளைவை அனுபவித்தலால் கிடைக்கும் அறிவு போன்ற அறிவிலிருந்து வேறுபட்டது. ஆகவே இவ்வாறு கன்மாவினால் ஏற்பட்ட விளைவை அனுபவித்தலால் கிடைக்கும் அறிவைச் சுத்தஅறிவு என்போம். ஒருமனிதன் விஞ்ஞான அறிவில் சமுத்திரமாயிருந்தபோதும் ஆன்மீக அறிவில் ஒரு படிப்பறிவில்லாத காட்டுவாசியை விடத் தாழ்ந்தவனாய் இருக்கக்கூடும்.

அனுபவத்துக்குக் கடும் உழைப்பும் ஒரு காரணியாக அமைகின்றது. நாம் எவ்வளவு கஷ்டப்பட்டு உழைக்கின்றோமோ அவ்வளவுக்கு எமது இவ்வுலக அனுபவம். அதிகளவு இனிமையானதாக இருக்கும். எமது சைவசித்தாந்தம் கடும் உழைப்பினை ஏற்றுக் கொள் வதுடன் ஊக்குவிப்பும் செய்கின்றது. இதனைத்தான்

" தெய்வத்தா லாகா தெனினும் முயற்சிதன்
மெய்வருந்தக் கூலிதரும் "

எனத் திருக்குறள் கூறுகின்றது. இதனை விளக்குவதற்கு சனீஸ்வரனுடன் தொடர்பான ஒரு கதையினை (கணபாலசுவாமி, அருட்கனி, யாழ்ப்பாணம், 1997, பக் 13-14) இங்கு எடுத்துக் காட்டாகத் தருகின்றேன்.

" சனிபகவான் கார்த்திகை நட்சத்திரத்திலிருந்து V அமைப்புடைய ரோஹிணி நட்சத்திரத்தின் அகன்ற பகுதியால் பிரவேசித்து ஒடுங்கிய கூரான பகுதியைப் பிளந்து வெளியேறுவது " ரோஹிணி சகட பேதநம் " என்று கூறப்படும். அப்படியெனில் தொடர்ந்து பன்னிரண்டு வருடங்கள் மழை பெய்யமாட்டாது. நீர்நிலை வற்றிவிடும். பஞ்சம் உண்டாகும். பிராணிகள் அழிந்துவிடும். இந்நிலை தசரதன் ஆட்சிக் காலத்தில் ஏற்பட இருந்ததை முன்கூட்டி அரண்மனைச் சோதிடர்கள் மூலம் அறிந்தமையால் தடுப்பதற்கு ஏதும் வழிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டா என வசிட்டர் முதலான அறிஞர்களைக் கேட்டு, பிரம்மன் இந்திரன் போன்றோர்களே தடுக்க முடியாது என அறிந்து, சனி பகவானைச் சந்தித்துச் சண்டை செய்தாவது தடுக்க வேண்டும் என எண்ணி அவ்விடம் சென்று ரோஹிணி நட்சத்திரத்தைத் தனக்குப் பின்னால் நிற்கச் செய்து நாண் ஏற்றி நின்றான். ஆயிரம் கோடி ஆதித்தர்கள் பிரகாசிப்பது போல் பிரகாசத்தோடு நிற்கும் தசரதனின் எண்ணத்தை உணர்ந்த சனிபகவான் யாராலும் எதுவும் செய்ய முடியாத நிலையை உணராது வந்து நிற்கும் தசரதனின் அறிவீனத்தைப் பார்த்து நகைத்து, மக்களுக்காக, நாட்டுக்காக உயிரைத் துச்சமாக மதித்து இவ்வளவு கஷ்டப்பட்டு வந்து நிற்கும் உன்னை மெச்சுகின்றேன். அதற்காக ஒரு வரம் தருகின்றேனென அரசன் நாட்டில் பன்னிரண்டு வருடங்கள் தொடர்ந்து ஷாமம் வராது தவிர்க்கப்படவேண்டும் என வேண்டினான். அப்படியே அருள் சுரந்தது. இதனால் அளவு கடந்த மகிழ்ச்சியடைந்த அரசன் சனிபகவானை வணங்கித் தோத்திரம் செய்தான்.

பிரமன், இந்திரன் தேவர்களாலே முடியாது போயினும் தசரதனது முயற்சி வெற்றியைக் கொடுத்தது.

## 5. சைவநாயன்மார் வரலாறும் திருக்குறளும்

சைவநாயன்மார்களின் வரலாற்றினைச் சேக்கிழாருடைய பெரியபுராணம் விரித்துக் கூறுகின்றது. பலருடைய வாழ்க்கை வரலாற்றின் இலக்கணமாக வள்ளுவனுடைய குறட் பாக்கள் அமைகின்றன. இயற்பகையாருடைய கதை விசித்திரமானதொன்றாகும். புகார் நகரத்து வணிகர் குடியிலே பிறந்த இயற்பகையார் கங்கை சூடிய சிவபிரானுடைய அருளாலே " நீறுசேர் திருமேனியர் " ஆக வாழ்ந்து வந்தார். இத்தகைய சிவனடியாரைத் தேர்வு செய்யும் முகமாக " மாயவண்ணமே கொண்டு " இறைவன் இயற்பகையார் " யாதும் ஒன்றும் என்பக்கல் உண்டாகில் அன்னது எம்பிரான் அடியவர் உடைமை, ஐயம் இல்லை, நீர்அருள் செய்யும் " என்று கூறினார். எவ்வித தயக்கமுமின்றி அந்த அடியவர் " உன் னுடைய மனைவியை நான் வேண்டி வந்தேன் " என்று கூற இயற் பகையாரோ மிகுந்த மகிழ்ச்சியுடன் தன்னுடைய மனைவியைச் சிவனடியாருக்குக் கொடுத்தது மட்டுமன்றி அவளைப் பாதுகாப்பாகக் கொண்டு போவதற்கு அவர் போரும் செய்தார். சிவனடியார் ஒருவர் சிவனின் அடியவர் அவர் எதனைக் கேட்டாலும் கொடுக்க வேண்டியது சிவசமய நாகரிகம். இதனை வள்ளுவன்

" பெயக்கண்டும் நஞ்சு உண்டு அமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்.

நல்ல நண்பன். உயிருக்குயிராய் இருப்பவன். அவன் எதைத் தந்தாலும் மறுத்தது கிடையாது. அவன் நஞ்சினை ஊற்றித் தந்தாலும் நயத்தக்க நாகரிகம் வேண்டுகின்றவன் அதனை உண்பான். நயத்தக்க சிவசமய நாகரிகம் பேணும் இயற்பகையார் தன்னுடைய மனைவியைக் கேட்ட சிவனடியாருக்கு அவளைக் கொடுத்தது இந்த நஞ்சுண்டது போன்றதொரு நிகழ்வேயாகும். மெய்ப்பொருளார், சிறுத்தொண்டர் போன்றோருடைய வாழ்க்கை வரலாறுகூட இந்த சிவசமயநாகரிகம் பேணுவதாகவே அமைந்துள்ளது.

சிவனடியார் வீட்டுக்கு வந்தால் அவருக்கு எப்படியேனும் அமுதூட்டுதல் சிவசமய விருந்தோம்பலாகும். இதனைத்தான் இளையான்குடிமாறனும் காரைக்கால் அம்மையாரும் செய்தனர். வள்ளுவன் விருந்தோம்பல் என்றொரு அதிகாரமே வகுத்துள்ளான். இவ்வாறு அதிகாரம் வகுத்தும் பத்துக்குறளிலே விருந்தோம்பல் பற்றிக்கூறினாலும் சிவசமய விருந் தோம்பலின் ஒரு பண்பினை அவன் குறளெதுவும் கூறியதாயில்லை. இளையான்குடி மாறன் மிகுந்த செல்வந்தராயிருந்து சிவனடியார்களுக்கு அமுது செய்து வந்துள்ளார். செல்வம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ள நாளில் இச்செயல் செய்யக்கூடியவர் செல்வம் அற்ற நாளிலும் இச் செயல் செய்வாரோ என்பதை அறிய அண்ர்நாயகன் " நற்றவத்தவர் வேடமே கொடு " வந்தார். அவ்வாறு வந்தவரை வீட்டிலே உணவு சமைக்க எதுவுமற்ற வேளையிலும் விருந்தாக வந்தவரை எதிர்கொள்கிறார் இளையான்குடிமாறன். சேக்கிழார் அச்சந்தர்ப் பத்தில்,

" மாரிக்காலத்து இரவினில் வைகியோர்
தாரிப் பின்றிப் பசிதலைக் கொள்வது
பாரலித்து இல்லம் அடைந்தபின் பண்புற
வேரித் தாரான் விருந்தெதிர் கொண்டான்."

என்று கூறுகின்றார். இவ்வாறான விருந்தெதிர் கொள்ளும் முறைபற்றி வள்ளுவனின் குறளெதுவும் கூறவில்லை. விருந்தோம்பலினாலே நல்குரவு வராது என்று கூறும் வள்ளுவன் நல்குரவு ஏற்பட்டபோதும் விருந்தோம்பும் சிவனடியார்ப் பண்பினை கூறாதுவிட்டுள்ளார். எனினும் வீட்டிலே உணவில்லாதபோதும் விருந்தாக வரும் சிவனடியாரை வருவிருந்தாக ஓம்பி, விதைத்த வித்து நெல்லினை வயலிலிருந்து கொண்டு வந்து அரிசியாக்கி, மழையினால் நனைந்த விறகுக்குப் பதிலாக வீட்டுக்கப்பினை முறித்து அடுப்பில் மாட்டி, மழைநீருக்குள் இருந்த சிறுகீரையைப் பிடுங்கிக் கறியாக்கி விருந்துசெய்ய எண்ணிய இளையான்குடி மாறனையும் அவர் மனைவியையும்,

" அன்பனே அன்பர் பூசை அளித்தநீ அணங்கினோடும்
என்பெரும் உலகம்எய்தி இருநிதிக் கிழவன் தானே
முன்பெரு நிதியம் ஏந்தி மொழிவல ஏவல் கேட்ப
இன்பமார்ந் திருக்க "

என்று இறைவன் அழைத்தமையை நோக்கும்போது,

" செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு "

என்று வள்ளுவன் கூறும் குறள் பொருத்தமாக அமைவதைக் காணலாம்.

## 6. நிறைவுரை

வள்ளுவனுடைய திருக்குறள் சைவசமயக் கருத்துக்களுக்கு நல்ல இலக்கணமாக அமையும் நூலாகும். வாழ்க்கைக்கு எவ்வாறு திருக்குறள் இலக்கணமாக அமைகின்றதோ அதேபோல் வாழ்க்கை நெறியாக அமைவது சைவசமயம். இதனால் சைவசமயத்துக்கும் திருக்குறளுக்கும் நெருங்கிய தொடர்பிருப்பது வியப்பில்லை. சங்ககாலத் தமிழ் மக்கள் வாழ்வுக்கு எதிர்நிலையான வாழ்வு நிலைகளைச் சமண, பௌத்தசமயங்கள் முன் வைத்தன. இந்நிலையிலே வாழ்க்கையினைத் தன்னிலையாகவும் எதிர்நிலையாகவும் நோக்கி ஒரு சமநிலை பேணித் திருக்குறளை வள்ளுவன் வகுத்தான். இவ்வாறு ஒரு சமநிலை பேணும் சமயமாக சைவசமயமும் அமைந்தது. இதனாலேயே சைவசமயத்தின் அடிப்படைகளை வள்ளுவனுடைய குறள்களிலே இலகுவிலே நாம் காணக்கூடியதாகவுள்ளது. எடுத்துக் காட்டுக்களாகச் சில இக்கட்டுரையிலே இனங்கண்டு விளக்கப்பட்டுள்ளன.

**( லண்டனில் நடைபெற்ற நான்காவது சைவ மாநாட்டில் வாசிக்கப்பட்ட கட்டுரை)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்ப்பணிப்புடன் சேவையாற்றி

இந்துசமயப் பேரவையினால் 2வது பட்டமளிப்பில்

# " சிவகலாபூஷணம் "

விருது வழங்கிக் கௌரவிக்கப்படுவோர்

| துறை | | கௌரவிக்கப்படுபவர் |
|---|---|---|
| கர்நாடக சங்கீதம் | - | திரு.வி.கே.நடராசா |
| தமிழ், வடமொழி இலக்கியம் | - | திரு.ச.பஞ்சாட்சரசர்மா |
| பண்ணிசை | - | திரு.எஸ்.ஆர்.திருஞானசம்பந்தன் |
| வில்லிசை | - | திரு.நா.கணபதிப்பிள்ளை |
| நாதஸ்வரம் | - | திரு.எம்.பி.பஞ்சாபிகேசன் |
| கதாப்பிரசங்கம் | - | திரு.ந.சிவசண்முகமூர்த்தி |
| வயலின் | - | திரு.உ.இராதாகிருஷ்ணன் |
| ஓவியம், சிற்பம் | - | திரு.வை.சிவசுப்பிரமணியம் |
| தேர், சப்பறம், சிற்பம் | - | திரு.சி.அமரசிங்கம் |
| புராணபடனம் | - | திரு.தி.பொன்னம்பலவாணர். |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சிவகலாபூஷணம் வி.கே. நடராசா



அளவெட்டியைச் சேர்ந்த வி.கே.நடராசா அவர்கள் 24-09-1938இல் பிறந்தவர். இவர் தனது பாடசாலைக் கல்வியை நிறைவு செய்து கொண்ட பின் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்குச் சென்று சங்கீதபூஷணம் பட்டத்தைப் பெற்றுக்கொண்டார். சிறந்த சங்கீத வித்துவான்களில் ஒருவரான இவர் இலங்கையிலும் இந்தியாவிலும் பல சிறந்த இசைக்கச்சேரிகளை நிகழ்த்தியுள்ளார்.ஆசிரிய சேவையில் இணைந்து பல புகழ்பூத்த பாடசாலைகளில் கடமையாற்றி உள்ளார். 1962ம் ஆண்டிலிருந்து இற்றைவரை 51 இசை ஆசிரியர்களை உருவாக்கிய பெருமைக்குரியவர். 1991ம் ஆண்டில் இருந்து 1998ம் ஆண்டுவரை தெல்லிப்பழை சங்கானை சண்டிலிப்பாய்க் கல்விக்கோட்டங்களின் இசை ஆசிரிய ஆலோசகராகப் பணிபுரிந்துள்ளார். இத்துறைத் தேர்ச்சியை எம்.எம்.தண்டபாணிதேசிகர் எ.ஜி.ஐயாக்கண்ணுதேசிகர் ஆகியோரிடம் பெற்றுக்கொண்ட பெருமைக்குரியவர்.

இவரது இசைத்திறமையைப் பாராட்டிக் கலாகேசரி, தேனிசைவாரிதி ஆகிய பட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவரது ஆசிரியப் பணியைப் பாராட்டி நல்லாசான் விருதும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

சிறந்த மேடை, வானொலிப்பாடகரான இவர் தற்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இசைத்துறை அதிதி விரிவுரையாளராகப் பணிபுரிந்து வருகின்றார்.

**இவரது இசைத்துறை ஆற்றலையும் இசையாசிரியப் பணியையும், பாராட்டி இந்துசமயப் பேரவை 2002ம் ஆண்டு சைவமாநாட்டில் 2வது பட்டமளிப்பின்போது "சிவகலாபூஷணம்" எனும் விருதை வழங்கிக் கௌரவிக்கின்றது.**

இந்துசமயப் பேரவை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவகலாபூஷணம் ச.பஞ்சாட்சரசர்மா



பண்டிதர் சபாபதிஐயர் பஞ்சாட்சர சர்மா 12-11-1916 இல் கோப்பாய்க் கிராமத்தில் பிறந்தவர். இவர் தனது பாடசாலைக் கல்வியை நிறைவு செய்தபின் சம்ஸ்கிருத பண்டிதர், தமிழ்ப் பண்டிதர் பரீட்சைகளில் தோற்றித் திறமைச் சித்தி பெற்றுள்ளார். இவர் சீதாராம சாஸ்திரிகள், ஸ்ரீநிவாச சாஸ்திரிகள், பண்டித மணி சி.கணபதிப்பிள்ளை, மஹாவித்துவான் சி.கணேசஐயர் போன்றோரிடம் சம்ஸ்கிருதம், தமிழ் ஆகியவற்றைத் துறை போகக் கற்றுள்ளார். சிறுகதைத் துறையிலும் மிகுந்த ஆர்வ முள்ளவர். ஈழத்துச் சிறுகதைக்கு ஓர் உத்வேகத்தை அளித்த மறுமலர்ச்சி என்ற பத்திரிகையில் தனது ஆக்கங்களை வெளியிட்டதோடு, சிலகாலம் ஆசிரியராகவும் பணிபுரிந்துள்ளார்.

வடமொழியிலும் தமிழிலும் பல்வேறு கட்டுரைகளையும், நூல்களையும் ஆக்கியுள்ளார். வடமொழியிலுள்ள வைதிக இலக்கியப்பகுதிகள் சிலவற்றைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். இவர் வடமொழியில் பெற்ற தேர்ச்சியின் காரணமாக வேதசிவாகமக் கிரியைகளைக் குறைவின்றி நிறைவேற்றுவதற்குப் பல பிரபல சிவாசாரியார்களுக்கும் உதவியுள்ளார். அறிவுசார் பலரோடு சமூகநோக்கோடு பல்வேறு பட்ட சங்கங்கள் சபைகளில் பதவி வகித்துள்ளார். ஆரியதிராவிட பாஷாபி விருத்திச் சங்கத்தின் தமிழ், சம்ஸ்கிருதப் பரீட்சைகளை நடாத்தி வைத்துள்ளார். மேலும் பல சபைகளின் பரீட்சைகளை நடத்த உதவியுள்ளார். எமது மத, மொழி, இலக்கியத் துறையில், சிறுவர் இலக்கியம், நூல் விமர்சனம், புனைகதை, மொழிபெயர்ப்பு, நூல் வெளியீடு, விமர்சனம், உரைவிளக்கம், மேற்பார்வை செய்தல், அணிந்துரை, ஆசியுரை வழங்கல், பரீட்சைகளை நடாத்தல் எனப் பல்வகைப் பணிகளில் தன்னை முழுமையாக அர்ப்பணித்துச் செயற்பட்டுள்ளார்.

**அன்னாரின் வடமொழி, தமிழ்ப் புலமைகளை வியந்து இந்துசமயப் பேரவை 2002ம் ஆண்டு சைவ மாநாட்டில் 2வது பட்டமளிப்பின்போது "சிவகலாபூஷணம்" எனும் விருதை வழங்கிக் கௌரவிக்கின்றது.**

இந்துசமயப்பேரவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவகலாபூஷணம் கே.எஸ்.ஆர் திருஞானசம்பந்தன்



கலைத்திறமை கொண்ட தாவடியைச் சேர்ந்த திரு.எஸ்.இராசையா தங்கரத்தினம் தம்பதியருக்கு 04-07-1946ல் புதல்வராகப் பிறந்தார். பாடசாலைக் கல்வியில் க.பொ.த உயர்தரத்தில் சித்தி அடைந்தார். பிற்பட திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்தில் தேவார இசைமணிப் பரீட்சையில் சித்தியடைந்தார். இலங்கையிலும் இந்தியாவிலும் பல்வேறுபட்ட கலைஞர்களுடன் இணைந்து பாடிப்பல பட்டங்கள் வழங்கப்பட்டுச் சிறப்பிக்கப்பட்டவராவார். பல தடைவைகள் தமிழகம், மலேசியா போன்ற நாடுகளில் சென்று இசைச் சேவையாற்றிப் பலரினது பாராட்டுதல்களைப் பெற்றவராவார்.

இவருக்கு "பண்ணிசைப் புலவர், பண்ணிசைவேந்தர், தேவார இசைமணி, திருமுறை வித்தகர், பண்ணிசைச் செல்வன், அருளிசையரசு, கலைஞானகேசரி போன்ற பல பட்டங்கள் இலங்கையிலும் தமிழகத்திலும் பல நிறுவனங்களால் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

**இவரது பண்ணிசைப் புலமையைப் பாராட்டி இந்துசமயப் பேரவை 2002ம் ஆண்டு சைவமாநாட்டில் 2வது பட்டமளிப்பின்போது "சிவகலாபூஷணம்" எனும் விருதை வழங்கிக் கௌரவிக்கின்றது.**

இந்துசமயப்பேரவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவகலாபூஷணம் நா.கணபதிப்பிள்ளை



வில்லிசைப்புலவர் திரு.க.நா.கணபதிப்பிள்ளை (சின்னமணி) அவர்கள் பருத்தித் துறையிலே மாதனைஎனும் கிராமத்தில் 30-03-1936 இல் பிறந்தவர். தனது பாடசாலைக் கல்வியை நிறைவு செய்கின்றபோதே நல்ல கலைஞனாக வெளியேறிய பெருமை இவருக்குண்டு. நாடகம், நடனம், வில்லிசை மூன்றிலும், அற்புதமான ஆற்றல் படைத்தவராகவே காணப்படுகின்றார்.கச்சிதமாக வசனங்களைப் பாத்திரங்களுக்கேற்ப உணர்வு பூர்வமாகப் பேசுகின்ற ஆற்றலும் பாவண்ணம் மாறாது பாடுகின்றபாவகமும், பாத்திரங்களை நியமாகவே காணக்கூடிய வகையில் முகபாவங்களை உடனுக்குடன் மாற்றி நடிக்கும் தன்மையும் இவரிடம் இயல்பாகவே காணப்படுகின்றது. இவர் இசை நடனத்தை வி.கே.நல்லையாவிடமும் வில்லிசையைக் கலைவாணர் என்.எஸ்.டபிள்யூ.திருப்பூங்குடி வீ.கே.ஆறுமுகம் ஆகியோரிடம் கற்றுக்கொண்டார்.

இவர் பல இலக்கிய இதிகாசபுராண நாடகங்களை நடித்துப் பெரும் பாராட்டும் பெற்றுள்ளார். உடுக்கு வாத்தியம் வாசிப்பதில் மிகுந்த வல்லமை படைத்தவர். நல்ல எழுத்தாளர். உடனுக்குடன் பாடல்களை இயற்றிப்பாடும் ஆற்றல் கொண்டவர். இவை அனைத்துக்கும் மேலாக இவரது வில்லிசைத் திறமை தமிழுலகை வியக்க வைத்துள்ளது. இவரது வில்லிசை நிகழ்ச்சிகள் ரூபவாஹினி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் போன்றவற்றில் ஒளிபரப்பியும், ஒலி பரப்பியும் வருகின்றது. இத்தகைய பெருமை பெற்ற இவரைப் பாராட்டி முத்தமிழ்மாமணி, வில்லிசைக் கலைஞானஜோதி, வில்லிசைக் கலைவாணர், நடிப்பிசைப்புலவர், கலாபூஷணம் ஆகிய விருதுகள் வழங்கப்பட்டன.

**இவருக்கு இந்துசமயப் பேரவை 2002ம் ஆண்டு சைவமாநாட்டில் 2வது பட்டமளிப்பின்போது "சிவகலா பூஷணம்" எனும் விருதை வழங்கிக் கௌரவிக்கின்றது.**

இந்துசமயப் பேரவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவகலாபூஷணம் மு.பஞ்சாபிகேசன்



சாவகச்சேரியைச் சேர்ந்த நாதஸ்வர வித்துவான் மு.பஞ்சாபி கேசன் 01-07-1929ல் பிறந்தவர். தனது பாடசாலைக் கல்வியை நிறைவு செய்து கொண்டு, தமது பாரம்பரிய இசைக்கலையை மல்லாகம் இராமையாபிள்ளையிடம் பயின்றார்.

இவரது இசைத்திறமையை அறிந்த சாவகச்சேரி நாதஸ்வர வித்துவான் சண்முகம்பிள்ளை, நாதஸ்வர வித்துவான் அப்பு லிங்கம்பிள்ளை ஆகியோர் இசைஞான நுட்பங்களை இவருக்குக் கற்பித்தனர்.

இத்துறையில் மேலும் தேர்ச்சி பெறும் நோக்கோடு இந்தியா சென்று நாதஸ்வர மேதைகளான திவாங்கூர் நடராஜசுந்தரம்பிள்ளை, ஐயாம்பேட்டை வேணுவால்பிள்ளை ஆகியோரிடம் பயின்றார்.

நாதஸ்வர இசையுலகில் சிறந்த புகழ்பெற்ற இவர் பழைமை பேணும் புதுமையான நாதஸ்வர வித்துவானாகத் திகழ்கின்றார்.

ஈழத்திலும், இந்தியாவிலும் சிறந்த நாதஸ்வர வித்துவான்களுடனும் தவில் வித்துவான்களுடனும் சேர்ந்து இணைந்து வாசித்த பெருமைக்குரியவர்.

தவில்மேதை தெட்சணாமூர்த்தி இவருடன் இணைந்து பலவருடம் கச்சேரி நடாத்தி வந்தமை இவரது நாதஸ்வரத் திறமைக்குச் சான்றாகின்றது.

கலைப்பணியில் இவருக்குரிய திறமையைப் பாராட்டி இசைப்பேரறிஞர், கலா பூஷணம், சுரஞானதிலகம் ஆகிய பட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவர் தான் பெற்றுக்கொண்ட வருமானத்தில் ஒருபகுதியை தர்மப் பணிக்காகச் செலவிடுதல் பெருமைக்குரியது.

**இத்தகைய பெருமகனுக்கு இந்துசமயப்பேரவை 2002 சைவ மாநாட்டில் 2வது பட்டமளிப்பின்போது "சிவகலா பூஷணம் " எனும் விருதை வழங்கிக் கௌரவிக்கின்றது.**

இந்துசமயப்பேரவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவகலாபூஷணம் ந.சிவசண்முகமூர்த்தி



சைவத்தின் நடேசன் சிவசண்முகமூர்த்தி 08-02-1942இல் தொல்புரம் கிராமத்தில் பிறந்தார். இவர் தனது பாடசாலைக் கல்வியை நிறைவு செய்தபின் பல்கலைக்கழகப் படிப்பை நிறைவுசெய்து கலைப்பட்டதாரியானார். ஆசிரியராகத் தனதுபணியை ஆரம்பித்த இவர் சைவத் தமிழ்ப்பணியை இடைவிடாது தொடர்ந்து நடாத்தி வருகின்றார். இவர் வில்லுப்பாட்டு, கதாப்பிரசங்கம் போன்றவற்றை ஆலயங்கள்தோறும் நிகழ்த்தி மக்கள் மத்தியில் சமயஉணர்வை ஏற்படுத்தி வருகின்றார். இவரது கதாப்பிரசங்கத் திறமை பலராலும் பாராட்டப்பட்டுள்ளது. நாட்டார்பாடல், சொற்பொழிவு, பண்ணிசை போன்ற வற்றிலும் இவர் சிறந்து விளங்குகின்றார். கவிதை, கட்டுரை போன்றவற்றை சிறப்புறயாத்து வருகின்றார்.


திருமுருக கிருபானந்தவாரியாரைத் தனது ஆத்மீகக் குருவாகக் கொண்டுள்ள இவர் வாரியார்சுவாமிகளிடம் கதாப்பிரசங்கம் செய்யும் தனித்துவத்தைக் கற்றுக் கொண்டுள்ளார்.

பல்வேறுபட்ட பொது நிறுவனங்களிலும், சமய, சமூக நிறுவனங்களிலும் இணைந்து தொண்டு புரிந்து வருகின்றார். இலங்கை வானொலியில் இவரது சொற்பொழிவுகள், கதாப்பிரசங்கமும் ஒலிபரப்பப்பட்டு வருகின்றது.

இவரது சைவப்பணியையும் கதாப்பிரசங்கத் திறமையையும் பாராட்டி பிரசங்க பூஷணம், பிரசங்கவாரிதி, அருட்சொல்வாரி, இசைப்பேருரைச்செம்மல், செஞ்சொற்செல்வர், கதாப்பிரசங்கச்சக்கரவர்த்தி, இறையிசையரசு, வாரியார்வாரிசு, சிவனேசச்செல்வர், கலாஞானகேசரி ஆகிய பட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன.

**இவருக்கு இந்து சமயப் பேரவை 2002ம் ஆண்டு சைவ மாநாட்டில் 2வது பட்டமளிப்பின்போது "சிவகலா பூஷணம்" எனும் விருதை வழங்கிக் கௌரவிக்கின்றது.**

இந்துசமயப் பேரவை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவகலாபூஷணம் உ. ராதாகிருஷ்ணன்



திரு.உருத்திராபதி ராதாகிருஷ்ணன் அவர்கள் 27-06-1943இல் இணுவில் கிராமத்தில் தனது பாடசாலைக் கல்வியை நிறைவு செய்தபின் தனது தந்தையார் வயலின் வித்துவான் வி.உருத் திராபதி, வயலின் வித்துவான் ஜி.சண்முகானந்தம், பரூர்,எம். எஸ் அனந்தராமன் (இந்தியா) ஆகியோரிடம் வயலின் வாத்தி யக் கலையைத் துறைபோகக் கற்றுக்கொண்டார். தனது இள மைக்காலத்தில் நல்லை ஆதீன முதலாவது குருமகாசன்னி தானம் சுவாமிநாத ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், இந்து சமயப் பேரவைத் தலைவரும், ஆத்மீக ஞானியுமான அருட்கவி சீ.விநாசித்தம்பி ஆகியோரின் கதாப்பிரசங்கங்களுக்குப் பக்கவாத்தியம் வாசித்துள்ளார். இவர் 1970 ம் ஆண்டு தொடக்கம் 1985ம் ஆண்டுவரை தனிவயலின் கச்சேரிகளை ஆலயங்களிலும், விழாக்களிலும் 2000 தடவைகளுக்குமேல் செய்த பெருமைக்குரியவர்.

இந்தியக் கலைஞர்களான பண்ணிசை வேந்தர் பி.எஸ் இராஜசேகரம், சங்கீத வித்துவான்கள் சண்முகராகவன், சந்தானம், தியாகராஜன், இசைமேதை மதுரை சோமசுந்தரம், கல்யாணராமன், ஐயா விஜயா, தாராபுரம் சுந்தரராஜன் ஆகியோர் நம்நாட்டிற்கு விஜயம் செய்தபோது சிறந்தமுறையில் வயலின் வாசித்து நம் நாட்டிற்கு பெரும்புகழை ஈட்டித் தந்துள்ளார். இவர் மலேசியா, இந்தியா, சிங்கப்பூர், கனடா, லண்டன் ஆகிய நாடுகளுக்குச் சென்று தனி வயலின் கச்சேரிகளைச் செய்துள்ளார்.

இவரது திறமையை வியந்து, இன்னிசை வேந்தன், இசைஞான திலகம், ஸ்வர லயஞான வித்தகர், சாகித்தியசாகரம், சங்கீத வித்யா சாகரம், இசைஞானகலாநிதி ஆகிய விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

**இத்தகைய சிறந்த கலைஞருக்கு இந்து சமயப்பேரவை 2002ம் ஆண்டு இந்து மாநாட்டில் 2வது பட்டமளிப்பின்போது "சிவகலாபூஷணம்" எனும் விருதை வழங்கிக் கௌர விக்கின்றது.**

இந்துசமயப்பேரவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவகலாபூஷணம் வை.சிவசுப்பிரமணியம்



பருத்தித்துறையைச் சேர்ந்த திரு.வைத்தீஸ்வரன் சிவசுப்பிரமணியம் (ரமணி) அவர்கள் 07-08-1942 இல் பிறந்தவர். இவர் தனது பாடசாலைக்கல்வி நிறைவுபெற்றபின் சித்திரக்கலை(டிப்ளோமா) பரீட்சையில் 1ம் வகுப்பில் சித்தி பெற்றுள்ளார்.இவர் ஓவியத்தை திரு.அ.மாற்கிடமும், சிற்பக்கலையைச் சென்னை ராவ் பஹதூர் நாகப்பாவின் மகன் நா.மணிவர்ணனிடமும் கற்றுக் கொண்டார்.

கொழும்பில் வெளியிடப்படும் தினசரி, வாரப்பத்திரிகைகளில் 1962-1976 வரை முன்னணி ஓவியராகத் திகழ்ந்தவர். 500ற்கும் மேற்பட்ட புத்தக முகப்பு ஓவியங்களை வரைந்த பெருமைக்கும் உரியவர். இவரது 12 நீர்வர்ண ஓவியங்கள் கலிபோனியாவிலுள்ள பேஸ்பல்கலைக்கழகத்தில் காட்சிக்கு வைக்கப் பட்டுள்ளன. கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தில் ஓவியராகப் பணிபுரிந்துள்ளார்.

தந்தை செல்வநாயகம், இந்துபோட் ராஜரட்ணம் உட்படப் பல உருவச் சிலைகளை ஆக்கிப் பாராட்டுப் பெற்றுள்ளார்.தற்போது அழகியல் உதவிக் கல்விப் பணிப்பாளராகவும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சித்திரமும், வடிவமைப்புஅதிதி விரிவுரையாளராகப் பணி புரிகின்றார்.

இவரது சிற்ப ஓவியக் கலைத் திறமையைப் பாராட்டிக் கொழும்பு இந்துசமயக் கலாசாரப் பேரவை கலைஞானகேசரி எனும் பட்டத்தை வழங்கியுள்ளது.

**இத்தகைய புகழ்பூத்த கலைஞருக்கு இந்து சமயப்பேரவை 2002 சைவ மாநாட்டில் 2வது பட்டமளிப்பின்போது "சிவகலாபூஷணம் "எனும் விருதை வழங்கிக் கௌரவிக்கின்றது.**

இந்துசமயப்பேரவை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவகலாபூஷணம் சி.அமரசிங்கம்



விஸ்வப் பிரம்மஸ்ரீ சின்னத்தம்பி அமரசிங்கம் ஸ்தபதி அவர்கள் 02-10-1945 இல் அராலிக் கிராமத்தில் பிறந்தவர். இவர் தனது பாடசாலைக் கல்வியை நிறைவுசெய்து கொண்டு தனது தந்தையாரின் வழிநடத்தலின் கீழ் சிற்பக் கலையைக் கற்றுக்கொள்வதில் மிகுந்த ஈடுபாடுடையவராகக் காணப்பட்டார். பல ஆலயங்களின் தேர், மஞ்சம் போன்றவற்றை வடிவமைத்துள்ளார்.

இவரால்1970ம் ஆண்டு முதன் முதலாக இலங்கையில் நாதஸ்வர வாத்தியம் செய்யப்பட்டது. இவரது வாத்தியத்தை இலங்கையில் புகழ்பூத்த நாதஸ்வரக் கலைஞர்கள் பலர் வாசித்து வருகின்றனர். அண்மையில் தமிழ்நாட்டில் இருந்து வருகைதந்த நாதஸ்வர சிகாமணி மாம்பலம், எம்.கே.எஸ்.சிவா, நாதஸ்வர எழிலிசைத்திலகம் எம்.கே.எஸ்.நடராஜன் ஆகியோர் இவரது நாதஸ்வரத்தைப் பெற்று வாசித்து மகிழ்ந்ததுடன் இந்நாதஸ்வரம் இந்திய நாதஸ்வரங்களுக்கு நிகரானவை என்றும் பாராட்டிக் கௌரவித்துள்ளார்.

இவரது இத்தகைய திறமையைப் பாராட்டி "ரதாதி நாதஸ்வர சிற்பக் கற்பக" சிற்ப சிரோன்மணி, திட்டநுட்பசிற்பக் கலாமணி, சிற்பக்கலாநிதி, சிற்பக்கலாரத்தினம், சிற்பக் கலாவினோதன், சிற்பவாணர், சிற்பக்கற்பகம், கலைஞானகேசரி ஆகிய பட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன.

**இந்துசமயப் பேரவையில் 2002ம் ஆண்டு நடாத்தப்பெற்ற சைவமாநாட்டில் 2வது பட்டமளிப்பின்போது "சிவகலாபூஷணம் "எனும் விருதை இவருக்கு வழங்கிக் கௌரவிக்கின்றது.**

இந்துசமயப்பேரவை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சிவகலாபூஷணம் தி.பொன்னம்பலவாணர்



பொன்னாலை சுழிபுரத்தைச்சேர்ந்த சிவத்திரு தியாகராசா பொன்னம்பலவாணர் 16-10-1945 இல் பிறந்தவர். இவர் தனது பாடசாலைக் கல்வியை நிறைவு செய்தபின் தமிழ் இலக்கண இலக்கியங்களைத் துறைபோகக் கற்று தமிழ்ப் பண்டிதரானார். சமஸ்கிருதத்திலும் பிரவேச பண்டிதப் பரீட்சையில் சித்தி பெற்றுள்ளார்.

புராணபடன மரபு இன்றும் எமது மண்ணில் நின்றுநிலவுவதற்குப் பண்டிதர் போன்றோரின் பங்களிப்புப் பாராட்டுதற்குரியது. இப்புராணபடனப் பயிற்சியை யோகி, கார்த்திகேசு, சுவாமி முருகேசன் சைவசித்தாந்த வித்தகர், சைவப்பெரியார் மு.ஞானப்பிரகாசம் போன்றோரிடம் பெற்றுக்கொண்டார். ஈழத்தின் பல்வேறு ஆலயங்களிலும் புராணபடனம் செய்த பெருமைக் குரியவர். இவரது புராணபடன விரிவுரைத் திறமையைக் கண்டறிந்த நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம் பௌராணி வித்தகர் எனும் பட்டத்தை வழங்கிக் கௌரவித்துள்ளது.

காசிகாண்டவசனம், புட்பவிதிப் பொழிப்புரை ஆகிய நூல்கள் இவரால் எழுதி வெளியிடப்பட்டுள்ளன. ஈழநாடு பத்திரிகையில் வெள்ளி சிந்தனையை வாரந்தோறும் எழுதிவந்த பெருமைக்கும் உரியவர்.

**இவரது புராணபடன விரிவுரைத் திறமையைப் பாராட்டி இந்துசமயப் பேரவை 2002ம் ஆண்டு நடந்த சைவ மாநாட்டில் 2வது பட்டமளிப்பின்போது "சிவகலாபூஷணம்" எனும் விருதை வழங்கிக் கௌரவிக்கின்றது.**

இந்துசமயப்பேரவை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# தந்தைக்கு ஞானோபதேசம் செய்த தனயன்

**பேராசிரியர் வி.சிவசாமி**



உலகவரலாற்றிலே மனிதன் படிப்படியாகவே நாகரிகமேம்பாடு அடைந்து வந்துள்ளான்; தொடக்கத்திலே வேட்டையாடியும் பின்னர் மந்தைமேய்த்தும், தொடர்ந்து விவசாயமும் செய்து காலப்போக்கிலே பல்வேறு வளர்ச்சிகளைக் கண்டு இன்றைய நிலையை அடைந்துள்ளான். அவனுடைய வாழ்வின் பல்வேறு கட்டங்களிலும் அவனுக்குப் புறவாழ்வுமட்டுமன்றி அகவாழ்வும் ஒன்று பொதுவாக இருந்து வந்துள்ளது. உலகியல் சார்பான விடயங்களைப் புறவாழ்விலும், சமய ஆன்மீக வாழ்வுக்குரியவற்றை அகவாழ்விலும் அவன் பொதுவாகக் கண்டுவந்துள்ளான். சமய, ஆன்மீக வாழ்வு அவனுக்கு வாழும் உலகத்துடன் மட்டுமன்றிக் குறிப்பாக, உலகிற்கு மூலகாரணமாக எங்கும் வியாபித்துக் கொண்டும், எல்லாவற்றுக்கும் அப்பாலும் உள்ளவனாக, யாவருக்கும் வேறுபாடின்றித் திருவருள் பாலித்துவரும் இறைவனைப்பற்றி அறியவும், உணரவும் உதவியுள்ளது. இவ் உலகவாழ்விற்குச் சமயவாழ்வும் இன்றியமையாததெனப் பொது வாகக் கருதப்பட்டுவந்துள்ளது. இவ்வாறு தமக்கு அப்பாற்பட்ட, அதேவேளையில் தம்முள் இருந்து கொண்டே தம்மையும், உலகையும் - பிரபஞ்சத்தையும் தோற்றுவித்துத் திருவருள் பாலித்துவரும் பரம்பொருளை இறைவனைப்பற்றிப் பன்னாட்டு ஞானிகளும், தத்தம் நாட்டுத் தட்ப, வெப்பநிலைகள், சமூகநிலை, அனுபவங்கள் முதலியவற்றிற்கேற்ப காலந்தோறும் எடுத்துக் கூறியுள்ளனர். இப்பரம்பொருளை அருவமாகவும், உருவமாகவும், அருவுருவமாகவும் ஞானிகள் கண்டனர்; "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்னும் உயர் கருத்திற்கேற்பத் தாம் பெற்ற இறைஞானத்தினை மற்றவர்களும் அறிந்து உய்யும்வண்ணம் அதனை முது சொத்தாக விட்டுச்சென்றுள்ளனர்.

ஞானிகளில் ஒரு சாரார் இறைவனை அருவமாகவே ஞானநிலையில் உணர்ந் தனர்; வேறொரு சாரார் பரம்பொருளை அருவுருவமாகக் கண்டனர். இன்னுமொரு சாரார் உருவமாகவே இறைவனைக் கண்டனர். இம்மூன்று நிலைகளிலும் இறைவனை வழிபட்டுய்யும் முறை இந்துசமயத்திலே தொன்றுதொட்டு நிலவிவருகின்றது. ஆன்மீக நிலையிலே மிக மேம்பட்ட வர்களே கடவுளை அருவநிலையில் அறியமுடியும். ஆனால் பெரும்பாலானோர் உருவவடி விலேயே இறைவனை எளிதில் வணங்கி இவ்வுலக, மறுவுலக நன்மைகளைக் குறிப்பாக ஆன்ம ஈடேற்றத்தைப் பெறவிரும்பி வந்துள்ளனர். எனவே, ஏதோவகையில் குணம், குறியீடு, வடிவம் வாய்ந்தவனாக இறைவனை வருணிக்கும் முறை ஏற்பட்டுள்ளது. இறைவனுக்குரிய பல்வேறு வடிவங்களும் சமய, தத்துவக் கருத்துக்கள் பொதிந்துள்ள வையாகவும், சிறந்த அழகியல் அமிசங்கள் பொருந்தியவையாகவும் விளங்குகின்றன. எனவே, இவை மக்களைக் கவரும்வகையிலும் அமைந்துள்ளன. இறைவனுக்கு உருவமளித்து அவனை வழிபட்டாலும், அதற்கு அப்பால், அருவுருவ, அருவநிலையிலும் அவன் உள்ளான் என்பதும் ஈண்டுக் குறிப்பிடற்பாலது. எந்நிலையிலும், அன்பர்கள் தத்தம் சமய, ஆன்மீக நிலைக்கேற்பக் குறிப்பிட்டநிலையில் இறைவழிபாடு செய்து வந்துள்ளனர்.

ஆன்மாக்களின் ஈடேற்றத்திற்காகப் பல்வேறு வடிவங்கள் தாங்கித் திருவருள் பாலிக்கும் இறைவனுக்கும், ஆன்மாக்களுக்கும் இடையிலுள்ள தொடர்புகள் பலவகையாகப் பாவனை செய்யப்படும். தந்தை - மகவு, தாய் - சேய், ஆண்டான் - அடிமை, நாயகன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயகி, குரு - சிஷ்யன் எனப்பலவாறு இறைவன் - ஆன்மா தொடர்புகள் காலந்தோறும் ஞானிகளாலும், அருளாளர்களாலும், பிறராலும் விளக்கப்பட்டுள்ளன.

இவற்றுள்ளே குரு - சிஷ்ய பாவனையில் இறைவன் - ஆன்மா தொடர்புகள் கூறும் முறை குறிப்பிடத்தக்கது. மேற்குறிப்பிட்ட பல்வேறு பாவனைகளில் இறைவன் - ஆன்மா தொடர்புகள் ஒரு தலைச்சார்பாக மட்டுமன்றி இருதலைச் சார்பாகவும் நோக்கப்படும்.

ஆன்மா இறைவனை நாடுவது போல இறைவனும் ஆன்மாவை ஈடேற்றும் வகையில் செயற்படுகிறான். ஆன்மா இறைவனை நன்கு அறிவதற்கு இறைவன் திருவருள் கிட்டவேண்டும். இதனை மணிவாசகர் "அவனருளாலே அவன் தாள் வணங்கி" என அருளியுள்ளார். இந்து சமயமரபிலே பல தெய்வங்கள் வழிபடப்பட்டாலும் அவர்கள் அனைவரும் ஒரே தெய்வத்தின் பலவேறு வடிவங்கள் என்றே கொள்ளப்படுகின்றன. இக்கருத்தினை இந்து சமயத்தின் முதனூலான இருக்கு வேதம் "ஏகம் ஸ்த்விப்ராஹ பஹுதா வதந்தி" (உண்மைப் பொருள் ஒன்றே ஞானிகள் அதனைப் பலவாறு கூறுவர்) எனக் கூறுகின்றது. வைசித்தாந்த நூல்களிலொன்றான சிவஞான சித்தியார்,

" யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வமாகி யாங்கே
மாதொரு பாகனார் தாம் வருவார்"

எனவும் கூறியிருப்பது கவனித்தற்பாலது.

இறைவனைக் குருவாக உருவகித்துக் கூறும் மரபு மிகமுக்கியமான தொன்றாகும். குரு எனில் அறியாமையை நீக்குபவர், கனமானவர், மதிப்பிற்குரியவர் எனப்பல பொருள் படும். இங்கு அறியாமை என்பது உலகியல் ரீதியிலான அறிவின்மையினை மட்டுமன்றி, ஆன்மீக ரீதியிலான அறிவின்மையையும் குறிக்கும். அறியாமையை நீக்கி, அறிவு வெளிச் சத்தைத் தருபவராக மட்டுமன்றி, அஞ்ஞானத்தை நீக்கி மெய்ஞ்ஞானத்தை வழங்குபவராகவும் குரு விளங்குகின்றார். ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங் களாலே கட்டுப்பட்டு அல்லலுறும் ஆன்மாக்களை ஈடேற்று முகமாக இறைவன் தானே குருவாகவும் தோன்றுவார். இவ்வாறு இறைவனே ஞானாசிரியனாகப் பலரை ஆட்கொண்டு அருள்பாலித்துள்ளார். இதனையே " தம் முதல்குருவுமாய் " எனச் சிவஞானபோதம் கூறும் சைவசமய குரவரர்களில் ஒருவரான மணிவாசகரைச் சிவபிரான் ஞானாசிரியனாக எழுந்தருளி ஆட்கொண்டார். இதனை மணிவாசகர்,

" தேன்பழச்சோலை பயிலும் சிறுகுயிலேயிது கேள் நீ
வான் பழித் திம்மண் புகுந்து மனிதரை ஆட்கொண்ட வள்ளல்
ஊன் பழித் துள்ளம் புகுந்தென் உணர்வதுவாய வொருத்தன்
மான் பழித் தாண்ட மெல் நோக்கி மணாளனை நீவரக் கூறுவாய்"

என இரத்தினச் சுருக்கமாகக் கூறியுள்ளார்.

சிவபிரான் கல்லால மரத்தின் கீழே தென்திசை நோக்கிய தக்ஷிணாமூர்த்தித் திருவுருவம் தாங்கிய இளவலாகச் சனகர் முதலிய நான்கு வயது முதிர்ந்த முனிவர்களாகிய சிஷ்யர்களுக்குச் சொற்களாலன்றி மௌனநிலையிலே சின்முத்திரை மூலம் மெய்ஞ்ஞானத்தை உணர்த்தினார். அவர்களுடைய ஐயப்பாடு முற்றாக நீங்கிற்று. இதைத் தக்ஷணாமூர்த்தி ஸ்தோத்திரம்

" சித்ரம் வடதரோர் மூலே விருத்த சிஷ்யாஹ குரூர்யுவா!
குரோஸ்துமௌனம் வ்யாக்யானம் சிஸ்யாஸ்தே சின்னசம் சயாஹ" !!

எனச் சுருக்கமாகவும், தெளிவாகவும் கூறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கே குரு இளமையானவராகவும், மாணவர்கள் முதியவர்களாகவும் விளங்குகின்றனர். இறைவன் பழைமைக்குப் பழைமையானவன், புதுமைக்கும் புதுமையானவன், அறிவு - மெய்ஞ்ஞானம் பெறுதற்கு வயதுத்தடையில்லை. இங்கு ஞானமே - அறிவே முக்கியம். வயதன்று.

சிவபிரானின் திருக்குமாரர்களில் இளையவராகிய முருகன் அல்லது குமரன் தந்தைக்கும் குருவாக விளங்கியவர், குமரன் எனும்பதம் அவர் என்றும் இளமையானவர் என்பதைச் சுட்டும். உலகத்தைத் துன்புறுத்தி வந்த சூரபன்மன் முதலிய அசுரர்களைத் தண்டித்து உலகினைக் காப்பாற்றுவதற்காக ஆதிமூலநாயகனாகிய சிவபெருமானே முருகனாக வடிவம் தாங்கினார். இக்கருத்தினை முருகன் பெருமையையும், சிறப்புக் களையும் விரிவாக எடுத்துக் கூறும் கந்தபுராணம் தெட்டத்தெளிவாகக் குறிப்பிடுகிறது.

" ஆதலின் நமது சத்தி அறுமுகன் அவனும் நாமும்
பேதகமன்றால் நம்போற்பிரிவிலன் யாண்டும் நின்றான்
ஏதமில் குழவிபோல் போல்வான் யாவையு முணர்ந்தான் சீரும்
போதமில் அழிவில் வீடும் போற்றினர்க் கருளவல்லான்"

எனச் சிவபிரானே கூறியுள்ளதாகக் கந்தபுராணம் சிறப்பித்துக் கூறும்.

மேலும்

" செம்மை ஞானசத்தித் திருவுருக் கொண்ட செம்
லெம்மின் வேறல்லன் யாமு வனின் லேற்றல் லோங்கண்டீர்"

எனத் தணிகைப்புராணமும் இவ்வாறே கூறியிருப்பதும் மனங்கொளற்பாலது.

பரம்பொருளே (சிவபிரானே) பாலனாக, குமாரனாக விளங்கும் தன்மையை உணராத கர்வம் கொண்ட பிரமா, குமரனை அவமதித்தது மட்டுமன்றி, பிரணவத்தின் உட்பொருளை அறியாது மதிகலங்கியபோது முருகன் அவரைத் தண்டித்துத் திருவருள் பாலிக்கும் பாங்கில் சிறையிலடைத்துத் தாமே படைத்தலையுஞ் செய்யத் தொடங்கினார். இதனால் அச்சமுற்ற திருமால் முதலிய தேவர்கள் நிலைமையைச் சிவபிரானுக்கு எடுத்துக் கூறினர். பின்னர் சிவபிரான் தாமே முருகனிருந்த இடத்திற்குச் சென்று பிரமாவைச் சிறையிலிருந்து விடுவிக்குமாறு மகனிடம் கூறினார். முதலிலே இதற்கு உடன்படாத முருகன் பின்னர் பிரமாவை விடுதலை செய்தார். விடுவிக்கப்பட்ட பிரமா சிவபிரானையும், முருகனையும் வணங்கி உய்தி பெற்றார். பின்னர் பிரணவப் பொருளைத் தமக்கு உபதேசிக்குமாறு சிவபிரான் முருகப்பிரானிடம் கேட்க, அவர் அவ்வுபதேசத்தைச் சிஷ்ய பாவனையிலே சிவபிரான் விளங்கினாற்றான் உபதேசிக்கலாம் எனக் கூறினார். எனவே அதற்கு உடன்பட்ட சிவபிரான் தாம் சிஷ்யனாகப் பாவனை செய்ய முருகன் குருவாகப் பாவனைசெய்து பிரணவத்தின் உட்பொருளைத் தந்தைக்கு உபதேசித்தார். தந்தையும் மிக்கமகிழ்ச்சியுற்றார். இங்கு தந்தையிலும் சிறப்புள்ளவராகத் தனயனான முருகப்பெருமான் விளங்குகின்றார். அதேவேளையில் தம்மிலும் பார்க்கத் தம்மக்கள் சிறப்புறுவதையே பெற்றோர் பெரிதும் விரும்புவர். இக்கருத்துத் திருவள்ளுவர் கூறும்

"தம்மின் தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க்கு எல்லாம் இனிது"

எனும் குறளை நினைவூட்டுகின்றது. தந்தைக்கு உபதேசம் செய்த தனயனாகிய முருகனை இதனால் சுவாமிநாதன் (சிவனுக்கும் தலைவன்), சிவகுரு, சிவஸ்வாமி எனப்பலவாறு சிறப்பித்து வருணிக்கப்படுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு குருமூர்த்தியாக விளங்கும் முருகப்பெருமான் அகத்தியமுனிவர், நக்கீரர், ஒளவையார், கச்சியப்பர், குமரகுருபரசுவாமிகள் முத்துஸ்வாமி தீக்ஷிதர், யாழ்ப்பாணத்துச் செல்லப்பாசுவாமிகள், யோகர்சுவாமிகள் முதலிய பல அருளாளர்களுக்கு குருவடிவிலே திருவருள் பாலித்துள்ளார். ஒவ்வொருவருடைய உள்ளமாகிய குகையிலே குகனாக - வெளியே புலப்படாத குருவாக அவர் மிளிர்கிறர். உள்ளமாகிய குகைக்கோவிலிலே குன் றாத ஒளியாக இலங்குகின்றார். அவரை மெய்யன்போடு வணங்கினால் ஒளியாகவோ, வேறுவடிவிலோ தோன்றி அனைவரையும் ஈடேற்றுவார். பல்வேறு இன்னல்களும் நிகழ்ந்து கொண்டிருக்கும் இக்கலியுகத்தின் துன்பங்களைத் துடைக்கும் கலியுகவரதனாக அப்பெருமான் விளங்குகின்றார். எனவே அவரை உள்ளன்போடு வணங்கி அனைவரும் இகபர இன்பங்கைளைப் பெறுவார்களாக!



இந்தியாவிலிருந்து வருகைதந்த சேக்கிழார் அடிப்பொடி அவர்கள் இந்துசமயப் பேரவையின் சைவச் சிறுவர் இல்லத்திற்கு சமூகந்தந்த வேளை அருட்கவி விநாசித்தம்பி அவர்களால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். அவருக்கருகே சிறுவர் இல்லப்பொறுப் பாளர் திரு.வை.தர்மராஜாவும் செயலாளர் திரு.சி.சக்திகிரீவனும் உள்ளனர்.

## செய்தித்துளி

26.10.2001ல் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய முன்னை நாள் அதிபர் ஆசிரியமணி அ.பஞ்சாட்சரம் அவர்களுக்குப் பாராட்டுவிழா நடைபெற்றது. எழுபத்தைந்தாண்டுகள் நிறைவை யொட்டி ஒரு பாராட்டு விழாமலரும் வெளியிட்டுப் பாராட்டு விழாச் சபையினர் அவரைக் கௌரவித்தனர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# குமாரதந்திரம் கூறும் சுப்ரம்மணியரின் மூர்த்திபேதங்கள்

பிரம்மஸ்ரீ ச.பத்மநாபன்



குமாரதந்திரம் மூலசிவாகமங்கள் இருபத்தெட்டினுள் இருபத்திரண்டாவதும், ஈசான முகத்திலிருந்து தோன்றிய லலிதாகமத்தின் உபாகமங்களுள் ஒன்றும் ஆகும். சிவாகமங்களின் உபாகமங்களுள் ஒன்றுமாக விளங்கும் இந்நூல் தந்திரம் எனும் பெயர்தாங்கியதாக சுப்ரம்மண்யாலயத்தின் ஆலய அமைப்பு விதியையும்; கர்ஷணம், பிரதிஷ்டை, உற்சவம், பிராயச்சித்தம், நித்யபூஜை முதலானவற்றைக் கூறும் தனித்துவம் மிக்கது. இத்தகைய சிறப்புமிக்க இந்நூலில் கூறப்படும் சுப்ரம்மண்யரின் பதினாறு வகையான மூர்த்தி பேதங்களே இங்கு நோக்கப்படுகின்றன.

சிவாகமங்களின் உற்பத்தியினை ஒவ்வோராகமத்தின் தந்திராவதாரபடலம் கூறுகின்றது. குமாரதந்திரம் எனும் இவ்வுபாகமம் - குமாரக் கடவுளின் அருளைப் பெறும் பொருட்டுச் செய்யப்படும் கிரியைகளின் விதியைக் கூறும் நூல் - எனும் பொருள்படும். ஆகமம் - தந்திரம் என்றும் அழைக்கப்படும். குமாரதந்திரம் எனும் இவ்வாகமம் சதாசிவனது ஐந்து முகங்களிலிருந்தும் தோன்றிய முனிவர்களுள் ஒருவரான கௌசிக முனிவருக்கு சிவனால் உபதேசிக்கப்பட்ட சிறப்புடையது. இந்நூலில் ஐம்பத்தொரு படலங்களும் 3523 சுலோகங்களும் உள்ளன. மேலும், இந்நூலோடு சயன விதிபடலமும் உண்டெனக் கூறப்படுகின்றது.

இறைவனின் திருவுருவச் சிறப்புக்களை சிவாகமங்களும் சிற்ப சாஸ்திரங்களும் சிறப்பாக எடுத்தியம்புகின்றன. உரிய விதிப்படி அமையவேண்டிய ஒரு மூர்த்தியின் லட்சணங்களை பிரதிமாலட்சணவிதி சிறப்பாகக் கூறுகின்றது. ஏனைய இடங்களில் தியான ஸ்லோகங்கள் கூறப்படுவதும் உண்டு. இந்நிலையிலேயே சுப்ரம்மண்யரின் மூர்த்தி பேதங்கள் பதினாறின் அமைதிகளைக் குமாரதந்திரம் மந்திரோத்தாரவிதி படலம் " ஞானசக்திதரன், ஸ்கந்தன், தேவசேனாதிபதி, சுப்ரம்மண்யன், கஜாருடன், சரகான சம்பவன், (சரவணபவன்), கார்த்திகேயன், குமாரன், ஷண்முகன், தாரகாந்தகன், சேனானீ, ப்ரம்ம சாஸ்தா, வள்ளிகல்யாண சுந்தரன், பாலன், க்ரௌஞ்சபேத்தா, சிகிவாகனன் " எனக் கூறுகின்றது. இப்பெயர்களோடு சுவாமி எனும் பெயர்களை இணைத்து அழைப்பதும் மரபாகவுள்ளது.

பொதுவாக சுப்ரம்மண்யரின் மூர்த்திபேதங்களை நோக்குபோது வேறுபல பெயர்களில் நோக்கப்படும் தன்மைகள் பல காணப்படுகின்றன. சிறப்பாக அம்சுமத் பேதாகமம், காரணாகமம், காமிகாகமம், சுப்ரபேதாகமம், சில்பரத்தினம், விஷ்ணுதர்மோத் தரபுராணம், ஸ்ரீதத்துவநிதி ஆகியன தனித்துவமான தன்மையில் சுப்ரம்மண்யருக்குரிய வேறுவிதமான மூர்த்தி பேதங்களைக் கூறுகின்றன. பல்வேறு ஆகமங்களிலிருந்தும், இதிகாச புராணங்களிலிருந்தும், நூல்கள் பலவற்றிலிருந்தும் சதாசதானி நா.கதிரைவேற்பிள்ளை அவர்களால் கொடுக்கப் பெற்றிருக்கும் சுப்ரம்மண்ய பராக்கிரமத்தில் 88 வகையான மூர்த்தி பேதங்கள் சுட்டப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

சுப்ரம்மண்யரின் உற்பத்தி பற்றி பல்வேறு கருத்துக்கள் காணப்படுகின்றன. அவற்றினை இதிகாசங்களும் புராணங்களும் கதைகளாகச் சித்தரிக்கின்றன. வற்றினூடாகவே சுப்ரம்மண்யரின் தெய்வீகவியல் வரலாறு நோக்கப்படுகின்றது.பழந்தமிழ் இலக்கியங்களான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிபாடல், திருமுருகாற்றுப்படை ஆகியவற்றில் சுட்டப்படும் முருகன், செவ்வேள் முதலான தெய்வங்களோடு தொடர்புபடுத்தப்படும் சுப்ரம்மண்யரை வடமொழியில் பல ஸ்தோத்திரங்கள் போற்றுகின்றன. குமாரனின் பிறப்புப் பற்றிக் கூறும் மஹாகாவியமாக மஹாகவி காளிதாசரின் குமாரசம்பவ மஹாகாவியம் விளங்குகின்றது. தமிழிலும் பல தோத்திரங்கள், துதிகள் காணப்படுகின்றன.

சுப்ரம்மண்யரின் மூர்த்திபேதங்களுள் ஷண்முகமூர்த்தியை உத்தம தசகால அளவில் அமைக்கவேண்டும் என்று அம்சுமத்பேதாகமம் கூறுகின்றது. பொதுவாக சுப்ரம்மண்யரின் திருவுருவத்தை கன்யதசதால அளவுமுறையில் அமைப்பது மரபும் பொதுவிதியுமாகும். சுப்ரம்மண்யருக்குரிய லட்சணங்களை குமாரதந்தரத்தின் 24 வது படலமான ப்ரதிமாலக்ஷணவிதி படலம் ஒவ்வொரு மூர்த்திக்குமுரிய அளவுப் பிரமாணங்களை நன்கு தெளிவுபடுத்துவதோடு ஆயுதங்களையும் அணிகலன்களையும் தெளிவாகக் கூறி விளக்குகின்றது. குமாரதந்திரம் மந்திரோத்தாரவிதி படலம் கூறும் சுப்ரம்மண்ய சோடசமூர்த்தி தியானபேதங்களில் குறிப்பிட்டபடி முறையே நோக்குவோம்.

### 1. (ஞான) சக்திதரஸ்வாமி

'ஒருமுகமும் இருகைகளும் உடையவரும்; இடது கையில் வஜ்ரத்தையும் வலது கையில் சக்தியையும் ஆயுதமாகக் கொண்ட இச்சா ஞானக்ரியா சக்திரூபமாக விளங்கும் சக்திதரனை வழிபடுகிறேன்'.

### 2. ஸ்கந்தஸ்வாமி

'வழிபடுவோர்க்கு கல்ப்பவ்ருக்ஷம்போல் விளங்குபவரும், தாமரையின் சிவப்பு நிறத்தையுடையவருமாகிய ஸ்கந்தனை; இருகைகளுடையவரும், அனாதியானவரும், ஒரு முகமுடையவரும், இடது கையைத் தொடையில் தரித்தும் வலது கையில் தண்டத்தைத் தரித்தும் கௌபீனத்தை அணிந்தவருமாகிய காத்யாயனீயின் மகனை நான் வழிபடுகின்றேன்'.

### 3. ஸேனாதிபதி

'சூரியனைப் போல் பிரகாசம் உடையவரும் பன்னிரண்டு கண்களும், ஆறுமுகங்களும், புன்சிரிப்பும் உடையவரும் இடது தொடையில் தேவசேனை ஸ்வாமியை இணைத்தவளாக விளங்க மார்புக்கு மேலே கையை உடையவராக வலது கையில் (மேலிருந்து கீழாக முறையே) சக்தி, பாணம், கட்கம், கொடி, கதை, அபயம் இவைகளையும் இடது கையில் (மேலிருந்து கீழாக முறையே) வஜ்ரம், வில், கேடயம், தாமரை, சூலம், வரதம் ஆகியவற்றைத் தாங்கியவராக விளங்கும் சேனாதிபதியை வணங்குகின்றேன்'.

### 4. சுப்ரம்மண்ய ஸ்வாமி

'குங்குமச் சிவப்பு நிறமும் சந்திரனின் ஒளியுடைய முகமும் கேயூரம் முதலிய சிறந்த ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டவரும் சுவர்க்கம் முதலிய சௌக்கியத்தை அளிக்கக் கூடியவரும், வலது இருகைகளில் மேலே தாமரையும் கீழே அபயமும், வலது இரு கைகளில் மேலே சக்தியும் கீழே சேவலும் தாங்கி சிவப்பு ஒளியின் சிறப்போடு (காந்தியோடு) பிரகாசிப்பவருமாகியபயத்தைப் போக்கும் சுப்ரம்மண்யரை வணங்கி உபாசிக்கின்றோம்'.

(இன்னொருவிதம்)

'ஒரு முகமும் இருகைகளும் உடையவரும் இடது கையினைத் தொடையில் தரித்தும், வலது கையில் அபயம் தரித்தும் இருக்கின்ற சிவப்பு சூரியஒளி பொருந்திய (பிரகாசமுடைய) சுப்ரம்மண்யரை உபாசிக்கின்றோம்'.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**5. கஜவாஹன ஸ்வாமி**

'ஒரு முகமும் இரு கண்களும் இடது இருகைகளில் வரதம், சேவல் ஆகிவற்றைத் தரித்தவரும், வலது இரு கைகளில் அபயமும். சக்தியும் தரித்தவரும், தவத்தோடு கூடியவரும், சிவனின் மகனும், யானையை வாகனமாக உடையவரும், இஷ்டசித்தியை அளிப்பவருமாகத் தினமும் வணங்குகின்றேன்'.

**6. சரவணபவ ஸ்வாமி**

' இடது கைகளில் சக்தி, கொடி, சேவல், தண்டம், அம்பு, வரதம் என்பவற்றையும்: வலது கைகளில் மணி, தாமரை, பாசம், டங்கம், வில், அபயம் ஆகியவைகளை உடைய வராகவும் மஞ்சள் நிறமும் அழகும் நிறைந்தவராகவும், பன்னிரண்டு கைகளையுடையவராகவும், தேவர் சமூகத்தால் உபாசிக்கப்படுபவரும், நல்லோரால் பூஜிக்கப்படுபவருமாகிய சரவணோத் பவரை ஆறுமுகங்கள் உடையவராகப் பாவனை செய்கிறேன்'.

**7. கார்த்திகேய ஸ்வாமி**

'இடது (மூன்று) கைகளில் ( கீழிருந்து மேலாக) வரதம், குலிசம், கேடம் என்பவற்றையும், வலது (மூன்று) கைகளில் ( கீழ் இருந்து மேலாக ) அபயம், சக்தி, கட்கம் என்பவற்றைத் தாங்கிய சிவந்த சூரியப் பிரகாசத்தோடு கூடியவரும், நல்லோரால் பூஜிக்கப்படுகின்றவரும், தாமரையை ஒத்த ஆறுமுகங்களையுடையவருமாகிய கார்த்திகேயனை வணங்குகின்றேன்'.

**8. குமாரஸ்வாமி**

'வலது (இரு) கைகளில் கூரான சக்தி, வாள் ஆகியனவற்றையும், இடது (இரு) கைகளில் முகத்தை நோக்கிய சேவல், கேடகம் ஆகியனவற்றையும் தரித்தவராகிய வள்ளியின் கணவரை, அறிவாளிகளின் கண்களில் பூரணநிலவு போன்று விளங்குபவரும் மங்களத்தையே வழங்குகின்றவருமாகிய குமாரனைச் சரணடைகின்றேன்'.

**9. ஷண்முக ஸ்வாமி**

' சிவந்த காந்தியை உடையவரும், அம்புகளை எய்வதால் அபயமளிப்பவரும், சிறந்த மயிலின் மேல் விளங்குபவரும் தேவர்களான போர்ப்படைகளை உடையவரும், இனிமையான வண்டுகளின் நாயனும் தாமரை போன்றவனும், ஆறுமுகங்களையும் பன்னிரு கண்களையும் உடையவரும், வலது ( ஆறு) கைகளில் (மேலிருந்து கீழாக) சக்தி, பாணம், கிருபாணம், கொடி, கதை, அபயம் என்பவைகளையும், இடது (ஆறு) கைகளில் (மேலிருந்து கீழாக) வஜ்ரம், அம்பு, தாமரை, கேடயம், சூலம், வரதம் என்பவற்றைத் தரித்தவருமாக வணங்குகின்றேன்'.

**10. தாரகாரிஸ்வாமி**

' இடது (ஆறு) கைகளில் (கீழிருந்து மேலாக) வரதம், அங்குசம், கொடி, கேடகம், அம்பு, வஜ்ரம் என்பவைகளையும்; வலது (ஆறு) கைகளில் (கீழிருந்து மேலாக) அபயம், பாசம், சக்ரம், வாள், முசலம், சக்தி என்பவைகளையும் பன்னிரு கைகளில் தாங்கிய கோடிசூரிய (சிவந்த) கிரணங்களையொத்த தேவர்களின் அழிவுக்குக் காரணமாகிய தாரகனை அழித்த தாரகாரியை வழிபடுகின்றேன்'.

**11. ஸேனாதிபதி ஸ்வாமி**

'வலது (ஆறு) கைகளில் (கீழிருந்து மேலாக) அபயம், வாள், பாசம், அங்குசம், சக்தி, சூலம் ஆகியவைகளையும் இடது (ஆறு) கைகளில் (கீழிருந்து மேலாக) வரதம், குலிசம், பாசம், பத்மம், தண்டம், கதை என்பவைகளையும் இருமருங்கிலுமுள்ள பன்னிரு கைகளில் தாங்கியவரும், பன்னிரு தாமரைபோன்ற கைகளையுடைய தேவசேனாதிபதியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணங்குகின்றேன்'.

### 12. ப்ரம்ம சாஸ்தா ஸ்வாமி

'இடது (இரு) கைகளில் (கீழிருந்து மேலாக) வரதம், குண்டிகை என்பவைகளையும் வலது இருகைகளில் ( மேலிருந்து கீழாக) அக்ஷமாலை, அபயம் என்பவற்றையும் தாங்கியவரும் விசாக நட்சத்திரத்தில் தோன்றியவரும் காட்டில் பிறந்த கண்போன்ற வள்ளியோடு கூடியவரும் ஒரு முகத்தையுடைவரும் காட்டில் பிறந்த வள்ளியின் கட்டளைக்குக் கீழ்ப்படிபவருமாகியவரை வணங்குகின்றோம்'.

### 13. வள்ளீகல்யாண சுந்தரஸ்வாமி

'வலது (இரு) கைகளில் (மேலிருந்து கீழே) கெண்டி, அபயம் என்பவைகளையும் இடது (இரு) கைகளில் (மேலிருந்து கீழாக) அட்சமாலை, ஊருஹஸ்தம் உடையவருமாக வலதுபுறம் வள்ளியும் முன்னே அக்கினி வேதிகைக்கு இருபுறத்திலும் அக்கினி வளர்ப்பவர்களும் மந்திரம் சொல்பவரும் இருக்க வள்ளிக்கு வலது புறத்தில் ஜலபாத்தி ரத்துடன் சங்கு, சக்கரம் தாங்கிய விஷ்ணு எல்லா லட்சணங்களோடும் விளங்க எல்லா தேவகணங்களும் வணங்கும் வள்ளிகல்யாண மூர்த்தியை வணங்குகின்றேன்'.

### 14. பாலஸ்வாமி

'வலதுகையில் (அங்கையில்) தாமரையையும் இடது கையினை கடிஹஸ் தமாகக் கொண்டவரும் தாமரையின் காந்தியை நிகர்த்த ஒருமுகத்தினையுடையவரும், இளமையினை வளரச் செய்யும் சிவனதுமகனும் மிகுந்த பலம்பொருந்திய தோள்களையுடைய பாலஸ்வாமியை வணங்குகின்றேன்'. (இன்னொருவிதம்)

'ஒருமுகமும், இருகண்களும், இருகைகளிலும் தாமரைகளை ஏந்தியவரும், அந்த ணருக்கு விருப்பமானவரும் சூரியனை ஒத்த ஒளியுடைய பாலரூபம் உடையவரை வணங்கு கின்றேன்'.

### 15. க்ரௌஞ்சபேத ஸ்வாமி

வலது (நான்கு) கைகளில் (கீழிருந்து மேலாக) அபயம், க்ருபாணம், சக்தி, பாணம், என்பவைகளையும் இடது (நான்கு) கைகளில் (கீழிருந்து மேலாக) வரதம், குலிசம், அம்பு, கேடயம் என்பவைகளைத் தரித்தவரும், எட்டுக்கைகளிலும் ஆயுதங்களைத் தாங்கிய தேவர்களின் சேனைத்தலைவரும், தாமரைபோன்ற ஆறுமுகங்களையுடையவரும் க்ரௌஞ் சத்தைப் பிழந்தவரை வழிபடுகின்றேன்'

### 16. சிக்வாஹன ஸ்வாமி

'வலது (இரு) கைகளில் (கீழிருந்து மேலாக) அபயம், வஜ்ரம் என்பவைகளையும் இடது (இரு) கைகளில் (கீழிருந்து மேலாக) வரதம், சக்தியையும் உடையவரும் ஒரு முகமுடையவரும், தேவலோகப் பகைவர்களை அழித்து இடையூறு களைந்தவரும், ருத்ரபவனான மயிலை வாகனமாக உடையவரை வணங்குகின்றேன்.'

சுப்ரம்மண்யரின் மூர்த்திபேதங்கள் இரண்டு கைகள் முதல் பன்னிரண்டு கைகள் உடையவராகவும் ஒருமுகம் அன்றில் ஆறுமுகங்களையுடையவராகவும் இருக்கும் அதேவேளை ஒருடல் இருபாதங்கள் அடிப்படையாக அமைகின்றன. சுப்ரம்மண்யரின் மூர்த்தி பேதங்களுள் ஒரு முகமுடைய மூர்த்திகளாக ஞானசக்திதரன், ஸ்கந்தன், சுப்ரம்மண்யன், சிகிவாஹனன், பாலஸ்வாமி, வள்ளிகல்யாணசுந்தரர், ப்ரம்மசாஸ்தா, குமாரசுவாமி, கஜாரூடஸ்வாமி ஆகியோரும் ஆறுமுகமுடையவர்களாக ஏனைய மூர்த்திகளான (தேவ) சேனாதிபதி, சரவணபவஸ்வாமி, கார்த்திகேயன், ஷண்முகன், தாரகாரி, சேனானீ, க்ரௌஞ்சபேத்தர் ஆகியோர் விளங்கும் அதேவேளை கார்த்திகேயன் ஆறுகைகளையும், க்ரௌஞ்சபேதத்தின் எட்டுக் கைகளையுடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வராகவும் விளங்குவது குறிப்பிடத்தக்கது. ஷண்முகஸ்வாமியின் ஆயுதங்களின் வரிசையிலும் ஒழுங்குகளிலும் குறிப்பாக பன்னிருகையோன் என (த்விஷட்புஜ) ஆறுவகைப் பேதங்கள் சுட்டப்படுகின்றன. இத்தோடு ஷண்முகரின் ஒவ்வொரு முகத்திலும் மூன்று கண்கள் இருப்பதாகச் சுட்டப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

சுப்ரம்மண்யரின் மூர்த்திபேதங்களுள் சக்தியுடன் கூடிய மூர்த்தி பேதங்களுள் வள்ளிதேவசேனாவுடன் கூடியவராக ஷண்முகரும், தேவசேனாவுடன் மட்டும் கூடியவராக சேனாபதி, ப்ரம்மசாஸ்தா ஆகிய மூர்த்திகளும் வள்ளியோடு மட்டும் கூடியவராக வள்ளி கல்யாண சுந்தரஸ்வாமி, குமாரஸ்வாமி ஆகியோரும் சுட்டப்படுகின்றனர். ஏனைய மூர்த்தி பேதங்கள் சக்திகளற்றவர்களாகவே சுட்டப்படுகின்றனர். மேலும், சக்தியற்று விளங்கும் மூர்த்திகள் யோகமூர்த்திகள் என்றும் குமாரதந்திரம் கூறுவதோடு சுப்ரம்மண்ய சுவாமிக்குரிய சக்திகள் இருக்கவேண்டிய லட்சணங்களையும் சுட்டுகின்றது.

சுப்ரம்மண்யர் இளமை வடிவமும் அழகிய அங்கமும், மங்களகரமான பார்வையும், கரண்டமகுடமும், உபவீதம், சன்னவீரம், உஷ்ணீஷம், கடிசூத்திரம், பத்ரகர்ணம், பல்வேறு வகையான குண்டலங்கள் பாதத்தில் நூபுரம் என்பவற்றுடன் எல்லா லட்சணங்களும், எல்லா ஆபரணங்களும் அணிந்தவராகச் சுட்டப்படுகின்றார். இதனைக் குமாரதந்திரம் பிரதிமா லக்ஷணவிதிபடலம் சிறப்பாகக் கூறுகின்றது.

சுப்ரம்மண்யரின் மூர்த்தியின் நிலையினைக் கொண்டு யோகமூர்த்தி, போகமூர்த்தி, யானமூர்த்தி என மூன்றாக வகுக்கப்படுகின்றது. இவர்கள் முறையே இருந்தவராகவும், நிற்பவராகவும், வாகனத்துடன் கூடியவராகவும், விளங்குவர். இவர்களே முறையே சாத்விகம், ராஜசம், தாமசம் எனும் முக்குணத் தன்மைகளோடு இருகைகளையும், நான்கு கைகளையும், பன்னிரு கைகளையும் உடையவராக விளங்குவர் எனக் குமாரதந்திரம் சுட்டுகின்றது.

குமாரதந்திரம் இவ்விதம் சுட்டிநிற்க ஸ்ரீதத்துவநிதி சுப்ரம்மண்யரை ஆறுபெயர் கொண்டவராக அக்னிஜாதசுப்ரம்மண்யர், சௌரபேயசுப்ரம்மணியர், காங்கேயசுப்ரம்மண்யர், குஹசுப்ரம்மண்யர், பிரம்மசாரிசுப்ரம்மண்யர், தேசிகசுப்ரம்மண்யர் எனச் சுட்டி நிற்கின்றது.

இவ்வாறாக சக்தியின் அம்சமாகவும், சிவசக்திகளின் தோற்றமாகவும் மக்களுக்கு அருள்பாலிப்பவராகவும் விளங்கும் சுப்ரம்மண்யரின் மூர்த்தி பேதங்களை விதிநூலான குமாரதந்திரம் கூறும் சிறப்பினையும் ஏனைய நூல்களாக சிவாகமங்கள், சிற்பசாஸ்திரங்கள் சுட்டும் தன்மைகளையும் நோக்கலாம். ஆன்மாக்களின் துயர்களைந்து அருள்சுரக்கும் மூர்த்தியாகிய சுப்ரம்மண்யரை வழிபட்டு இஹபர சுகங்களைப் பெற்றுய்வோமாக!

**உசாத்துணை நூல்கள்**


E.M.கந்தசாமிசர்மா (பதி) (1974) *குமாரதந்திரம்* தென்னிந்திய அர்ச்சகர் சங்கம், சென்னை.

சகம் *ஸ்ரீதத்துவநிதி* , 1823 மும்பாய்

கதிரைவேற்பிள்ளை.நா (1960) *சுப்பிரமணிய பராக்கிரமம்*, சென்னை.

கணபதிஸ்தபதி.வை (1978) *சிற்பச்செந்நூல்* தொழிநுட்பக்கல்வி இயக்கம், சென்னை

Gopinatha Rao T.A. (1992). *Elements of Hindu Iconography* Vol II. Part II New Delhi.

Kailasanatha Kurukkal.K *A Study of the Karthikeya Cult as refleeted in the Epics and puranas* University of Ceylon Review Vol XIX, No2, Oct - 1961.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லூர் முருகன்
தேரால் இறங்கிவரும் காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

# நீத்தார் அஞ்சலி

## ஹவாய் ஆதீன முதல்வர் சுப்பிரமணிய சுவாமிகள்

யாழ்ப்பாணம் சிவயோக சுவாமிகளின் சீடர்களில் ஒருவரும், அமெரிக்க ஹவாய் ஆதீன முதல்வரும், சிவஞானியுமான சிவாய சுப்பிரமணிய சுவாமிகள் சிவபதம் அடைந்தமை உலகெங்கும் வாழும் இந்துக்களுக்கு மாபெரும் இழப்பை ஏற்படுத்தி யுள்ளது.

சிவாய சுப்பிரமணிய சுவாமிகள் அவர்கள் மேற்கத்தய நடனக்கலையில் மிகுந்த திறமையுள்ளவராகத் திகழ்ந்தகாலத்தில், அவர் தமது கலை ஆர்வம் காரணமாக இந்தியா, இலங்கை போன்ற நாடுகளுக்கு விஜயம் செய்தபோது, யாழ்ப்பாணம் சிவயோக சுவாமிகளைச் சந்திக்க வேண்டியதாயிற்று. சிவயோக சுவாமிகளின் சந்திப்பின் பின் ஆத்மீக தாகமுள்ளவராகவும், சைவஞான விளக்கமுள்ளவராகவும் இவர் உயர்ந்தார். இவருக்கு ஞான உபதேசம் செய்த யோகர்சுவாமிகள் இவரது முதுகிலே ஓங்கிஅடித்து உனது குரல் சிங்கம்போல் உலகமெங்கும் ஒலிக்கப் போகிறது என்று ஆசீர்வதித்தார். இவரது ஆசி சுப்பிரமணியரை அமெரிக்க ஹவாய் ஆதீனத்தில் கடவுள் கோயிலை அமைப்பதற்கும், சைவ சித்தாந்த திருச்சபையை உருவாக்குவதற்கும், சைவாதீனத் தலைவராக விளங்குவதற்கும் வழிசமைத்தது. சிவயோக சுவாமிகளின் அருட்பார்வை பெற்றதிலிருந்து இவர் மாபெரும் சைவத்தொண்டுகளை உலகம் முழுவதிலும் ஆற்றி உள்ளார்.

இவர் 1984ஆம் ஆண்டு இறுதித் தடவையாக இலங்கைத் திருநாட்டிற்கு வருகை தந்தபோது, பல சைவநிறுவனங்கள் இவருக்குப் பெருவரவேற்பு அளித்துள்ளன. இவரது இறுதி வரவேற்பு இந்துசமயப் பேரவைச் செயலாளர் திரு.சி.சக்திகிரிவன் தலைமையில் ஏழாலையில் நடைபெற்றது.

சிவாய சுப்பிரமணிய சுவாமிகள் இலங்கைத் திருநாட்டில் இடம்பெற்றுவரும் இனமோதலைத் தடுத்துநிறுத்தி உண்மைச் சமாதானத்தை நிலைநாட்டுவதற்குப் பல வழிகளிலும் முயன்று வந்துள்ளார். எனினும் துரதிஷ்டவசமாக சுவாமிகளால் அளவெட்டியில் ஸ்தாபிக்கப்பட்ட ஆச்சிரமம் இராணுவ நடவடிக்கைகளின்போது அழிக்கப் பட்டமை பெருங்குறையை ஏற்படுத்தியுள்ளது.

இவரது சிவபதப்பேறு குறித்து மனமார்ந்த அஞ்சலிகளை ஸ்ரீபார்வதி சமேத பரமேஸ்வரனைத் தியானித்துச் சமர்ப்பிக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# அமரர் மகாலிங்கம் - 60வது ஜெயந்தி தினம்

திரு.சி.சக்திகிரீவன்

கூர்மை பொருந்திய அறிவாற்றல் படைத்தவர்கள் பதவி பட்டங்களைப் பெற்று விடுகின்றபோதும் மக்கட்பண்பை இழந்து கூத்தாடிக் கொள்கிற நிலையும் காணப்படுகின்றது. அத்தகைய நிலையினுள் அமிழாது மக்கட் பண்புள்ளவராக வாழ்நாள் முழுவதும் வாழ்ந்து அமரத்துவம் பெற்ற சிறப்பு முன்னாள் வலி தெற்குப் பிரதேச செயலாளரும் இந்து சமயப் பேரவை உபதலைவருமான அமரர் ஆறுமுகம் மகாலிங்கம் அவர்கள்பால் கண்டு மகிழக் கூடியதொன்றாக இருந்தது.

வள்ளுவர் பண்புடைமை எனும் அதிகாரத்தில் அறத்தின் போலும் கூர்மையை உடையவரேயாயினும், நன்மக்கட்கு உரிய பண்பில்லாதவராயினும் அவர் ஓர் அறிவற்ற மரத்தினுக்கு ஒப்பர் என்கிறார்.

" அரம்போலும் கூர்மைய ரேனும் மரம் போல்வர்
மக்கட்பண் பில்லா தவர் "

என்கிறார். எத்தகைய உயர்வை ஒருவன் பெற்றாலும், மக்கட்பண்பில்லா தொழிந்தானாயின் அவனுக்கும் பயனில்லை, அவனோடு சார்ந்தார்க்கும் பயனில்லாது போகிறது.

சிறுவனாக இருந்த காலந்தொட்டு பதவி, பட்டங்கள் பெற்று புகழ்பூத்துக் குலுங்கி வாழ்ந்தபோது கூட அமரர் மகாலிங்கம் என்றேனும் மக்கட் பண்பை இழக்காத புண்ணியப் பேற்றைப் பெற்றவராகக் காணப்பட்டார்.

## மும்மொழிப்புலமை பெற்றவர்

குப்பிளான் கிராமத்தில் சாதாரண குடும்பத்தில் பிறந்து கல்வியில் உயர்நிலை பெற்று வியக்கத்தக்க கண்ணியமிக்க பணிபல புரிந்த அமரர் மகாலிங்கம், தான் ஒரு கலைப்பட்டதாரி. ஒரு நிருவாக சேவை அதிகாரி, மும்மொழிப்புலமை பெற்ற சான்றோன், என்று தன்னுக்குள்தான் ஒருபோதும், இறுமாப்புக்கொள்ளாத பெருமகன். தனது இறுதிக் காலத்திலும் பாடையேறினும் பாடநூல் கைவிடாத் தனித்துவத்தை மிளிரவைக்கும் வகையில் யாழ்.பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் படிப்பைத் தொடர்ந்தார். அவரது பெறுபேறுகள் மிகச் சிறந்தனவாக அமைந்து காணப்பட்டதாகப் பல்கலைக்கழக வட்டாரங்களில் இருந்து அறியக் கூடியதாக இருக்கிறது.

இத்தகைய அறிவாற்றல் படைத்த அமரர் மற்றவரின் குறைகளைக் கண்டு கேலி செய்வதில் காலங்கழிப்பவரைக் கண்டிப்பதில் வல்லவர். எவரிலும் நிறைவைக் கண்டு மகிழ்ந்தவர். ஒருவர் தவறு இழைத்ததால் அந்தத் தவறை நிறுத்துவதற்கு ஓர் உபாயம் கண்டு அவரை நல்வழிப்படுத்தித் திருத்துவதில் மிகுந்த சாதுரியம் படைத்தவராகத் திகழ்ந்தார். சிறுமை கண்டிகழாச் சிறப்புப் பெற்ற சீராளன் எனினும் பெருமையைத் தேடி ஓடியலையாத பேராளனாகவே வாழ்ந்தார்.

இந்நாட்டில் தமிழினத்தின் அடிமை விலங்கு அறுக்கப்பட்டு விடிவுபெற்ற இனமாக வாழவேண்டும். இதற்காகத் தன்னாலியன்றதை வாழ்நாளிற் செய்ய வேண்டும் என ஏங்கிய படி வாழ்ந்தவர் அமரர் மகாலிங்கம். தமிழ் மக்கள் தமது பாரம்பரியங்களை இழந்து ஆதர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்று அனாதைகளாகி உலகம் முழுவதும் சிதறுண்டு வாழ்வதைக் கண்டு மனம் வெதும்பியபடி வாழ்ந்தவர்.

நமது நாட்டில் நடைபெறும் போரில் இந்துக்களுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகளை மூத்தண்யமாக எதிர்த்து இந்துக்களின் நலனைப் பேணப் பல தியாகங்களைச் செய்துள்ளார்.

1990ஆம் ஆண்டுக்குப்பின் நடைபெற்ற இரண்டாம் கட்டப்போரில் இந்துக்களின் வழிபாட்டுநிலையங்கள் குண்டு வீசியும், ஷெல்வீசியும் தாக்கி அழிக்கப்பட்டன. லட்சோப லட்சம் மக்கள் அகதிகளாக்கப்பட்டனர். பலர் அங்கவீனர் ஆக்கப்பட்டனர். பலசொத்துக்கள் நாசமாக்கப்பட்டன.

## இந்துசமயப் பேரவையை வழி நடத்தியவர்

இதனைக் கண்டு வீராவேசமாகக் கொதித்தெழுந்த பெருமை அமரர் மகாலிங்கத்தைச் சார்ந்தது. 1992ஆம் ஆண்டு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன சுவாமிகளினால் ஸ்தாபிக்கப் பட்ட இந்துசமயப் பேரவையை அமரர் ஆத்மஜோதி நா.முத்தையா போன்ற பல ஆத்மீகவாதி களுடன் சேர்ந்து சிறந்தமுறையில் வழிநடத்துவதற்கு உதவியவர் அமரர் மகாலிங்கம் என்றால் மிகையாகாது.

பதவி பட்டங்களுக்காக அலைந்துலையும் உலகில் நல்ல சிந்தனாசக்தி பெற்ற சீரிய வீரனாகித் தன்னையும் காத்து தான் சார்ந்த இனமத பிரதேச மக்களைக் காப்பாற்றத் தியாகத்துடன் உழைத்தவர். இந்துக்களின் நலனைப் பேணிப் போராட எவரும் முன்வராதபோது அமரர் மகாலிங்கம் துணிச்சலுடன் அதற்காகத் தன்னை அர்ப்பணித்துப் போராடினார்.

எமது மதத்தவர்கள் போரின் கொடுமையால் வாழமுடியாது தவிக்கும்போது அவர் களை மதமாற்றம் செய்யத் துடிப்பவர்களைப் பகிரங்க மேடைகள்தோறும் சாடி அவர்கள் கண்களை ஓரளவு திறக்க வைத்தவர்.

## சைவச் சிறுவர் இல்லங்களுக்குப் புத்துயிர்ப்பு வழங்கியவர்.

ஏழ்மை நிலையில் வாழும் எமது குழந்தைகளைப் பேணி வளர்ப்பதற்கு எமது இந்து நிறுவனங்கள் மூலம் நடாத்தப்படும், ஆதரவற்றோர் நிறைவாழ்வுச் சைவச்சிறுவர் இல்லங்களுக்குப் புத்துயிர்ப்பு வழங்கிய பெருமை அமரர் மகாலிங்கம் அவர்களைச் சார்ந்தது.

எமது ஆலய பரிபாலன சபைகளிலும், இந்துக்குருமார்களிடையேயும், ஏற்படும் பிணக்குகளைத் தீர்த்து நம்மவரை நெறிப்படுத்தியவர்.

அமரர் மேற்கொண்ட ஒப்பற்ற பணிகளை வாயால் வாழ்த்தி எழுத்திலடக்கிவிட முடியாது.

ஒருவரைக் குறைகூறித் தனது மேலதிகாரிகளுக்கு முதுகு சொறிந்து பதவி உயர்வு பெறும் கோழைத்தனம் உலகம் முழுவதிலும் பரந்துபடக் காணப்படுகின்றபோதும் அமரர் மகாலிங்கம் போன்றோரின் நிதானம் மிக்க வாழ்வாலும் கண்ணியம்மிக்க நடையாலும், இத்தனை இடர்பாட்டினுள்ளும், இந்த உலகம் இன்றும் உருண்டோடிக் கொண்டேயிருக்கின்றது.

## அற்புதமான ஆத்மீகவாதி

சாதிவெறி, சமயவெறி, இனவெறி, பிரதேசவெறி, பதவிவெறி என்றெல்லாம் கூத்தாடி இவற்றிற்கு முடிசூட்டமுயலும், இவ்வுலகில் அமரர் மகாலிங்கம் புதுமையான சிந்தனை யுள்ளவராகத் திகழ்ந்தவர். நெஞ்சில் வஞ்சகமற்றவர். அஞ்சாமை மிக்கவர். நல்ல ஆளுமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைத்தவர். சிறந்த ஒப்பற்ற பண்பாளன். யாருக்கும் அடிபணியாதவர். அற்புதமான மனிதநேயம் கொண்ட ஆத்மீகவாதி.

## இந்து நிறுவனங்களைச் சமூகப் பணிக்கு ஆற்றுப்படுத்தியவர்.

ஆலயங்களும், சமய நிறுவனங்களும் அறச்சாலைகளாக மாறவேண்டும் என்பதற்காக பல வகையில் பிரசாரங்களையும், உதவிகளையும் வழங்கி எமது நிறுவனங்களைச் சமயப் பணியோடு சமூகப்பணிகளுக்கும்,ஆற்றுப்படுத்திய பெருமை அமரர் மகாலிங்கம் அவர்களைச் சார்ந்தது.

இத்தகைய உயரிய சீரிய சிந்தனையாளனான அமரர் ஆறுமுகம் மகாலிங்கம் அவர்களின் 60 வது ஜெயந்தி தினம் ஏழாலை மேற்கு சத்தியபவனில் அமைந்துள்ள இந்துசமயப் பேரவைக் கைதடி சைவச்சிறுவர் இல்லத்தில் 08-11-2001 நடைபெற்றது.அன் றையதினம் அவர் பணிகளைப் போற்றியதோடு அவர் பணிகளைத் தொடர்வதற்கு திடசங்கற்பம் பூணுவோமாக.



அமரர் மகாலிங்கத்தினுடைய ஜெயந்திதின விழாவில் திரு.சி.சக்திகிரீவன் உரையாற்றுகின்றார். அருகில் தலைமைதாங்கிய திரு.ந.தெய்வேந்திரம் , பிரதேசசபைத் தலைவர் திருமதி.வா.பாஸ்கரன், திரு.ந.முருகையா, திருமதி.நாச்சியார் செல்வநாயகம் ஆகியோர் உள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# பசுதர்மம்

திரு. சி.மு.தம்பிராசா



அம்மா வெனவலற ஆவினத்தைக் கொன்றுரித்து
எம்மா னிடரெல்லாம் உண்கின்றார் - இப்புவியில்
எம்மா வினமெல்லாம் வாய்திறந்து பேசுமென்றால்
சும்மா இருக்குமோ சொல்.

## பசுவின் வரலாற்று நூல்கள்

வேதங்கள், உபநிடதங்கள், ஆகமங்கள், தர்மசாஸ்திரங்கள், சிவதருமோத்திரம், புராணங்கள், தமிழ்மூவாயிரம் என்னும் திருமந்திரம், திருமுறைகள், நீதிநூல்கள் என்பன பசுபற்றிய சிந்தனைகளையும் வரலாறுகளையும் எடுத்துரைக்கின்றன. பெரியபுராணத்தில் மனுநீதிகண்டசோழன் புராணம், ஆனாயநாயனர் புராணம், சண்டேசுரநாயனர் புராணம் என்பன பசுதர்மத்தினை நன்கு எடுத்தாண்டுள்ளன. மணிமேகலையில் ஆபுத்திரன்கதை பசுபற்றிக் கூறுகின்றது. யாழ்ப்பாணத்து ஞானப்பிரகாசமுனிவர், ஐந்தாங் குரவரான ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் ஆகியோரும் பசு பற்றிய விளக்கங்கள் தந்துள்ளனர். மேலும் தற்கால விலங்கு வேளாண்மை பற்றிய நூல்களும், பசு வளர்த்தல் சம்பந்தமான நூல்களும் பசுபற்றி எடுத்துரைக்கின்றன.

## பசுவின் பிறப்பு

தேவர்கள் அமிர்தம் பெற வேண்டித் திருப்பாற்கடலைக் கடைந்தனர். அது சமயம் உச்சைசிரவசு என்னும் குதிரை, ஐராவதம் என்னும் யானை காமதேனு, நவரத்தினங்கள் என்பன தோன்றின. தேவர் உலக மருத்துவரான தனவந்திரி பகவான் அமிர்த கலசத்துடன் அடுத்ததாகத் தோன்றினார். ஸ்ரீமகாலக்குமிதேவி இறுதியாகத் தோன்றினார். காமதேனு என்பது தேவருலகில் உள்ள தெய்வீகப்பசு. அது தேவருலகில் கேட்டதெல்லாம் கொடுக்க வல்லது. பசுவும் காமதேனு வழிவந்தது. பசு பூவுலகில் மனிதவாழ்விற்கு வேண்டிய அத்தியாவசியப் பொருள்கள் பலதருகின்றது. மனித ஆன்மாவைப் பசுஎனச்சுட்டி, அது முப்பொருள் களில் ஒன்றைச் சைவசித்தாந்தம் பேசுகின்றது. எனவே மனிதனுக்கும் பசுவிற்கும் நெருங்கிய தொடர்பு காணமுடிகின்றது. ஆதலின் அது பூவலகில் ஓர் உயர்பிறவி. பசு மனிதப் பிறவிக்குச் சமனாகின்றது.

## பசுவின் பெயர்கள்

பசு பெயர் சுூலம், கொ, குடம், சுரபி, ஆ, நிரை,தேனு, பெற்றம் என்றும், தெய்வப் பசுவின் பெயர் கபிலை, தேனு என்றும் இடபத்தின் (எருது) பெயர் ஏறு, உக்கம், நரை, நந்தி, சுூளி, காளை என்றும் சூடாமணி நிகண்டு பொருள் தருகின்றது. எருது என்றால் இடபம் என்றும், மாடு என்றால் செல்வம் மாடு (cow or bule) என்றும் காமதேனு என்றாற் தெய்வப்பசு என்றும், நந்தி என்றால் இடபராசி, எருது, நந்திதேவர் என்றும், பசு என்றால் இடபராசி, உயிர், எருது, ஆன்மா, என்றும் அகராதிகள் பொருள் தருகின்றன. மேற்படி சூடாமணி நிகண்டு, அகராதிகள் ஆகியவற்றின் பொருள்களை உய்த்துணரும்போது பசு, காமதேனு என்னும் இரண்டும் ஒன்றென்றும், பசு மாடு என்னும் இரண்டும் ஒன்றென்றும் பசு, எருது என்னும் இரண்டும் ஒன்றென்றும் நந்தி, இடபம் என்னும் இரண்டும் ஒன்றென்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளக்கிடக்கின்றது. பசு, மாடுஎன்பன பொதுப்பாற் சொற்களாகக் காணப்படுகின்றன. எமது நாட்டுவழக்கில் பசுவளர்த்தல் அல்லது மாடு வளர்த்தல் என்றால் பசு, எருது இரண்டினையும் உள்ளடக்கிக் கூறுவதுங் காணலாம். மேலும் பசு, கோ, ஆன்மா என்றுஞ் சுட்டப்படுவதனால் பசு இறைவன், மனிதன் ஆகிய இரண்டுடனும் தொடர்புபடுகின்றதும் காணலாம். இவ்வகையிற் பசு ஓர் உயர் தனிப்பிறவி என்பது தெளிவு.

## பசுவின் பெருமை

ஸ்ரீமகாலக்குமிதேவி செல்வங்களுக்கு அதிபதி, ஸ்ரீமகாலக்குமிதேவி விரும்பி உறையும் இடம் பசுவின் வயிறு எனப் பிரமகைவர்த்தபுராணம் கூறுகின்றது. பசுவிற்கு ஒரு பெயர் மாடு. மாடு என்பது செல்வம் எனவும் பொருள் தருகின்றது. இந்நிலையிற் ஸ்ரீமகாலக்குமிதேவி உறையும் இடம் பசுவின்வயிறு எனப் பிரமகைவர்த்தபுராணம் கூறுவது மிகவும் பொருத்த மானதாகக் காணப்படுகின்றது.

சைவசமயத்திற் சிவபெருமானின் கோவிற்காவலன் நந்தி, நந்தி இடபதேவர் எனப்படுபவர் சிவபெருமானின் கொடி நந்திக்கொடி, அவரது வாகனம் வெள்ளெருது. சிவாலயங்களிற் காலையிற் கோபூசை செய்வதும் பசுவின் பெருமை கருதியேயாகும்.

வைணவசமயத்தின் முழுமுதற் கடவுளான ஸ்ரீமத் நாராயணப்பெருமான் ஆயர்பாடி மாளிகையிற் திருவவதாரம் செய்ததும் பசுவின் பெருமைக்குரியதே. இவர் பசுமாடுகளுடன் கூடித் திரிந்தமைக்குச் சான்றாக புல்லாங்குழல் ஊதிக்கொண்டு பசுவுடன் கூடி நிற்கும் இவரது திருவுருவப் படம் அமைகின்றது. திருமூலநாயனாருக்கு நந்தி (மாடு) நவாகமங்களை உணர்த்தியதும் நோக்கத்தகும். மனுநீதிகண்ட சோழன், தன்மகன் உயிரையும், பசுக்கன்றினது உயிரையும் ஒன்றெனக் கருதித் தன் மகனுக்கு மரண தண்டனையைத் தானே முன்னின்று நிறைவேற்றியதும் பசுவின் உயர்வைக் காட்டுகின்றது. தேவதூதனான யேசுபெருமான் பசுத் தொழுவத்திற் திருவவதாரம் செய்ததும் பசுக்குலத் திற்குப் பெருமை தருகின்றது. ஒரு மனிதத்தாய் தன்பிள்ளைக்கு மாத்திரம் பால்கொடுத்து வளர்த்துப் பிற்காலத்தில் தன் பிள்ளையாற் பயனடைகின்றாள். பசுத்தாய் தன் கன்றிற்கு பசிதீரப் பால்கொடுத்தும், மிகுதியான பாலை இன, மத, வயது வேறுபாடு இன்றி எவருக்கும் கொடுக்கின்றது. ஆனால் தான் ஈன்ற கன்றினால் அது எவ்வித பயனும் அடைவதில்லை. பசு தன்னலங் கருதாப் பரோபகாரி.

## பசு வளர்த்தல்

ஆதிகாலத்தில் நாடோடியாகத் திரிந்த மனிதன் தன் இருப்பிடத்தினை நிரந்தரமாக அமைத்துக் கொண்டபோது வேளாண்மையோடு விலங்கு வேளாண்மையும் மேற்கொண்டான். விலங்கு வேண்மையிற் பசு வளர்த்தல் ஒன்று உலகிற் தொன்றுதொட்டுப் பசு வளர்த்து வந்தமையை அறியமுடிகின்றது. வேதகாலத்திற் பசு பிரதானமாக வளர்க்கப்பட்டது. அக் காலத்திற் பசுவே செல்வம். அக்காலத்தில் ஒருவர் வளர்க்கும் பசுக்களின் எண்ணிக்கையைக் கொண்டே அவரது செல்வம் மட்டிடப்பட்டது. அதாவது அக்காலத்திற் செல்வத்தின் அளவுகோல் பசுவே. இன்று உலகில் இனமதவேறு பாடின்றிப் பசு வளர்க்கப்படுகின்றது. உழவுத்தொழிலில் வலது பக்கம் உழவன், இடது பக்கம் பசுவினங்கள் என்பதும் பொருந்தும்.

## பசுபடு திரவியங்கள் (பசுதரும் செல்வங்கள்)

கடல்படு திரவியங்கள் காடுபடு திரவியங்கள், மலைபடு திரவியங்களைப்போன்று பசுபடு திரவியங்களையும் வகுத்து நோக்க முடிகின்றது. பசுபடு திரவியங்கள் கோமயம், கோசலம், பால், தயிர், நெய், கோரோசனை என்பவற்றினைக் கொள்ள முடிகின்றது. இவற்றுள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோமயம், கோசலம், பால், தயிர், நெய் என்பவற்றைப் பஞ்சகவ்வியம் என்பர். இவை இறைவனுக்குரிய அபிடேகப் பொருள்களாகக் கொள்ளப்படுகின்றன. கோமயம் சாணம் எனப்படும். பசுவின்சாணம் ஒரு தொற்றுநீக்கியாகும். இது வீடுமெழுகவும் கரைத்துத் தெளிக் கவும், பயிர்களுக்குப் பசளைக்கும் பயன்படுகின்றது. மேலும் இது சிவசின்னங்களில் ஒன்றான திருநீற்றின் மூலப்பொருள் என்பது பெருமைக்குரியது. சைவசமயத்தில் விக்கினேஸ்வரர் பூசை முதலாவதும், முக்கியமானதும் ஆகும். இப்பூசைக்கான பிள்ளையாரை பசுவின் சாணத்தில் ஆவாகனம் செய்வது பசுவின்சாணத்தின் பெருமையை எடுத்துக்காட்டுகின்றது. பசுவில் இருந்து பெறும் கோரோசனை சித்த மருத்துவத்தில் மாத்திரை சூரணம் குளிகை என்பவற்றின் மூலப்பொருளாக அமைகின்றது. பால், தயிர், மோர், நெய் என்பன சித்தவைத்திய விஷ வைத்தியப் பெறுமதியுடையவையாகும். இவை மருந்துகள் தயாரிப்பதற்கும், அனுமானத்திற்கும் பத்தியத்திற்கும் பயன்படுவன. விஷ வைத்தியத்திற் சகல பாம்புக் கடிக்குமான மருந்து தயாரிப்பதற்குச் சுந்தரியை (மூஞ்சூறை) பிடம் போடுவதற்கு அதை வேப்பெண்ணெய் குடுகையில் அடைத்து ஒருமண்டலம் எருமாட்டுத் தொழுவத்திற் புதைத்துவைத்துப் பின்னெடுத்து அதற்கான மருந்து தயாரிப்பார். அம்மை நோய்த்தடுப்புப் பால் குற்றும் மருந்து தயாரிப்பதற்கும் பசுவினங்கள் பங்களிப்புச் செய்கின்றன. பசுவின் உடலுறுப்புக்களிற் கடவுளர், தேவர்கள், முனிவர்கள், புண்ணிய தீர்த்தங்கள், அக்கினி மண்டலங்கள், யாகங்கள் கற்புடைய மகளீர் இருத்தலே பசுபடு திரவியங்களின் சிறப்பிற்குக் காரணமாக அமைகின்றன. இந்நிலையிற் தேவர்கள் அமிர்தம் பெறவேண்டித் திருப்பாற்கடலைக் கடைந்தபோது அதுசமயம் காமதேனு, தேவருலக மருத்துவரான தனவந்திரிபகவான், ஸ்ரீமகாலக்குமிதேவி ஆகியோர் தோற்றம் பெற்றதன் நோக்கம் தெளிவாகப் புலனாகின்றது. பசுபடு திரவியங்கள் நோயற்ற வாழ்விற்குக் குறைவற்ற செல்வங்களாக அமைகின்றன.

## பசு காத்தல்

பசுவின் வரலாற்றிற் பசு காக்கும் முறைகளும் பலவாறாகக் காணமுடிகின்றது. மனுநீதிச்சோழன் மகன் சென்நோக்காற் சில்லில் ஒரு பசுக்கன்று அகப்பட்டு இறந்துவிட்டது. கன்றை இழந்த தாய்ப் பசுவிற்குத் தாங்கொணாத்துயரம், மனுநீதிச்சோழன் மகனுக்குத் தன் தந்தைக்குப் பழிவந்து விட்டதே என்ற கவலை. மனுநீதிச் சோழனுக்குக் கன்றை இழந்த தாய்ப்பசுவிற்கு எதையும் ஈடுசெய்யமுடியாத இடர்ப்பாடு. இது கண்ட மனுநீதிச்சோழன் மந்திரிகள்

" கொந்தலர்த்தார் மைந்தனை கோவதை செய்தார்க்கும் தை
அந்தணர்கள் விதித்தமுறை வழிநிறுத்தல் அறம் " என்றனர்.

இது கேட்ட மனுநீதிச்சோழன்,

மாநிலங்கா வலனாவான் மன்னுயிர்காக் குங்காலைத்
தானதனுக் கிடையூறு தன்னாற்றன் பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தாற் கள்வரால் உயிர்தம்மால்
ஆனபயம் ஐந்துந்தீர்த் தறங்காப்பான் அல்லனோ!

என்று எடுத்துரைத்தான்" இதற்குப் பிராயச்சித்தம் தீர்வென்றால், ஒருவனைக் கொன்றானையும் கொல்லாது அவனுக்கும் பிராயச்சித்தம் தீர்வாகிவிடும் என்றான். மனுநீதிச்சோழன். ஆதலின் பிராயச்சித்தம் இதற்குத் தீர்வாகாது என்று மன்னன் கூறி அமைச்சன் ஒருவனைப் பார்த்து " பசுக்கன்று கொலையுண்டவாறு தன் மகனையும் கொல் " என்றான். அமைச்சன் அது கேட்டு, அவ்வாறு செய்யாது இறந்தான். மனுநீதிச் சோழன் தன் மகன்மீது தானே தேரைச் செலுத்தி பசுக்கன்று கொலையுண்டவாறு தன் மகனைக் கொன்றான். இந்நிலையிற் சிவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமான் அருளால், பசுக்கன்று, அமைச்சன், மனுநீதிச்சோழன் மகன் ஆகிய மூவரும் உயிர்பெற்று எழுந்தனர். இவை யாவும் சமயச்சிந்தனைகள் என்றாலும் மெய்யியற்சிந்தனையை அடிப்படையாகக் கொண்டு ள்ளமை காணலாம். பசுவின் பிறப்பு பெயர் என்பன முன்னர் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. அவற்றின்படி பசுவின் ஆன்மாவும், மனித ஆன்மாவும் ஒன்றே எனக் கண்டோம். வாய்பேசாத பசுத்தானே என்று அதற்கும் பிராயச்சித்தம் தீர்வென்றால் ஒரு மனிதனைக் கொன்ற மனிதனுக்கும் பிராயச்சித்தம் தீர்வாகிவிடும். பசுவின் ஆன்மாவும் மனித ஆன்மாவும் ஒன்றாதலின் இது ஒவ்வாது என்பது மனுநீதிச்சோழனின் நீதி. இது அருமறைகளிலும் உயர்வான நீதி. இதுவே மேன்மை கொள்சைவநீதி. இதுவே திருமந்திரம் சுட்டும் அருஞ்சுத்த சைவர்களது சித்தாந்த தத்துவம். இதுவே மனுநீதிச் சோழவேந்தன் பசுக்காத்த முறை.

சாத்தனூரில் மூலன் பசுக்கள் மேய்த்துக் கொண்டிருக்கும்போது இறந்தான். அவ் வழியால் வந்த நந்தி அருள்பெற்ற சுந்தரநாதன், மூலனைச் சுற்றிப் பசுக்கூட்டங்கள் அழுவதனைக் கண்டார். சுந்தரநாதன் தன்னுடலை அரசமரத்தில் வைத்துவிட்டு மூலன் உடம்பிற் பரகாயம் பிரவேசம் செய்தலும் மூலன் உயிர் பெற்று எழுந்தான். அதுகண்ட பசுக்கள் மகிழ்வெய்தி மேயத்தொடங்கின. மாலை வந்ததும் பசுக்கூட்டம் வீடுகள் செல்லச் சுந்தரநாதன் தன்னுடலிற் பிரவேசித்துத் திருமூலரானார். இது திருமூலர் பசுக்காத்தமுறை.

விசாரசருமர், பசு மேய்ப்பான் ஒருவன் பசுவைக் கோலால் அடித்துத் துன்புறுத்தி யதைக் கண்டு மனம் சகிக்காது அவனைக் கண்டித்துக்கொண்ட பாலை மண்ணாற் செய்த சிவலிங்கத்திற்கு அபிஷேகம் செய்துவந்தார். இதனைக்கண்ட விசாரகுமரரின் தந்தை விசாரகுமரருக்குத் தடியால் அடிக்க அத்தடி மழுவாக மாறித் தந்தையின் கால்களைத் தறித்தது. இந்நிலையிற் சிவபெருமான் தந்தைக்கும் அருள் கொடுத்து விசார சருமருக்குச் சண்டேஸ்வரநாயனார் பசுக்காத்த முறை.

ஆனாய நாயனார் புல்லாங்குழலில் ஐந்தெழுத்து மந்திரத்தை யாழில் ஏற்று வாசித்துப் பசுக்குலங்களையும் தேவர்களையும் கொடிய மிருகங்களையும் இசை வசப்படுத்தி மகிழ் வடையச் செய்துள்ளார். இத்தொண்டினால் இவரும் சிவபதமடைந்துள்ளார். இதுவே ஆனாய நாயனார் பசுக்காத்த முறை.

யாழ்ப்பாணத்து ஞானப்பிரகாச முனிவர் போர்த்துக்கேய பறங்கியருக்கு உணவிற்குப் பசு வழங்கவேண்டிய தனதுமுறை வந்தபோது பசுக்கொலைக்கு அஞ்சி பரதேசம் போவது மேல் என்றெண்ணி இந்தியாவிற்குச் சென்றார். அங்கு அவர் வாழ்ந்து சிவப்பேறு அடைந்தார். இது ஞானப்பிரகாசமுனிவரின் பசுக்காத்த முறையாகும்.

யாழ்ப்பாணத்திற் தொன்றுதொட்டு ஒவ்வொரு கிராமத்திலும் சித்தமருத்துவ மரபில் மாட்டுவைத்தியர்கள் இருந்து ஆவினங்களின் நோய்நொடிகளுக்குப் பரிகாரம் செய்து வந்துள்ளனர். இன்று இவ்வைத்திய மரபினர் மறைந்து கொண்டு போனாலும் அவர்கள் வாழ்ந்த வீடு இன்றும் மாட்டுப் "பரியாரியார்வீடு " என்று சூட்டப்படுவது காணலாம். மாட்டுப் பரிகாரிகள் பசுக்காத்த முறையிது. யாழ்ப்பாணத்திற் தென்மராட்சிக்கும் வடமராட்சிக்குமிடையில் அருள்மிகு ஸ்ரீ தில்லையம்பலப் பிள்ளையார்கோவில் அமைந்துள்ளது. இக்கோவில் அமையும் அர்ச்சனை முறைகளும் ஆகமவிதிகள் சாராமை குறிப்பிடத்தக்கது. பசுவினங்களிற்கு நோய் நொடியின்றி பசுபுத்திர செல்வம் பெருக வேண்டிப் பசுவளர்ப்போர் பால், தயிர், நெய் கொண்டு ஸ்ரீ தில்லையம்பலப் பிள்ளையாருக்கு அபிஷேகம் செய்வர். பொங்கல் வைப்பர். சிலர் இருபதுகொத்து அரிசிமாவில் மோதகம் அவிப்பர். ஒருசிலர் மோதகங்களை நெய்யில் பொரிப்பர். சாதமும் கறியும் சமைப்பர். இவற்றுள் மோதகம் முழுவதையும் பிள்ளையாருக்குமுன் குவித்துப் படைப்பர். மோதகக் குவியலின்மேல் பிள்ளையார் மோதகத்தை வைப்பர். பொங்கல், சாதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறி என்பவற்றையும் மோதகக் குவியலின் அருகே படைப்பர். அர்ச்சகர் தூபதீபங்கள் காட்டுவர். திராவிடத் தோத்திரப் பாராயணத்துடன் பூசை நிறைவுபெறும். பின்னர் படைத்தவற்றைச் சகலரும் ஆலயமுன்றலில் கூடியிருந்து உண்பார். மிகுதியானவற்றைத் தங்கள் இனத்தவர களுக்கும் அயலவர்களுக்கும் பங்கிட்டுக் கொடுப்பர். பால் தந்த பசுவிற்கும் பிள்ளையாரின் விபூதி சந்தனமிட்டுத் தீர்த்தம்தெளித்து நைவேத்திய வர்க்கங்களை உண்ணக்கொடுப்பர். இவற்றினைப் பார்க்க பக்திமேலிடும். இவ்வாலயத்திற் பசுவினங்களின் பாதுகாப்பிற்கென நூல் வழங்கப்படுவதும் ஒருசிறப்பம்சமாகும். இவையும் பசுகாத்தல் முறைகளாகும். ஆவினங் களின் மரணத்தின் பின் தங்களால் இயன்ற மாட்டின் சைவமுறைப்படி மரணக்கிரியைகள் செய்து அவைக்கான இடுகாட்டில் நல்லடக்கம் செய்வார் இன்றும் இருக்கின்றனர். இதுவும் பசுகாக்கும் முறையாகவே காணப்படுகின்றது.

## இன்று பசு வளர்த்தல், காத்தல்

இன்று பசு பாலிற்காக வளர்க்கப்படுகின்றது. காலைகளிற் சிலவற்றை கடின வேலைகளுக்கும் சினைப்படுத்தற்குமாக வளர்க்கின்றார்கள். ஒருசிலர் தைப்பொங்கலிற்கு மறுநாள் பட்டிப்பொங்கல் பொங்கி பசுக்குலங்களிற்கு நன்றிக்கடனும் செலுத்துவார்கள். ஊர் தோறும் ஆங்கில மிருகவைத்தியசாலைகள் அமைத்துச் சத்திரசிகிச்சை முதற்கொண்டு செய்து பசுஇனங்களைக் காப்பாற்றுகின்றார்கள் என்பதும் உண்மைதான். பசுவினங்களின் வாழ்வு செழிப்பும், பாதுகாப்பும் உடையனபோலத் தோன்றுகின்றது. ஆனால் இயந்திர சாத னங்கள் மிகமலிந்து இக்காலத்தில் பல காளைமாடுகளுக்கு வேலையில்லை. அவை பால் குடிமறந்து ஓரிரு ஆண்டுகளில் அரச அனுமதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள கொல்கலங்களில் கொன்றுரித்து உண்ணப்படுகின்றன. அரசின் இச்சலுகையைக் கொண்டு ஈற்று நின்ற முழுப்பசுக் களும் கொல்லப்படுகின்றன. ஆவினங்களைக் களவாடியும் கள்ளத்தனமாகவும் கொன்று தின்கின்றன. தின்பார் இல்லையெனில் கொல்வாரும் இருக்க முடியாது. பசுக்கொலைக்குக் காரணம் பசுவின் இறைச்சியை உண்பவர்கள் தான். இவர்களால் ஆவினங்களின் இடுகாடுகள் இன்று புதர்மண்டிக் கிடக்கின்றன. தாய்ப்பாலுக்குப் பதிற் பால்தரும் பசுத்தாயைக் கொன்று தின்னுதலுக்குச் சமானம் எனப் பசு இறைச்சி உண்பவர்கள் உணரவேண்டும்.

பசு வளர்ப்பவர்களிற் சிலர் சினைப்பட்ட பசுக்களிற் பால் எடுத்தும், பாலில் நீர் கலந்தும், நெய்யில் எண்ணெய் கலந்தும் விற்கின்றார்கள். சிலர் கோதுமை, சோயாவிற் தயாரிக்கும் பால்மாவில் தயிர்போட்டு மோராக்கி விற்கின்றார்கள். இவ்வாறான பால்,தயிர், மோர், நெய் என்பவற்றினால் ஆலயங்களில் அருள்குன்றியும் சித்தமருத்துவங்களில் சித்தி குன்றியும், மனிதரிடத்தில் உடல் உளநலம் குன்றியும் காணப்படுவதனை அறியலாம்.

## பசு வளர்த்தலில் நற்சிந்தனைகள்.

கற்றபடி நாம் நடந்தால் களவிற்கு இடமில்லை. கள்வர் பயத்தினால் குறைந்தது வீட்டிற்கொன்று என்றாலும் இன்று வளர்க்கின்றார்கள். நாய் கள்வரிலிருந்து மாத்திரம் எம்மைக் காப்பாற்றுகின்றது. நாயினை மரணபரியந்தம் வரை வளர்க்கிறார்கள். அதனைக் கொன்றுரித்துத் தின்பார் உலகில் யாரும் இல்லை. பசுபடு திரவியங்களையும் அவற்றின் பெறுமானங்களையும், முன்னெடுத்துக் காட்டி இருக்கின்றோம். பசுக்கொலை செய்து உண்பவர்களை என்னென்று சொல்வது. பசுக்கொலை செய்யவும் கூடாது. அதன் ஊண் உண்ணவும் கூடாது.

வீட்டில் நாய் வளர்க்கும் செலவில் ஒரு பசு வளர்க்கலாம். சுத்தமான பசுபடு திரவியங்களைப் பெற்று நோயற்றவாழ்வு வாழலாம். வருங்காலம் எரிபொருட்களுக்கும் செயற் கைப் பசளைக்கும் தட்டுப்பாடும், விலையேற்றமும் ஏற்படலாம். பசுவினங்களை அவற்றின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரண பரியந்தம் வரை வளர்த்து கஷ்டப்படுகின்றோம் என்று கவலைப்படத் தேவையில்லை. அவற்றின் மரணபரியந்தம் வரை அவைக்குக் கொடுக்கும் தீனிச்செலவிற்கு அவைதரும் சாணம் போதுமானது. சாணம் காயவைத்து விநாட்டியாக்கி எரிக்க எடுக்கலாம். மனித சடலங்களைத் தகனம்செய்யவும் எடுக்கலாம். பயிர்களுக்குப் பசளையாக இடலாம். அழுதபிள்ளை தான் பால்குடிக்கும். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். கஷ்டப்பட்டு மாடு வளர்த்தால் இம்மைக்குப் பொருட்தேட்டமும் மறுமைக்கு அறத்தேட்டமும் உண்டு.

**ஆதார நூல்கள் :**


01. சேக்கிழார் பெரியபுராணம்
02. சூடாமணி
03. A Dictionary Tamil and English, 1921 by Visvanathapillai - Madras
04. The pocket Oxford Dictionary of current English 1984 - seventh Edition- Delhi. Oxford University Press - Bombay
05. அகஸ்த்தியமுனிவர் அருளிச் செய்த வைத்திய ரத்தினச் சருக்கம் மூலமும் உரையும்.
06. சர்வ சங்காரகன் என்னும் விஷ வைத்தியத் திரட்டு ஏகாம்பர முதலியார் சண்டுகானந்த புக் டிப்போ, சூளை, சென்னை
07. சகல ஐஸ்வர்யங்களும் தரும் மகாலக்குமி ஸ்ரீ பரத்துவாஜசுவாமிகள், மதிநிலையம், சென்னை.
08. கோமாதா கருத்துக் களஞ்சியம் 2001.03.11. சைவப்புலவர் சு.செல்லத்துரை திருமதி சு.பத்தினிப்பிள்ளை நினைவு வெளியீடு, இளவாலை.








**01.10.2002**ல் இந்துசமயப் பேரவை உலகச் சிறுவர் தினத்தை முன்னிட்டு ஏழாலைச் சைவச்சிறுவர் இல்லத்தில் சிறுவர்தின விழாவினை நடாத்தியது. இவ்விழாவில் திரு.சி.கணேசன், திரு.ந.சிவசண்முகமூர்த்தி, அருட்கவி.சீ.விநாசித்தம்பி, திரு.சி.சக்திகிரிவன், பேராசிரியர்.நா.ஞானகுமாரன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். இல்லச் சிறுவர்களும் அவ்வூர்ச் சிறுவர்களும் இணைந்து நடாத்திய பல கலைநிகழ்ச்சிகளை நிறைந்த சபையினர் பாராட்டி மகிழ்ந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஈசன் உவக்கும் இன்மலர்கள்
# மலர் வழிபாட்டின் மாண்பும் விதிகளும்

திரு.வ.கோவிந்தபிள்ளை



இறைவனை வழிபடுபவர்கள், பல படிமுறைகளைப் பின்பற்றியொழுகித் தாம் தாம் விரும்பிய நற்பேறுகளை அடைந்துள்ளனர். இவற்றைச் சரியை, கிரியை, யோகம், ஞானம் என நால்வகையாகக் குறிப்பிடுவர். இவற்றுள் இலகுவானது சரியை வழிபாடேயாகும். இதுவே இறைவழிபாட்டின் முதற்படியாகும். இச்சரியை வழிபாட்டுள் மலர் வழிபாடும் ஒன்றாகும்.

## கந்தபுராணம் விதந்திடும் மலர் வழிபாடு

மலர் வழிபாட்டின் சிறப்பினைக் கந்தபுராணம் விதந்தோதும். சிவனும் உமையும் கைலயங்கிரியின் கண்ணுள்ள பூஞ்சோலையில் வீற்றிருந்தபொழுது, அச்சோலையின் கண்ணுள்ள வில்வமரக் கிளையொன்றில் இருந்த முசுக்கலை ஒன்று அம்மரத்தின்கீழ் இருந்த இருவர்மீதும் அளவற்ற சிறந்த மெல்லிய வில்வம் இலைகளைப் பறித்து சொரிந்தது. (மலர்களோடு பத்திரங்களும் (இலைகள்) இறைவனுக்கு உகந்தவையே) இவ்வழிபாட்டினால் மகிழ்ந்த இறைவர் முசுக்கலையைப் பார்த்து, " எமை ஈண்டே விழுமியதொர் கூவிளையின் மெல்லிலைகள் இட்டு வழிபடல் புரிந்தனை, மனுக்குல முதித்து முழுதுலகை ஆளுக" எனத் திருவருள் பாலித்தார். இவ்வாறு கூவிளையின் சிறந்த மெல்லிய இலைகளையிட்டு இறைவனை வழிபட்ட முசுக்கலையே பின்பு பூவுலகில் பிறந்து முசுகுந்தச் சக்கரவர்த்தியாக இருந்து இந்திரனது அழைப்பின்பேரில், முருகப் பெருமானுக்கும் தெய்வயானை அம்மையாருக்கும் திருப்பரங்குன்றில் நடந்த திருமண வைபவத்திற் கலந்து சிறப்புக்கள் பெற்றுக் கொண்டதாகவும், இன்னும் பலவற்றையும் கந்தபுராணம் எடுத்தியம்பும் இவை அனைத்துச் சிறப்புகளுக்கும் மூலகாரணமாய் அமைந்தது அம்முசுக்கலை "விழுமியதொர் கூவிளையின் மெல்லிலைகள் இட்டு வழிபட்டமையே" எனின் மிகையாகாது.

மேலும் சூரபத்மன் ஆகியோர்களது கொடுமைக்கு அஞ்சிய தேவேந்திரன் சுவர்க்க லோகத்தை விட்டுத் தனதுமனைவியோடு சீர்காழிப்பதியை அடைந்து கரந்துறைந்த காலத்தில், இறைவனைப் போற்றி வழிபடுதற்பொருட்டு மலர்களின்மையால் தானே ஒரு நந்தவனத்தை அமைத்துக்கொண்டான்.

" சந்தகில் பலவுதேமா சரளமே திலகம் தேக்கு
கொந்தவி ழசோகு புன்கு குரவொடு நாளி கேரம்
நந்திய கதலி கன்னல் நாகிளம் பூகம் வன்னி
முந்துயர் காஞ்சி வேங்கை முதலிய வேலி கோலி.

" சாதியே கோங்கு நாகஞ் சண்பக மிதழி ஞாழல்
பாதிரி வழையே குந்தம் பாரிசா தஞ்செருந்தி
போதுறு நரந்தம் வில்வம் பொலிகர வீரஞ் செச்சை
கோதறு மயிலை மெளவல் கொழுந்துசெவ் வந்தி முல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" இவைமுத லாகியுள்ள தருக்களும் புதலு மெல்லா
நவையறத் தெரிந்து வைத்தோர் நந்தன வனத்தைச் செய்ய
அவைமிக மலர்ந்த தம்மா வம்மலர் கொண்டு நாளும்
சிவனடி யருச்சித்தங்கண் தேவியோ டிறைவனுற்றான்." (இந்.க.ப. 41,42,43)

எனக்கூறும்.

## இந்திரன் மலர்களைப் பறித்த வகை

இவ்வாறான மரங்களையும் மலர்ச்செடி கொடிகளையும் தனது நந்தவனத்தில் வைத்த தேவேந்திரன் அவற்றிலிருந்து மலர்களை எவ்வாறு பறித்து அருச்சித்தான் என்பதைப் பிறிதோரிடத்திற் கூறுதல் நோக்கற்பாலதாகும்.

" விடியல்வை கறைதனில் மேவி வண்டுதேன்
புடையுறு முன்னரே புரையிலா ததோர்
கடிமலர் கொய்தனன் கொணர்ந்து கண்ணுதல்
அடிகளில் விதிமுறை அருச்சித் தானரோ." (இந்.அ.ப.29)

அதாவது இரவு விடியுங்காலமாகிய வைகறைப்போதில் சென்று வண்டுகள் அம்மலர்களிலுள்ள தேனினை நாடி மொய்ப்பதற்கு முன்னரே, குற்றமில்லாத சிறந்த பூக்களைக் கொய்துகொண்டு வந்து நெற்றிக் கண்ணையுடைய சிவபிரானது பாதங்களில் இட்டு விதிப்படி பூசித்தான் என்பது பொருளாகும். இவ்வாறு இவற்றைத் தேவேந்திரன்மீது ஏற்றிக் கூறினாலும் இது மலர்வழிபாடு செய்யும் அனைவருக்கும் பொருந்துவதும் கடைப்பிடிக்க வேண்டியதுமாகும் என்பது ஒருதலை.

திருமுருகாற்றுப்படையிலே, முருகப்பெருமான்,

" சுரும்பு மூசாச் சுடர்ப்பூண் காந்தள்
பெருந்தண் கண்ணி மிலைந்த சென்னியன் " ஆய்

விளங்குகின்றான் எனக் கூறப்படுவதும்,

திருவாதவூரடிகள் புராணத்தில் மதுரைச் சோமசுந்தரக்கடவுள்

" கள்ளுலா மிதழி மாலைகவின் பெறமுடித்த வேணி
வள்ளலார் "

என்று கூறப்படுவதும் மதுரையை ஆண்ட வங்கிய சூடாமணியென்ற பாண்டியமன்னன், தான் வைத்த நந்தவனத்தில் மலர் கொய்து, பல்வேறு வகையான மாலைகள் தொடுத்து சோமசுந்தரப் பெருமானது திருமேனியை அழகுசெய்த முறைபற்றித் திருவிளையாடற் புராணத்திலே,

" செருக்கிய வண்டு விழாமலர் கொய்து தெரிந்தாய்ந்து
நெருக்கிய இண்டை நிரைத்தொடை தொங்கல் நெடுந்தாமம்
மருக்கிளர் கண்ணி தொடுத்தணி வித்து வணங்காளுர்
கருக்கிய கண்ணுத லார்திருமேனி கவின் செய்தான்.

என்று கூறப்படுவதும்,

மத்தியந்தன முனிவரது தவப்புதல்வனான மழமுனிவரை அழகுள்ள ஆலய நிழலில் நீங்காது அமுதசொரூபராய் இருக்கின்ற இறைவர், தமது திருவாக்கினாலேயே அழகிய மழமுனியே! நம்மை வணங்கப்பெற அனுப்பப்பட்ட நல்ல சீலம்பொருந்திய உனது திரிகரண சுத்தியின் உண்மையைக் கண்டு வரங்களைச் செப்புவாயாக என்று அருள, 'அடியேனுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையுங்காலும் புலியைப்போல வலுவான நகப்பற்று உண்டா கவும் அவைகளிற் கண்கள் பொருந்தவும் இரங்கியருளி முன்னே புட்பவதிக்குத் தேவரீர் கற்பித்த நானாதி கர்மஅர்ச்சனை கொண்டருளும்' என வேண்டிக்கொள்ள அந்த வரங்களை அவ்வாறே இறைவன் கொடுத்தான் என்பதைப் பின்வரும்

"ஆலந்தருவா னமுதா மொழியா
வருமாமுனி யர்ச்சனை யிச்சை யினிற்
சீலந்திகழ் வாய்மை மகிழ்ந்தனஞ்
சிந்தித்த வரம்பல செப்பெனவென்
காலும் கரமும் புலியின் மலியக்
கண்ணங் கவைதங்க விரங்கி முதற்
கோலந்திகழ் பூசைகொ ளென்று வரங்
கொண்டா னவையெந்தை கொடுத்தனனே!

என்று மழுமுனிவர் இறைவனிடம் மலர் வழிபாட்டின் பொருட்டுப் புலிக்கால் பெற்றமையையும் இதுமுதல் இவர் வியாக்கிரபாதர் ஆனார் எனவும் கோயிற்புராணங் கூறுவதும், சண்டுமனங் கொள்ளற் பாலதாகும்.

மலர்களை வைகறையிற் கொய்யப் புகுவது வண்டுகள் எச்சிற்படுத்திய மலர்கள் பூசைக்கு ஆகாததால் அவை மலர்களிலுள்ள தேனை உண்ண வருமுன்பே மலர்களைப் பறிக்க வேண்டுமென்பது புட்பவிதி.

இங்கு கூறியவற்றையே இரத்தினச் சுருக்கமாகக் கடவுள்மாமுனிவர், தமது திருவாத வூரடிகள் புராணத்தில்

"ஆவ லாலெமக் காமலர் மரங்கள்
ஆக்கலம்மலர் பறித்தலம் மலராற்
தாவி லாவகைதார்பல சமைத்தல்"

எனக் கூறியுள்ளமை மனங்கொள்ளற் பாலதாகும்.

புராணங்கள் பொய், புழுகு என்று கருதி அவை கைவிடப்பட்ட இந்நாட்களில் ஒருசிலரே இவ்வாறான சம்பவங்களை உண்மையெனக் கொள்வர். எவர் எவ்வாறு கருதினும் ஓர் உண்மைச் சம்பவத்தை இவ்விடத்திற் கூறுவது, மலர் வழிபாட்டின் சிறப்பை, மேன்மையை வலியுறுத்தும் என எண்ணுகின்றேன்.

## அடியவர் வாழ்வில் நிகழ்ந்த அற்புதம்

1995ல் இடம்பெயர்வு ஏற்பட்டு 96ல் மீண்டும் வரும் வாய்ப்புப் பலருக்குக் கிட்டியது. அவ்வாறு மீண்டபின்பு ஓர் அடியவர், தாம் இடம்பெயர்ந்து வன்னியில் இருந்தகாலத்தில் விநாயகப்பெருமான் தமது கனவிலே தோன்றித் தமது மேனி வெப்பத்தினாற் கொப்பளங்களாகி உள்ளது என்றும் வன்னிப்பத்திரங் கொண்டு தமது திருமேனி குளிரும் வண்ணம் அர்ச்சனை செய்யுமாறு தெரிவித்ததாகவும் அதன்படி தாம் வன்னிப்பத்திரம் தேடிக்கொண்டு வந்திருப்ப தாகவும் தெரிவித்தார்.

விநாயக சஷ்டிவிரத காலத்தில் இவ்வடியார் எமக்கு இதனைத் தெரிவித்ததால் விநாயகசஷ்டி முடியும்வரை தினமும் வன்னிப்பத்திரம் கொண்டுவந்து விநாயகப் பெருமான் மகிழுமாறு வழிபடும் வண்ணம் இவருக்குக் கூறினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரிரு வருடங்களின் பின்பு மீண்டும் அவரைக் கண்டபோது, இலங்கையில் குணமாக்க முடியாது அங்கக்குறைபாட்டுடன் இருந்த தமது ஏகபுத்திரன் இப்போது வெளிநாடுசென்று குறைகள் அனைத்தும் நீங்கப்பெற்று முசுகுந்தச் சக்கரவர்த்தி போல, " காமரினேர்தரு காட்சியதாகி " விளங்குவதாக விளக்கி, விநாயகப் பெருமானது திருவருள் பற்றிக் கூறி மகிழ்ந்தார். முசுக்கலை மலர்வழிபாட்டினால் மறுபிறவியிலடைந்த பேற்றினை இவ்வடியவரது புதல்வர் இப்பிறவியிலேயே அடைந்துள்ளாரெனின் மலர்வழிபாட்டின் சிறப்புக்கு வேறு உதார ணங்கள் தேவையில்லை.

## ஈசன் உவந்திடா மலர்களும் அவை பறிக்கப்படக்கூடாத இடங்களும்

இறைவனுக்கு வெண்டாமை, கருந்துளசி முதலியன ஆகாதவைகளாதலின், அவற்றை விலக்க வேண்டுமென்பதற்காகவே இவை முதலாகவுள்ள தருக்களும் புதலுமெல்லாம் 'நவையறத் தெரிந்து' வைத்தோர் நந்நனவனத்தைச் செய்தான் தேவேந்திரன் எனக் கூறியுள்ளார்.

மேலும் " நவையற வைத்தல் " என்பது சண்டாளபூமி, சுடுகாடு முதலியவற்றுக்கு அண்மையில் இல்லாததாயும் புறச்சமயிகள், துரஸ்திரிகள் முதலியோர் உள்ளே பிரவேசி யாமலும், எச்சில், மூக்குநீர், மலசலம் முதலியவற்றால் அசுசிப்படுத்தாமலும் நந்தவனம் அமையவேண்டும் என்பதுவிதி. மேலும் அங்ஙனமுள்ள பத்திரபுட்பங்களை கடவுட்பூசை முதலியவற்றிற்கன்றிப் பிறவற்றிற்கு உபயோகப்படுத்தலாகாது. இன்னும் இவற்றில் நீர் தெறிக்கும்படி ஆடைகளைத் தோயாமலும், அவற்றின்மீது போடாமலும் பாதுகாத்து வளர்ப்பது இன்றியமையாததாகும்.

விதிப்படி மலர் கொய்தலென்பது, சிவதீட்சை பெற்றவராயும் நியமாசார முடையவராயும் இருப்பவர் சூரியஉதயத்திற்கு முன்னே நீராடித் தோய்த்துலர்ந்த வஸ்திரம் தரித்துச் சந்தியாவந்தனம் முடித்து சிவபெருமானை மறவாத சிந்தையோடு பத்திரபுட்பங்களைப் பறித்தல் வேண்டும். இதனைக் காட்டவே, ஆவலால் எமக்கு ஆம்மலர் மரங்களாக்கல், ஆவலால் எமக்கு ஆம்மலர் பறித்தல் என விசேடித்துள்ளார்.

மேலும் மலர் பறிக்கும்போது மனம் வேறுபடின் மிகவும் குற்றமாகும். இதனைக்

" கொந்தலர் கொய்யும் போது கூர்விழி மையலாலே
பைந்தொடி மடவார் தம்மைப் பார்த்தலாற் கைலை வெற்பிற்
சுந்தரன் பட்ட காதை யறிதிரே துணர்மென் போதால்
அந்தணர் கீழ்களாவார், கீழ்களந் தணர்க ளாவார் "

என்னும் பாடலும் சுந்தரரது வரலாறும் வலுவூட்டும்.

இதே போன்று " தாவிலாவகைத்தார் பல சமைத்தல் " என்பது குற்றமற்ற முறையில், இண்டை,தொடை, கண்ணி, பந்து, தண்டு, பிணையல் முதலிய பலவகைத் திரு மாலைகளைக் கட்டுதலாகும். (தா-குற்றம்) இவ்வாறான மாலைகளை ஆவலால் இறைவனுக்கெனக் கட்டும்பொழுது, கதைத்தல், சிரித்தல், இறைவனுடைய திருவடியை அன்றிப் பிறவற்றில் ஆவல்கொள்ளுதல் மனம்வைத்தல், கைகளால் உடம்பையேனும் அணிந்துள்ள ஆடையையேனும் தீண்டுதல் முதலியன குற்றங்களின் பாற்படுமென்பர்.

## மலர் வழிபாட்டில் இன்று காணப்படும் குறைகள்

இவ்வாறு மலர்வழிபாடு பற்றியும் அதன் பயன்பாடுபற்றியும் நூல்கள் விதந்தோதி யிருப்பினும் இவையனைத்தையும் விலக்கிவிட்டு, காலை புலர்ந்து ஆறு, ஏழு மணியின்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னரும் அகாலவேளைகளிலும் பிறர் வைத்துள்ள மலர்மரங்களில் மலர்களைக் கொய்தும் கைகளிலும் கைப்பை (Shoping Bag) முதலியவற்றில் இட்டும் அவ்வாறாகிய பைகளை முழந்தாழுக்குக் கீழாக ஆடுமாறு ஆட்டிக்கொண்டும் அல்லது கையில் உயரத் தூக்கிக் கொண்டும் செல்கின்ற பூக்களை எந்த விதிப்படியுமின்றித் தாமே சுவாமிக்குச் சாத்தியும் மூர்த்தங்களிற்படுமாறு எறிந்தும் இன்னும் பல்வேறு விதமாகவும் அடியவர்களென்போர் ஆலயங்களில் வழிபடுதலை அன்றாடங் காணக் கூடியதாகவுள்ளது.

### தக்கார்பால் கேட்டறிக

எனவே, அடியார்கள் மலர் வழிபாட்டினை எவ்வாறு செய்ய வேண்டுமென்று தக்கார்பாற் கேட்டு அல்லது அதுபற்றிய நூல்களைக் கற்று அதன்படி ஒழுகி நற்கதி அடைதலே சாலச்சிறந்ததாகும். இல்லையேல் " கண்டதே காட்சி, கொண்டதே கோலம்" என்ற வாக்கிற்கமைய இளம்சந்ததியினரும் நடந்து கொள்ள நாமே வழிவகுத்தவர்களாவோம்.



**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளையவர்களின் மணிவிழாவினை ஒட்டி நிகழ்ந்த மூத்த புவியியலாளர்களின் கௌரவிப்பு விழாவில் இந்துசயப் பேரவைத் தலைவர் அருட்கவி. சீ.விநாசித்தம்பி அவர்கள் பொன்னாடை போர்த்துக் கேடயம் வழங்கிக் கௌரவித்தார். இந்நிகழ்வு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் உள்ள குமாரசாமி மண்டபத்தில் 07-04-2002ல் நடைபெற்றது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# இந்துசமயமும் நாவலரும்

## (தொடர் ..... 3)



திருமதி சாந்தினி அருளானந்தம்

ஈழத்தின் இந்துமத மறுமலர்ச்சியைத் தலைமையேற்று நடாத்தியவர் நல்லூரில் பிறந்த ஆறுமுகநாவலரே. வெஸ்லியன் மிஷனறிகளுக்குரிய மத்தியகல்லூரியில் கற்றமை பீற்றர் பேர்சிவல் என்ற மிஷனறிக்குத் தமிழ் கற்பித்தமை, விவிலிய மொழிபெயர்ப்பில் ஈடுபட்டமை ஆகியன கிறிஸ்தவரின் மதமாற்ற முயற்சிகளை நாவலருக்கு விளங்கவைத்ததுடன் இந்துசமயத்தைப் பேணிப்பாதுகாத்து நிலைப்படுத்துகின்ற உணர்வையும் ஏற்படுத்தியது. சுதேச இந்துக்கள் தமது சமயத்தை உள்ளபடி விளக்கிக் கொள்ளாமையும் அதனைக் கிறிஸ்தவசமயப் பரப்பாளர் தமது சமயமாற்றத்திற்குப் பயன்படுத்திக் கொண்டமையும் இந்துசமய வீழ்ச்சிக்குக் காரணம் என்பதை உணர்ந்து அதனைத் தடுத்துநிறுத்தும் நடவடிக்கைகளுக்குத் தம்மைத் தயார்ப்படுத்திக் கொண்டார். இதற்காக நாவலர் முதலில் தமது இல்லற வாழ்வையும் தொழிலையும் பரித்தியாகம் செய்து கொண்டமை முக்கிய நிகழ்வெனக் கூறலாம்.

நாவலர் ஈழத்து இந்துசமய மறுமலர்ச்சியின் தந்தையாகக் கொள்ளப்படுகின்றார். இவர் மேற்கொண்ட சமய நடவடிக்கைகளுக்குக் கிடைத்த அங்கீகாரமாகப் பின்வருவனவற்றைக் கொள்ள முடிகின்றது.

1. நாவலரது விவிலிய மொழிபெயர்ப்புத் தமிழகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டமையும் அதன்வழி அவரதும், யாழ்ப்பாணத்தவரதும் தமிழறிவு மெச்சப்பட்டமையும்,
2. திருவாவடுதுறை ஆதீனம் இவரது பிரசங்கத்திறனுக்கு வழங்கிய நாவலர் பட்டம்,
3. ஈழத்தில் மேலாண்மை பெற்ற வேளாள வருணத்தில் குறிப்பாக ஞானப்பிரகாசர் வழி மரபிலுள்ள குடும்பத்திலே பிறந்தமை, அத்துடன் இவரது தந்தை உட்படப் பலமூத்தோர் ஆங்கில அரசாட்சிக் காலத்தில் பதவிகளைப் பெற்றிருந்ததோடு இலக்கியம் மருத்துவம் முதலான துறைகளிலும் சிறந்து விளங்கினார்.

இவ்வாறான தகைமைகள் நாவலரது சமய மீட்புப்பணி தமிழக ஈழமக்களிடையே வரவேற்பைப் பெறத் துணைநின்றன. " நம்முடைய சைவசமயிகள் சைவநூல்களைக் கற்காமையினாலும், எங்கேயாயினும் சிலர் கற்றாலும், அவர்கள் பிறருக்குக் கற்பித்தாலும் யாரும் அறிந்து உய்யும்படி சமயாசாரங்களைப் போதித்தல் இல்லாமையினாலும் நமது சற்சமயமாகிய சைவசமயம் வரவரக்குன்றுகின்றது." எனக் கவலையடைந்த நாவலர் சமயக் கல்வியை வழங்குவதனைத் தமது பிரசங்கங்கள், பிரசுரங்கள், நூல்கள் முதலானவற்றில் வலியுறுத்தினார். கல்விக்குப் பயன் அறிவு: அறிவுக்குப் பயன் ஒழுக்கம்: அவ்வொழுக்கத்தைச் சமயக்கல்விமூலமும் பெறமுடியும் என்பதை நடைமுறைப்படுத்த முனைந்தமையை இவரது செயற்பாடுகளிற் காணலாம்.

## சைவசமயம்

ஈழத்து இந்துக்கள் ஆகமம் சார்கடவுளரையும், ஆகமம் சாராக் கடவுளரையும் வழிபட்டனர். இந்து என்றசொல்லும் பரந்தவகையில் இத்தகைய வழிபாடுகளை உள்ளடக்கியதாகவே கருதப்படுகின்றது. எனவே இந்துசமயத்தில் இருந்து சைவத்தை வேறுபடுத்தி, அதனைத் தூய்மைப்படுத்துகின்ற முயற்சியிலும் நாவலர் ஈடுபட்டாரென்பதைக் கீழ்வரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூற்றில் இருந்து அறியலாகின்றது.

'பிறப்பும் இறப்பும் இல்லாதவர் பதி. பதி ஒருவரே. அந்தப்பதி சிவபெருமான். சிவபெருமானுக்குப் பசுக்கள் என்றும் அடிமைகள். சிவபெருமான் அந்தப் பசுக்கள்தோறும் நிறைந்து நின்று அவர்களை எல்லாம் ஆளும் தலைவர். ஆதலால் சிவபெருமான் ஒருவரே பசுபதி. இந்த உண்மையை விசுவாசித்து சிவபெருமானை வழிபடுகின்ற மார்க்கம் சைவம். பலரைப் பரமென்று கொண்டு வணங்குகின்ற சமயம் சைவமாகாது.'

சிவனில்லாத தெய்வங்களை வழிபடுவோர் சிவத்துரோகிகளாகக் கருதப்பட்டனர். இவ்வடிப்படையில் சைவருக்குரிய இலக்கணங்கள் எவை என்பதையும் இவர் வரைய றுத்துக் காட்டுவதை அவதானிக்க முடிகின்றது. "சைவசமயி" என்ற கட்டுரையில் கூறப்படும் இலக்க ணங்களைக் கூர்ந்து அவதானித்தால் அவை அகம் சார்ந்தவற்றை முதன்மைப்படுத்தி புறம்சார்பானவற்றை அடுத்தநிலையில் வரிசைப்படுத்துவதைக் காணலாம். ஆனால் கிறிஸ் தவத்தின் சவால்களை எதிர்கொள்ள வேண்டிய நிலையில் இவ்விலக்கணங்களில் சிறிதுமாற்றம் செய்யப்பட்டுள்ளது. "சைவதூஷண பரிகாரம்" என்ற நூலில் கூறப்படும் இவ்விலக்கணங்கள் கிறிஸ்தவத்தின் செல்வாக்கிலிருந்து இந்துசமயத்தைப் பேணிப் பாதுகாப்பதற்குரிய நடவடிக் கைகளை முதன்மைப்படுத்துவனவாக அமைகின்றமையினைக் காணமுடிகின்றது.

## நாவலரும் வண்ணார்பண்ணையும்

நாவலரின் பிறப்பிடம் நல்லூராயினும் அவரது சமயச்சார்பான நடவடிக்கைகள் வண்ணார் பண்ணையையே மையப்படுத்தி மேற்கொள்ளப்பட்டன. சிவனை முழுமுதற் கடவுளாக வலியுறுத் தியமையால் அக்கடவுளைக் கொண்டிருக்கும் வண்ணையை முதன்மைப்படுத்தியிருக்கலாம். நாவலருக்கு வண்ணை வைத்தீஸ்வரக்கடவுளின் திருவருட்கடாட்சம் கிடைத்ததாகக் கூறப்ப டுவதும் கருத்திற்கொள்ளத்தக்கது. மேலும் வண்ணை ஏற்கனவே சைவப்பொலிவு பெற்ற இடமாக விளங்கியமையும், நாவலருக்கு முன்னதான இந்துசமயப் பாதுகாப்பு முயற்சிகள் இவ்விடத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டமையும் இன்னொரு காரணமாகலாம். இதனை விடவும் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில் காணப்பட்ட ஆகம, நிருவாகச்சீர்கேடுகள் அக்கோயிலுக்கே அவரை இருபது வருடங்களுக்கு மேலாகச் செல்லவிடாது தடுத்திருந்தன. இவ்வாறான பின்னணியில் நாவலரது முதலாவது சைவப்பிரசங்கம், சைவப்பிரகாச வித்தியாசாலை, சைவ ஆங்கில வித்தியாசாலை, அச்சியந்திரசாலை என்பன வண்ணையை மையப்படுத்தியே அமைக் கப்பட்டிருந்ததைக் காணலாம்.

## இந்துசமயத்தை நிலைநாட்டுவதற்கு மேற்கொண்ட முயற்சிகள்

ஆறுமுகநாவலர் சைவத்தை நிலைநாட்டுவதற்கும், மேம்படுத்துவதற்கும் மேற்கொண்ட முயற்சிகளை நோக்குமிடத்து, கிறிஸ்தவ சமயப் பரப்பாளர் சமயத்தைப் பரப்புவதற்கு எவ்வெவ்வழிகளைக் கையாண்டனரோ அவற்றுட் பெரும்பாலானவற்றைச் சைவத்தின் மேன்மைக்கான வழிகளாக மாற்றியமைத்தமை அவரது மதியூகத்தினையும், வினைத்திறன், வினைத்திட்பம் ஆகியவற்றையும் எடுத்துக் காட்டுகின்றன. பிரசங்கம், சமயப்பாடசாலை, ஸ்தாபனம், அச்சியந்திரசாலை, நூல்வெளியீடு முதலியன இவ் வகைக்கு உரியனவாகும்.

### பிரசங்கம்

கிறிஸ்தவ மிஷனரிமார் தாம் அமைத்த பள்ளிக் கூடங்களிலும், பொது மேடைகளிலும், மக்கள் கூடும் இடங்களிலும் கிறிஸ்தவசமயப் பிரசங்கங்களை மேற்கொண்டனர். அதுமட்டுமன்றி சைவர்களையும் அவரது கலை, பூசைவழிபாடுகளையும், கந்தபுராணம் முதலிய நூல்களையும் ஏளனம் செய்தனர். சைவரிடையேயும், சைவசமயத்திலும் காணப்படும் குறைபாடுகள் பலவற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றைக் கிறிஸ்தவர்கள் வெளிப்படுத்தினர். இவற்றில் சிலவற்றை நாவலர் ஏற்றுக் கொண்டமை யினால்தான் சைவசமயத்திற்குள்ளேயும் சில சீர்திருத்தங்களைச் செய்ய முயன்றார். பலியிடுதல், ஆகமம் சாரா வழிபாட்டு முறைகளை அகற்றுதல் கோயில் நிருவாகச் சீர்கேடுகள் போன்றவற்றில் சில சீர்திருத்தங்கள் செய்ய முயன்றார். வண்ணார்பண்ணைச் சிவன் கோயிலில் நாவலரால் தொடக்கி வைக்கப்பட்ட சைவப் பிரசங்கம், நல்லூர் வே.கார்த்திகேயப் புலவரினாலும் முன்னெ டுக்கப்பட்டது. மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், நல்லூர், கைலாசபிள்ளையார் கோயில் போன்றவற்றில் இவர்களது பிரசங்கங்கள் சைவத்தின் மேன்மையின் பொருட்டு நடைபெற்றன. இவ்வாறான ஒரு பிரசங்கத்தைத் தமிழகத்தில் மேற்கொண்டபோதே திருவாவடுதுறை ஆதீனம் சாதாரண ஆறுமுகனுக்கு " நாவலர் " பட்டத்தை வழங்கி நமக்கொரு நாவலரைத் தந்தது.

## வித்தியாசாலைகள்

கிறிஸ்தவ சமயப் பரப்பாளரின் சமயமாற்றத்தின் பிரதான தளமாக இருந்தவை அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட கல்விக்கூடங்களே. உத்தியோகத்தினையும் சமூக அந்தஸ்தையும் விரும்பியவர்கள் இக்கல்விக் கூடங்களை நாடிக் கிறிஸ்தவர்களாயினர். இதனைத் தடுப்பதற்கு சைவர்கள் சைவப்பின்புலத்தில் கல்வி பெறுவதற்கான வாய்ப்பை உருவாக்கிக் கொடுக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து 1848ல் வண்ணார் பண்ணையில் ஒரு சைவப்பிரகாச வித்தியாசாலையை நிறுவினார். 1870ல் கோப்பாயிலும் பின்னர் புலோலியிலும் இவ்வாறான சைவக் கல்விக்கூடங்கள் அமைக்கப்பட்டன. நாவலரது இம்முயற்சிகளை அவதானித்த சில இந்து அறிஞர்கள் தத்தம் ஊர்களிலும் சைவப்பிரகாச வித்தியாசாலைகளை ஸ்தாபித்தமை குறிப்பிடத்தக்கது. இவ்வித்தியாசாலைகள் அவ்வவ் ஊர்களின் சைவமரபினைப் பேணுவதற்குத் துணைநின்றன எனலாம். அக்காலத்துச் சூழ்நிலையில் சைவ, ஆங்கிலக் கல்வியை வழங்கு வதற்காக சைவ ஆங்கில வித்தியாசாலை நிறுவப்பட்டபோதும் அவ்வித்தியாசாலை நான்கு ஆண்டுகளில் மூடப்பட வேண்டியதாயிற்று. சமகால கிறிஸ்தவ ஆங்கிலக்கல்வி நிலையங் களுடன் போட்டிபோட முடியாமை போதிய பொருளாதாரமின்மை, தகுந்த ஆசிரியர்கள் கிடைக்காமை ஆகியனவே இம்முயற்சி தோல்வியடையக் காரணமாக இருந்தன. ஆயினும் நாவலருக்குப் பின் அவரது அபிமானிகளால் யாழ்ப்பாணத்தில் இந்துக்கல்லூரி ஒன்றை நிறுவுவதற்கு இத்தோல்வி காரணமாக இருந்தது எனலாம்.

## அச்சியந்திரசாலை

ஆறுமுகநாவலர் இந்துசமய வளர்ச்சியின் பொருட்டு மேற்கொண்ட இன்னொரு நட வடிக்கை அச்சியந்திரசாலை ஒன்றை நிறுவியமை ஆகும். கிறிஸ்தவ சமயப் பரப்பாளர் ஆரம்பத்தில் தென்னிந்தியாவிலிருந்தும் பின்னர் நல்லூர், மானிப்பாய் போன்ற இடங்களிலிருந்தும் இந்துமதத்தின் வீழ்ச்சியையும், கிறிஸ்தவ மதத்தின் எழுச்சியையும் நோக்காகக் கொண்டு நூல்கள், பிரசுரங்கள், பத்திரிகை முதலியனவற்றை வெளியிட்டனர். அமெரிக்க மிஷனரிமார் தமது மானிப்பாய் அச்சுக்கூடத்திலிருந்து 1841 தொடக்கம் **உதயதாரகை** எனத் தமிழிலும், Morning Star என ஆங்கிலத்திலும் பத்திரிகை வெளியீட்டினை மேற்கொண்டனர். இப்பத்திரிகை சைவத்தினை இகழவும், கிறிஸ்தவத்தைப் பரப்பவும் பெருந்துணையாகியது. நாவலர் "உதயபானு" என்ற பத்திரிகையைத் தம்சமயத்தின் விருத்தியின்பொருட்டு வெளியிட எண்ணி யிருந்தார். ஆயினும் அது கைகூடவில்லை. பிற்காலத்தில் இந்துசாதனம் என்ற பத்திரிகை தொடக்கப்பட்டு அவரின் விருப்பம் நிறைவேற்றி வைக்கப்பட்டது.

கிறிஸ்தவர்களது அச்சிடும்பணியை அவதானித்த நாவலர் தம் மாணவராகிய சதாசிவப் பிள்ளையுடன் 1849 அளவில் சென்னைக்குச் சென்று ஓர் அச்சியந்திரத்துடன் மீண்டார். முதலில் நல்லூரில் சிலகாலம் அச்சியந்திரசாலை இயங்கியதாயினும் பின்னர் சமய நடிவடிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைகளின் வசதிகருதி வண்ணார்பண்ணைக்கு மாற்றம் செய்யப்பட்டது. வித்தியானு பாலன யந்திரசாலை எனப் பெயரிடப்பட்ட இவ்வச்சியந்திரசாலையிலிருந்து சைவப்பிரகாச வித்தி யாசாலைக்குத் தேவையான பாடப்புத்தகங்கள், சைவசமயம்சார்ந்த புத்தகங்கள், கண்டன நூல்கள், பிரசுரங்கள் முதலியன வெளிவந்தன. நாவலருக்கு முன் புழக்கத்திலிருந்த அரியதமிழ், சமய நூல்கள் பதிக்கப்படலாயின. நாவலர் இலகுவான உரைநடையை சாதாரண மக்களும் வாசித்தறியும் வகையில் கையாண்டார். இதனால் இவர் " வசனநடை கைவந்த வல்லாளர்" எனவும் சிறப்புப் பெற்றார்.

இவ்வாறு இந்துசமயப் பணிகளின்பொருட்டு மேற்கொண்ட நடவடிக்கைகள் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும் ஏதுவாயின. பிற்காலத்தில் சமயத்துறையில் மட்டுமன்றி தமிழ் மொழிசார் துறைகளிலும் பல அறிஞர்கள் தோற்றம்பெற நாவலரது செயற்பாடுகள் வழிவகுத்துக் கொடுத்தமை பிரதான அம்சமாகும். ஆறுமுகநாவலர் மொழியையும் சமயத்தையும் இருகண் களாகக் கருதியவர். கிறிஸ்தவசமயப் பரப்பாளர்கள் இந்துசமயத்தைத் தமிழ்ச்சமயம் என்றும் கோயில்களைத் தமிழ்க்கோயில்கள் என்றும் கூறியதை நிராகரித்து இரண்டும் வெவ்வேறானவை: ஒன்றின்வளர்ச்சி மற்றயதன் வளர்ச்சிக்குத் துணைநிற்கும் என்பதை வலியுறுத்தியவர் நாவலரே ஆவார்.

## நாவலரது எழுத்துக்கள்

ஆறுமுக நாவலருடைய எழுத்துக்கள் தனித்துவம் மிக்கவை. தன்னம்பிக்கையுடை யவை. ஆழமானவை. குற்றம் செய்தவரது மனத்தைத் தடுமாறச் செய்பவை. சமய ஒழுக் கத்தைக் கடைப்பிடிக்கச் செய்பவை. சைவசமயத்தின் நடைமுறைகள் உட்பொருள் முதலானவற்றை எளிமையாக விளக்கி, அவற்றினைச் செம்மையாகக் கடைப்பிடிக்கும்வகையில் சிவாலய தரிசனவிதி, நித்தியகருமவிதி, சைவசமயநெறியுரை போன்ற பல நூல்களை எழுதினார். இவருடைய பிரசங்கங்களிலும் எழுத்துக்களிலும் நீதி, ஒழுக்கம், நேர்மை போன்றன பிரதான இடத்தைப் பெற்றிருந்தன. மேலும் சைவ வித்தியாசாலைகளுக்குத் தேவையான நூலாக்கத் திலும் நாவலர் பிரதான பங்களிப்புச் செய்துள்ளார். பாலபாடங்கள் இலக்கண, இலக்கிய நூல்களை மாணவர்களுக்கு இலகுவாக விளங்கும் வகையில் எழுதியமை முக்கியமான அம்சமெனலாம்.

நாவலருடைய காலத்தில் கண்டன நூலாக்கங்கள், பிரசுரங்கள் முக்கியத்துவம் பெற்றிருந்தன. சைவத்தின்மீது கிறிஸ்தவசமயப் பரப்பாளர் ஏற்றிய குற்றச் சாட்டுக்களுக்குப் பதிலளிக்கும் வகையிலும், இந்துக்களின் சைவசமய அறிவின்மையைப் பயன்படுத்தி கிறிஸ்தவ சமயத்துக்கு மாற்றியதைக் கண்டிக்கும் வகையிலும் நாவலரால் எழுதப்பட்ட சைவதூஷண பரிகாரம், சுப்பிரபோதம் போன்ற கண்டனஆக்கங்கள் முக்கியத்துவமுடையனவாகக் கருதப்படு கின்றன. சைவதூஷணபரிகாரம் என்ற நூல் கிறிஸ்தவ மிஷனரிமாரின் சமயப்பரப்பு முயற்சிக ளுக்குப் பெரிய பின்னடைவை ஏற்படுத்துவதாக அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. கிறிஸ்தவ சமயப் பரப்புகைக்கு எதிராக மட்டுமன்றி சைவர்களிடையே காணப்பட்ட சில குறைபாடுகளைக் கண்டிக்கவும் நாவலர் பின்நிற்கவில்லை. குறிப்பாகக் கோயில் நிருவாகம், ஆகம விரோதச் செயற்பாடுகள் போன்ற பலவிடயங்கள் இவரது கண்டனத்துக்குள்ளாயின. இவ்வகையில் நல்லூர் கந்தசுவாமி கோயில் தொடர்பாக வெளியிட்ட இரு பத்திரிகைகள் எடுத்துக்காட்டத்தக்க சான்றுகளாகவுள்ளன.

## கோயிற் சீர்திருத்தம்

இந்துக்களின் பிரதான வழிபாட்டு மையங்களாக விளங்குவன கோயில்களாகும். 19ம் நூற்றாண்டுக்குரிய பெரும்பாலான ஈழத்து சைவ ஆலயங்கள் பல்வேறு சீர்கேடுகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பிடங்களாகச் செயற்பட்டன. கோயில் நடைமுறைகள், 'பிரபுக்கள், அந்தணர்கள், கணிகையர்கள் முதலானோர் இச்சீர்கேடுகளுக்குக் காரணமாகவிருந்தனர். மேலும் வழிபாடாற்றச் செல்வோரிற் சிலர் சிநேகிதர்களுடன் கூடி வெற்றிலை, பாக்குமென்று, புகையிலைச் சுருட்டுப் பிடித்துக் கஞ்சாலேகியம் உட்கொண்டு சிற்றின்ப வார்த்தைகளைப் பேசிக்கழித்தனர். இதனைவிடப் பலியிடுதல், புராணபடனத்தைச் சிற்றின்பமாக்கல், கோயிற்பணத்தைச் சூறையாடல், கணிகையரின் ஆடல்பாடல், காமத்தைத் தூண்டுவதாக அமைதல், ஆகமம் சாராத கண்ணகி வழிபாட்டினை மேற்கொள்ளுதல் முதலான பல குற்றங்களை நாவலர் தமது பத்திரிகைகள், பிரசங்கங்கள் வாயிலாகச் சுட்டிக் காட்டினார். இவ்வாறு இவர் மேற்கொண்ட கோயில்வழிபாடு தொடர்பான சீர்திருத்தங்கள் ஆகம, வேத பாரம்பரியத்தையே அடிப்படையாகக் கொண்டிருந்ததை அவதானிக்கலாம்.

ஆறுமுகநாவலர் சிதைவடைந்த சிவாலயங்களைச் சீர்செய்வதிலும், ஆகம மரபுக்கமைய அவை அமைக்கப்படுவதிலும் மிகுந்த அக்கறை காட்டினார். நல்லூர்க் கந்தசுவாமி கோயில், வண்ணார்பண்ணை கதிரேசன் கோயில் என்பனவற்றை ஆகம முறைப்படி அமைக்க வேண்டுமென வலியுறுத்தினார். ஈழத்தின் பாடல்பெற்ற தலமான திருக்கேதீஸ்வரத்தைப் புனரமைப்பதற்கு நாவலரது யாழ்ப்பாண சமயநிலை என்ற வியாக்கியானம் காரணமாக இருந்தது.

கீரிமலைச் சிவன்கோயில் என்ற பிரசுரத்தை வெளியிட்டு, அதன் புனரமைப்புக்குச் சில முன்னோடி நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. நாவலரால் மேற்கொள்ளப்பட்ட கோயிற் புனரமைப்புப் பணிகள் பிற்காலத்தில் அவரது மாணவர்களாலும் அபிமானிகளாலும் செம்மையுறப் பூர்த்திசெய்யப்பட்டன.

## தமிழகத்தில் நாவலர்

ஈழத்து சைவ சமயிகளின் தாய்நாடாகத் தமிழகத்தைக் கருதியமையால் அங்கும் பல சமயப்பணிகளை முன்னெடுத்து இரு நாடுகளுக்கிடையிலான சமய பண்பாட்டு வாழ்வை வளப்படுத்திய பெருமைக்குரியவரே ஆறுமுகநாவலர். அங்கு அவர் மேற்கொண்ட பணிகள் பின்வருமாறு:

1) சிதம்பரத்தைச் சைவர்கள் தமது கோயிலாகக் கருதினர். எனவே அங்கு ஒரு பெரிய சைவப்பிரகாச வித்தியாசாலையை நிறுவ முயன்றார். ஆனால் தமக்குக் கிடைத்த நிதி போதாமையால் சிறியவொரு வித்தியாசாலையையே நிறுவமுடிந்தது.

2) தமிழகத்தில் நாயன்மார் பாடிய திருமுறைகள் புறக்கணிக்கப்பட்டபோது அவற்றை மீண்டும் நிலை நாட்டினார். இதற்காக நாவலர் நீதிமன்றம் சென்றமை முக்கியமான நிகழ்வெனலாம்.

3) தமிழகத்தில் தமது நூல்கள் பிரசுரங்களை வெளியிடுவதற்காக ஓர் அச்சியந்திர சாலையை நிறுவினார். இதற்கும் வித்தியானுபாலன இயந்திரசாலை என்கின்ற பெயரிடப்பட்டது.

4) தமிழகத்திலுள்ள சிவாலயங்களைப் புனருத்தாரணம் செய்யும் பொருட்டுக் கூட்டப்பட்ட பதிபுண்ணிய பரிபாலனசபைக்குத் தலைமைதாங்கி இருநாள்கள் பிரசங்கங்களில் ஈடுபட்டார்.

5) தமிழகத்து ஆலயங்களிலும் சபைகளிலும் சமய வளர்ச்சி குறித்த பல பிரசுரங்களை மேற்கொண்டார்.

6) சிதம்பரத்து தீட்சிதர்கள் தமக்குரிய இலக்கணங்களிலிருந்து விலகியபோது அவர்களை நல்வழிப்படுத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கூறியவாறு ஈழத்திலும் தமிழகத்திலும் பல்வேறு சைவசமய தமிழ்மொழி வளர்ச்சிப் பணிகளை முன்னெடுத்தபோதும் பல இன்னல்களையும் அனுபவிக்க நேர்ந்தது. குறிப்பாக சைவசமய விருத்திப்பொருட்டு சிறியேனுக்கு சைவசமயிகளாலே (சைவரால்) அவமதிப்பும் இடையூறும் செய்யப்படுகின்றன என நாவலர் குறிப்பிட்டுள்ளமையை நோக்கின், சைவர்களே கிறிஸ்தவர்களை விட அவருக்கு இடையூறாக இருந்துள்ளனர் எனலாம். மேலும் இவர் தமதுபணிகளை முன்னெடுக்கப்போதிய பொருளைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. இத்தகைய சூழ்நிலைகளின் மத்தியிலும் 9ஆம் நூற்றாண்டு ஈழம் இருந்த சூழ்நிலையிலே ஆறுமுகநாவலர் மேற்கொண்ட செயற்பாடுகள் வியக்கத்தக்கனவேயாகும். அதேவேளை இன்றும் எமது சைவசமூகத்தின் நிலைபேற்றுக்கும் வளர்ச்சிக்கும் நாவலர் போன்ற பலர் தோன்ற வேண்டிய நிலைமைகளையும் கருத்திற் கொள்வது அறிஞர்களது கடனாகும்.

பல்வேறு இடையூறுகளின் மத்தியிலும் ஆறுமுகநாவலரால் முன்னெடுக்கப்பட்ட இந்து சமயமறுமலர்ச்சி ஈழத்து இந்துக்களின் வரலாற்றில் பிரதான நிகழ்வென்பதை மறுக்க முடியாது. 19ம் நூற்றாண்டுச் சமய மறுமலர்ச்சியில் சில குறைபாடுகளைச் சில அறிஞர்கள் சுட்டிக் காட்டியுள்ளனரெனினும் அக்கால சூழ்நிலையில் தனியொருவராக தன்னம்பிக்கையுடனும் மிகுந்த ஆளுமையுடனும் நாவலர் மேற்கொண்ட சமயப்பணிகள் மகத்தானவை என்பதில் சந்தேகமில்லை. ஆயினும் இன்றைய காலகட்டத்தில் மீண்டும் பல நாவலர்கள் தோன்ற வேண்டிய நிலைமைகள் தோற்றம் பெற்றுள்ளன. நாவலர் சுட்டிக்காட்டிய குறைபாடுகள் இன்றும் எமது சமயத்தில் காணப்படுகின்றன. அக்காலத்தில் நாவலரால் சீர்திருத்தப்பட்ட சமய அம்சங்கள் பலவும் மீளவும் சீர்கேடு அடைந்துள்ளன. இன்றுவரை அந்தணர்களது சமய அறிவிலோ, சமய பொருளாதார வாழ்விலோ முன்னேற்றம் காணப்படவில்லை. ஆகமம் சார்ந்த கோயில்கள் அவற்றுக்குரிய இலக்கணங்களிலிருந்து பிறழ்ந்து செயற்படுகின்றன. மேலும் சில கோயில்கள் ஆன்மீகத்தை வளப்படுத்துவனவாகச் செயற்படவில்லை. கோயில் களின் நிர்வாகப் பிணக்குகள் நீதிமன்றம் வரை சென்றுள்ளமை உண்மையான இந்துவைக் கவலைகொள்ளச் செய்கின்றன. பொதுப்பட்ட சமய வளர்ச்சிக்கு இந்துக்களின் பொருளாதார உதவிகள் குறைவாகக் கிடைப்பதனால் சமயச்சார்பான நிறுவனங்கள் பொருளாதார நெருக்கடி களுக்குள்ளாகி வருவதும் கவனத்திற் கொள்ளத்தக்கது. மேலும் இக்காலத்தில் நிலவும் அரசியல் பொருளாதார சமய நெருக்கடிகளைப் பயன்படுத்தி பிறமதமாற்றங்களும் முனைப்புப் பெற்றுள்ளன. இதனைத் தடுப்பதற்குரிய முயற்சிகள் இந்து அபிமானிகளால் மேற்கொள்ளப்படா திருக்கின்றன.

எனவே நாவலர் காலத்தில் அவரால் மேற்கொள்ளப்பட்ட சமய நடவடிக்கைகள் பலவும் இக்காலத்தில் மீண்டும் முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டியனவாயுள்ளன. நாவலர் வழியிற் செல்வதோடு சமயப்பற்றுடனும் ஒற்றுமையுடனும் இந்துசமயத்தைப் பலப்படுத்த வேண்டியது இந்துக்கள் ஒவ்வொருவரதும் கடனாகும்.

**உசாத்துணை**


1) கைலாசபிள்ளை.த - ஆறுமுகநாவலர் பிரபந்தத் திரட்டு
2) கைலாசபிள்ளை.த. - ஆறுமுகநாவலர் சரித்திரம்
3) கனகரத்தின உபாத்தியாயர்.வே. - நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சரித்திரம்
4) ஆறுமுக நாவலர் நூற்றாண்டு விழா மலர் 1979
5) நாவலர் பெருமான் 50வது ஜயந்திவிழா மலர்
6) தனஞ்செயராசசிங்கம்.எஸ் - நாவலர் பணிகள்
7) ஆறுமுகநாவலர் சைவதூஷண பரிகாரம்
8) உதயதாரகை (தமிழ் வெளியீடு)
9) Morning Star ( ஆங்கில வெளியீடு)
10) இராமலிங்கம் மு. - நாவலரின் இந்தியப் பயணங்கள்.


**(முற்றும்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# திருமுறை

சிவஞானச் செல்வர்கள் இறைவனைத் தங்கள் உணர்வில் கண்டு இன்புற்று, இறைவழிபட்டு, தம்வயமிழந்து, பாடியருளிய பாடல்களே திருமுறைகளாகும். இறைவனே இவற்றைப் பாடுவித்தார் எனவும் அடியெடுத்துக் கொடுத்தாரெனவும் உள்நின்று கருவாய் உருக்கொடுத்தாரென்றும் எண்ணப்படுகின்றது. தோத்திரங்கள் உயிரின் மேன்மைக்கு உதவுவன. திருமுறைகள் ஓதுவோர் இருமைப்பயனையும் அடையவல்லவர்களாவர். எமது ஆணவத்தின் வலிமையை ஒடுக்கி வினையறுத்து நமக்கு நல்வாழ்வைத் தருவன. நம்பினோரைக் காத்து நிற்பன. வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு வழிகாட்டுவன இவை. காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்க ஓதுவாரை உயர்நெறிக்கு அழைத்துச் செல்லும் அருமருந்தாகும். இதனாலேயே இவர்களை வினைகளும் சேரா; வருத்தங்கள் சாரா; நல்வினைகள் தளரா; என ஆன்றோர் எடுத்துரைப்பர். சிவபெருமான் சமய குரவராகிய சற்குரு மூர்த்தம் கொண்டு அருளிச்செய்ததே திருமுறைகளாகும். இத்திருமுறை தமிழ்வேதமெனவும் வழங்கப்படுகின்றது. திருமுறை இறைவனின் மந்திரரூபம் ஆதலால் புனிதமான ஓரிடத்தில் வைத்துப் பேணுதல் இன்றியமையாதது.

# திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பம் என்பது உலகத்தில் வெளிப்புறத்தில் நடு இடமாகிய சிதம்பரத்தைக் குறிப்பிடுவதுபோல உடம்பின் உட்புறத்தில் நடுஇடமாகிய இதயத்தையும் அதனோடு தொடர்புடைய நடு நாடியையும் குறிப்பிடுகின்றது. எனவே "திருச்சிற்றம்பலம் " என்று உணர்ந்து சொல்லும்போது இதயம் நடு நாடி. அதன்வழியே மூளையாகிய இடங்களுக்குப்போய் செழுமை பெறுகின்றது. அதன் பயனாக நன்கு பாடவும் பாடியதை மேன்மேலும் உணரவும் முடிகிறது. எனவே திருச்சிற்றம்பலம் என்று சொல்லி உணர்ச்சியை ஒருமுகப்படுத்திக் கொண்டும் செழுமை ஆக்கிக் கொண்டும் பதிகத்தைத் தொடங்க வேண்டும்.

"திருச்சிற்றம்பலம் திருமுறைகளைப் பேணிப் பாதுகாத்துத் தந்த திவ்விய சன்னிதி ஆதலாலும் முயற்சி இன்றியே மனம் ஒடுங்குமிடம் ஆதலாலும் திருச்சிற்றம்பலம் எனத் திருமுறை பாராயணம் முதலிலும் முடிவிலும் கூறும் முறை பேணப்படுகின்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துதர்மம்
## 2002 தை - சித்திரை

### கட்டுரை ஆசிரியர்கள்

| | |
|---|---|
| **பேராசிரியர் அ.சண்முகதாஸ்** | உயர் பட்டப்படிப்புக்கள் பீடாதிபதி<br>யாழ்.பல்கலைக்கழகம். |
| **பேராசிரியர் வி.சிவசாமி** | சம்ஸ்கிருதப் பேராசிரியர்<br>யாழ்.பல்கலைக்கழகம். |
| **பிரம்மஸ்ரீ ச.பத்மநாபன்** | விரிவுரையாளர் - சம்ஸ்கிருதத்துறை<br>யாழ்.பல்கலைக்கழகம். |
| **திரு.சி.சக்திகிரீவன்** | கௌரவ செயலாளர்<br>இந்துசமயப் பேரவை |
| **திரு.சி.மு.தம்பிராசா B.A** | ஓய்வு பெற்ற ஆசிரியர்<br>வியாபாரிமூலை, பருத்தித்துறை. |
| **திரு.வ.கோவிந்தபிள்ளை** | ஓய்வு பெற்ற உதவிப் பதிவாளர்<br>கந்தர்மடம், யாழ்ப்பாணம். |
| **திருமதி சாந்தினி அருளானந்தம்** | விரிவுரையாளர் - வரலாற்றுத்துறை<br>யாழ்.பல்கலைக்கழகம். |

**கட்டுரைகளில் தெரிவிக்கப்படும் கருத்துக்களுக்குக் கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாவர். கட்டுரை ஆசிரியர் சுட்டும் கருத்துக்கள் இந்து தர்மத்து ஆசிரியரின் கருத்தாக அமையாது. இந்து தர்மம் தொடர்பாக வாசகர்களின் ஆக்க பூர்வமான கருத்துக்கள், கட்டுரைகள், ஆக்கங்கள் வரவேற் கப்படுகின்றன.**

முகவரி :- ஆசிரியர் , இந்துதர்மம்
35/1 குமாரசாமி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்துசமயப் பேரறிஞர்களுக்கு
## ஓர் அன்பான வேண்டுகோள்

எமது சமய தத்துவ உண்மைகளை, பெருமைகளை உள்ளடக்கி நிற்கும் தங்களின் தரமான ஆக்கங்களை அன்புடன் வரவேற்கின்றோம்.

**தலைமைக் காரியாலயம் :-**
**144, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**

### கிடைக்கும் இடங்கள்

இந்துசமயப் பேரவைத் தலைமைக் காரியாலயம் , கந்தர்மடம்
ஸ்ரீலங்கா புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
கைதடி சைவச்சிறுவர் இல்லம், ஏழாலை மேற்கு, ஏழாலை.

இச்சஞ்சிகை யாழ்ப்பாணம் இந்துதர்ம ஆசிரியர்
பேராசிரியர் நா. ஞானகுமாரனால் பிள்ளையார் அச்சகத்தில் அச்சிடப்பெற்று
2002 சித்திரைத்திங்கள் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org